# செல்வம் செழித்து சுபீட்சத்தை கொடுத்திடும் நவராத்திரி



உலகில் அசையாப்பொருள் பரம்பொருள் என்றும் அசைவுடையச் செயல் சக்தி என்றும் கூறப்படுகிறது சக்தி வழிபாட்டுகுரிய விரதங்களில் வெள்ளிக்கிழமை விரதம், பெளர்ணமி விரதம், நவராத்திரி விரதம் என்பன மிகவும் முக்கியமானவை. சிவனை வழிபடத் தகுந்த ஓர் இராத்திரி சிவராத்திரி. சக்தியை வழிபடத் தகுந்த ஒன்பது இராத்திரி நவராத்திரி. நவம் என்பது ஒன்பது. நவராத்திரி என்பது விரமிருந்து வீட்டில் பத்து நாட்கள் கொண்டாடப்படுகிறது. இதனால் இந்த விழா வீடு என்ற கோயிலுக்கு ஒரு'பிரம்மோற்சவம்' என்றும் கூறப்படுகிறது. அம்பாளுக்குரிய பண்டிகைகள் எவ்வளவோ இருந்தாலும், அவற்றுள் முக்கியமானது ஒன்பது நாட்கள் கொண்டாடப்படும் மிகச் சிறப்பு வாய்ந்த நவராத்திரி விழா சுபராத்திரி என சபீட்சத்தைக் கொடுக்கிறது.

**சாரதா நவராத்திரி:** ஆண்டிற்கு நான்கு நவராத்திரிகள் உண்டு . சக்தியைச் சித்திரை மாதத்தில் வழிபடுவது வசந்த நவராத்திரி எனப்படும். ஆஷாட நவராத்திரி ஆடி மாதத்தில் வரும் நவராத்திரியாகும். புரட்டாசி மாதத்தில் வழிபடுவது பாத்ரபத நவராத்திரி அல்லது சாரதா நவராத்திரி எனப்படும். புரட்டாசி மாதம் அமாவாசை அடுத்த நாள் வரும் நவராத்திரியை எல்லோரும் கொண்டாடுகிறார்கள். புரட்டாசி மாதத்தின் வளர் பிறையில் பிரதமை திதியில் ஆரம்பித்து ஒன்பது திதியுடன் பத்தாவது திதியான தசமி திதியடன் நிறைவுபெறுகிறது

**நவராத்திரி விழா:** நவராத்திரி விழா இரவு நேரத்தில் தான் பூஜை செய்யப்படும். இந்த பூஜை தேவர்கள் செய்யப்படுவதாக கருதப்பட்டு இரவில் நாவராத்திரியை வழிபடுவார்கள். புரட்டாசி மாதத்தில் சரத்காலம் என்று கூறுவர்.இந்த சரத்காலத்தில் வரும் நவராத்திரியை சாரதா நவராத்திரி சிறப்பாக கொண்டாடுவார்கள். இந்த ஒன்பது நாட்களுடன் ஒரு நாளைச் கூடுதலாகச் சேர்த்து தசராவாகக் கொண்டாடப்படுகிறது. மைசூரிலுள்ள சாமுண்டேஸ்வரி அம்பிகைக்கு தசராவிழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது. வங்காளத்தில் துர்க்கா பூஜை என்ற பெயரோடு கொண்டாடுகிறார்கள்.



நவராத்திரி வழிபாடு பெண்களுக்கே உரியது. எல்லா வயதுடைய, பருவத்தைச் சார்ந்த பெண்கள் நவராத்திரி வழிபாட்டில் ஈடுபடலாம்.

உ
இராமாநந்தம் குருநாதா சரணம்

ஆன்மிகம் தழைத்தோங்கும் ஆல விருட்சம்

# திருவருள் சக்தி

(ஆன்மிகம் - ஜோதிடம் - மருத்துவ மாத இதழ்)

**அக்டோபர் – 2015**

ஸ்ரீ சக்தி : 10 அருள் : 6

**ஆசிரியர் குழுமம்**

ஆசிரியர், வெளியிடுபவர்
சித்தர் அடிமை **ஸ்ரீ சி. இராஜு**

கௌரவ ஆசிரியர்
பண்டிட். **காழியூர் நாராயணன்**

இணை ஆசிரியர்கள்
T.V.**கிருஷ்ணமூர்த்தி**
**சித்தர் ஞானகுரு**

துணை ஆசிரியர்கள்
ஸ்ரீ ஸ்கந்த உபாசகர்
P.D. **ஜெகதீஸ்வரன்**
புலிப்பாணி **மு.இளங்கோ**
**தெய்வீகன் மாரிமுத்து**

சிறப்பு ஆசிரியர்கள்
**பா. சுசீந்திரநாத்**
**சி. சிதம்பரம்**

தலைமை நிர்வாகி
**M.S. கிருஷ்ணா**
★ ★ ★
அலுவலக நிர்வாகம்
**வனிதா வெங்கட்**

இந்த இதழில் வெளியாகும் கட்டுரைகளின் கருத்துக்கள் அனைத்தும், கட்டுரையாளர்களின் கருத்துகளாகும், கட்டுரைகளைத் திருத்த, சுருக்க, தள்ளுபடி செய்ய ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு

அனைத்துத் தொடர்புகளுக்கும்
**அப்ஸரா பப்ளிகேஷன்ஸ்**
நெ.18/67, பிரசன்ன விநாயகர் கோவில் முதல் தெரு, புதுப்பேட்டை, இராயப்பேட்டை, சென்னை – 600 014.
Ph. : **044 2811 6770**
E mail : apsarapublications@gmail.com
**www.apsaraepublications.com**

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு **திருவருள் சக்தி** நிர்வாகம் பொறுப்பல்ல.

**Owned - Published by C. Raju at 18, (New No.67), P.V. Koil Ist Street, Pudupet, Royapettah, Chennai 600 014 and Printed by Mrs. R. Radha at Apsara Art Printers, 18, (New No.67), P.V.Koil Ist Street, Pudupet, Royapettah, Chennai 600 014.**
**Editor : Siddhar Adimai Sri C. Raaju**

அட்டையில்
நவராத்திரி நாயகி
**ஸ்ரீ துர்கா தேவி**




நவராத்திரி வழிபாட்டால் பெண் குழந்தைகள் பெறுவது மகிழ்ச்சியின் பலன். கன்னிகள் பெறுவது திருமணப் பலன். சுமங்கலிகள் பெறுவது மாங்கல்யப் பலன். மூத்த சுமங்கலிகள் பெறுவது மனமகிழ்ச்சி, மன நிறைவு; எல்லோரும் பெறுவது பரிபூரண திருப்தி. நவராத்திரியில் கன்னி வழிபாடு என்பது நவராத்திரியின் போது ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கன்னியை ஒவ்வொரு தேவியாக பாவனை செய்து வழிபடுவது ஒரு முறை. இதனால், நவராத்திரி வழிபாட்டில் மிகப்பல கன்னியர்களும், அவர்களின் குடும்பத்தாரும் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இவ்வாறு வழிபாட்டில் பலர் பங்கேற்பது என்பது நவராத்திரியின் விழாவின் குறிக்கோள்களில் சிறப்பான ஒன்றாகும்.

**கொலுவைத்து கொண்டாட்டம்:** நவராத்திரியின் சிறப்பு அம்சம் கொலு வைப்பதேயாகும். கொலு என்பது பல படிகளைக் கொண்ட மேடையில் பல வித பொம்மைகளை நேர்த்தியாக அலங்கரித்து வைப்பதே. ஐம் பூதங்களில் ஒன்றான மண்ணினால் செய்யப்பட்ட பொம்மைகளை சக்தியின் அம்சங்களாக எண்ணி நவராத்திரியில் பூசிப்பவர்களுக்கு சகல நலங்களையும் தருவேன் என்று அம்பிகையே கூறியிருக்கின்றாள்.

ஆன்மிக அர்த்தங்களுக்குள் நுழைந்து அதன் ஆதாரங்களைத் தேடாமல், புராணக் கதைகளுடன் அதை முடிச்சுப் போடாமல், வெறும் பொம்மை விளையாட்டாகவே கற்பித்துக் கொண்டாலும் கூடப் பரவாயில்லை. பொம்மைகள் குழந்தைகளுக்கு மட்டும்தான் பிடிக்க வேண்டுமென்பதில்லை. பெரியவர்களுக்கும் பிடிக்கும்.

ஆதி சங்கரரின் அன்புக்கு இலக்காகிய ஸ்ரீ மூகாம்பிகையும், ஸ்ரீ இராமானுஜரின் பாசத்திற்கு வசப்பட்ட இராமப்ரியனாகிய மேல்கோட்டை சம்பத்குமாரனும், சத்குரு ஸ்ரீ இராகவேந்திரரை வசப்படுத்திய ஸ்ரீ மூலராமரும், ஸ்ரீ ஆண்டாள் சூடிக்கொடுத்த மாலையை இன்றும்கூட சூடிக்களிக்கின்ற ஸ்ரீ வேங்கடாசலபதியும், நாயன்மார்களும் இன்னும் பலரும் பாடிப்பரவிய தில்லை நடராஜரும் கூட அர்ச்சாவதார மூர்த்திகளாய் விளங்கும் ஆன்மிக பொம்மைகள்தாம்.

இன்று திருமலையில் மட்டுமின்றி, தேசம் முழுவதும் பல்வேறு நகரங்களில் நடைபெறுகின்ற ஸ்ரீ ஸ்ரீநிவாஸர் திருக்கல்யாணமும் கூட பக்தர்களின் மனம் கவரும் ஓர் உயர்தர ஆன்மிக பொம்மை விளையாட்டுத்தான்.

திருக்கோயில்களில் பிரம்மோத்ஸவ காலங்களில் பல்வேறு பெரிய பொம்மைகளாகிய வாகனங்களிலும், பல்லக்குகளிலும், சிவிகைகளிலும், தேர்களிலும் தெய்வங்களின் பஞ்சலோக உருவத்தை அமர்த்தி, அலங்கரித்து, வீதிவலம் செய்வித்து, அத்திருக்காட்சியை பக்தர்கள் வணங்கிப் பரவசம் அடைவதும் கூட ஓர் உன்னதமான பொம்மை விளையாட்டுத்தான்.

குழந்தைகள் சிறுவயதில் விளையாடும் பொம்மை விளையாட்டுதான், பெரியவர்களான பின்பு, திருக்கோயில்களில் வருடம் முழுவதும் திருவிழாக்களாகவும், வீடுகளில் வருடத்தில் ஒன்பது நாள் நவராத்திரி பொம்மைக் கொலுவாகவும் பரிணமித்திருக்கிறது

உ
மகா குரு சரணம்

# மகிழ்வித்து மகிழ் தெய்வீக மையம்

( உங்கள் தனிப்பட்ட எந்த ஒரு பிரச்சனைகளுக்கும் முழுமையான தீர்வு உண்டு )

மகிழ்வித்து மகிழ்
Web : mahilvithumahil.com

No.7, லைட் ஹவுஸ் காம்ப்ளக்ஸ்,
லிட்டில் பிளவர் ஸ்கூல் எதிரில்,
4 ரோடு, சேலம் – 636 009.

No. 3-A, சன்னிதானம்,
P. 54 விஷாகா அபார்ட்மெண்ட்,
6th- அவன்யூ, அண்ணா நகர், சென்னை–40.



**Cell : 98427-10545, 93677-10545, பெங்களூர் : 90350-10545**

சொர்ணாகர்சன சித்தர், பாம்பாட்டி சித்தர், போகர் வழி நடத்தும் பிரபஞ்ச சித்தர் குருஜி ஐயா, **S. ராஜகுமார்**

**"அரிது அரிது ஜோதிடராய் ஆவது அரிது - அதனிலும் அறிது நல்ல குரு அமைவது அரிது"**
**"வாருங்கள் குரு-சிஷ்யர் உன்னத பந்தந்திற்கு"**

## ஸ்ரீ ந்ருத்ரா யட்சினி தேவதை உபாசனை ( வாக்கு கூற )

இக்கலையை திரிகால சக்தியை முற்றிலும் உணர்ந்த ஞானிகள், யோகிகள், மகான்கள் போன்றவர்கள் கிரகித்து வைத்திருக்கும் அபூர்வ சக்தி யட்சினி சக்தி. அப்படிப்பட்ட யட்சினி சக்தியானது பிரபஞ்ச சித்தரின் சித்தியாலும், சூட்சும ப்ரயோக முறைகளாலும் சைவ முறை பூஜை மேற்கொண்டு இந்த ஸ்ரீ ந்ருத்ரா யட்சினி சக்தியை பெற்றுக் கொள்ள முடியும். பல ஜோதிடர்கள், நாம் சென்று உட்கார்ந்த உடன் எதற்காக வந்திருக்கின்றோம் என மிக துல்லியமாக கூறுவது நமக்கு ஆச்சர்யமாக இருக்கும். நமக்கு ஏற்படும் எதிர்கால நிகழ்வுகளை நாமே அறிந்து கொள்ளவும் உங்களால் முடியும். நடக்க போவதை முன்கூட்டியே அறியவும், ஒருவர் செய்திருக்கும் மாந்ரீக கோளாறுகளை நாமே அறியவும் பயன்படும் ஒரு அரிய கலை. பொதுவாக இச்சக்தியை வாக்கு கூறுவதற்கும், ஜோதிடர்கள் ஜோதிட துறைக்கு வரவேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்கள். ஆண்கள் மற்றும் பெண்கள் கற்றுக் கொள்ளக்கூடிய ஒரு உன்னதமான கலை. எந்தவித பயமும் இல்லாமல், குடும்பத்தில் இருந்து கொண்டு கற்றிடும் ஒரு அபூர்வ கலை ஆகும். இதற்கு எந்தவித கட்டுப்பாடுகளும் இல்லை. இறை சக்தியை உணர வேண்டும் என்ற ஆர்வம் இருந்தால் போதும்.

வாருங்கள், வித்தியாசமான அனுபவத்தை தீட்சையில் பெற்றிட, அபூர்வமான சக்தியை நீங்கள் பெற்றிட...

**இன்னும் என்ன யோசனை? வாழ்வில் முன்னேறுவதற்கு?**

**பல ஜோதிடர்களை மாந்தீரிகர்களை உருவாக்கிய பயிற்சி**

| | |
|---|---|
| பயிற்சி நாள் | **: 10.10.2015 சனிக்கிழமை** |
| இடம் | **: சேலம்.** |
| நேரம் | **: காலை 9.30 மணி முதல்** |
| சேவைக் கட்டணம் | **: ரூ. 7700/-** |

இதுவரை யாரும் அறிந்திடாத...

## சூட்சும உயர் சக்திகள்

ஒரு குறிப்பிட்ட வம்சாவளியில் இரகசியமாக கையாண்டு வந்த, உலகின் அதி சூட்சும இரகசியங்கள் தற்பொழுது பயிற்சி வடிவில்...

இக்கலையை தாங்கள் கற்பதன் மூலம் உங்களை கண்ட எதிரிகளும் விலகி ஓடுவர். வெளிநாடு செல்ல முயற்சி செய்தும் பலமுறை தோல்வி கண்டவர்கள், வெளிநாடு செல்லும் கனவை நனவாக்கும் பயிற்சி முறை. வாழ்வில் எல்லாம் இருந்தும் மன அமைதி இல்லையா? அதற்கு முற்றுப்புள்ளி வைக்கவும், பணத்தினால் வாழ்வில் ஏற்படும் பலவித இன்னல்களை போக்கி, இழந்த பொருட்களை மீண்டும் பெறுவதற்கும், வாழ்வில் பல சறுக்கல்களை கண்ட நீங்கள் மற்றவர்கள் முன் தலைநிமிர்ந்து நின்றிடவும், ஜாதகத்தில் ஏற்படும் சகல தோஷங்களை பரிகாரம் இல்லாமல் உயர் சக்திகள் மூலம் தீர்த்திடவும், படிப்பில் மந்தமான நிலை, ஞாபக சக்தி குறைவான நிலை, தேர்வில் தோல்வி மேல் தோல்வி என இருப்பவர்களை வெற்றி படிக்கட்டில் ஏற்றிவிடும் ஒரு கலை. திருமண தடை விலகி ஓடிடும். மாந்ரீகத்தில் ஏற்பட்ட பாதிப்புகள், வாஸ்து கோளாறினால் ஏற்பட்ட பாதிப்புகள், இப்படி நீங்கள் வாழ்வில் முன்னேற எது தடையாக உள்ளதோ அதனை தவிடுபொடியாக்கி வாழ்வில் உயர இப்பயிற்சி வழிவகுக்கும்.

இனிப்பு என்றால் சுவை தெரியாது, சுவைத்து பார்த்தால் மட்டுமே சுவை தெரியும். பார்த்துக்கொண்டே இருந்தால் பலன் தெரியாது. கற்றுக் கொள்ளுங்கள். பிறகு நீங்களே பரிகாரம் சொல்வீர்கள் மற்றவர்களுக்கு.

**வாருங்கள்...**
**இன்னும் நிறைய கற்பதற்கு**

**ஆண்கள், பெண்கள் கற்றிடும் சைவ முறை பூஜை**

| | |
|---|---|
| பயிற்சி நாள் | **: 11.10.2015 ஞாயிற்றுக்கிழமை** |
| இடம் | **: சேலம்.** |
| நேரம் | **: காலை 9.30 மணி முதல்** |
| சேவைக் கட்டணம் | **: ரூ. 5700/-** |

Card Accepted
MasterCard
VISA

**இக்கலையை கற்க பிராப்தம் உள்ளவர்களுக்கே இது கண்ணில்படும்.**

உங்கள் பொன்னான நேரத்தை செலவு செய்து தேவையில்லாத கேள்விகளை கேட்காதீர்கள். வாழ்வில் முன்னேற ஆர்வமுள்ளவர்கள் பயிற்சியில் கலந்து கொள்ளவும்.

**சென்னையில் பயிற்சி : நாள் : 14.10.2015 புதன்கிழமை, நேரம் : காலை 9.30 மணி**
**கோவையில் பயிற்சி : நாள் : 21.10.2015 புதன்கிழமை, நேரம் : காலை 9.30 மணி**
**பெங்களூரில் பயிற்சி : நாள் : 28.10.2015 புதன்கிழமை, நேரம் : காலை 9.30 மணி**

**தனிப்பட்ட முறையில் VIP களுக்கு பயிற்சி அளிக்கப்படும். முன் அனுமதி பெற்று கற்கலாம்.**

**தனிப்பட்ட பிரச்சனைகளுக்கும் பிரபஞ்ச சித்தரை முன் அனுமதியோடு சந்திக்கலாம்.**

**வாருங்கள்... வித்தியாசமான சக்தியை உணர்ந்து பாருங்கள்... நீங்களே பிரமிப்பீர்கள்...**

**நல்லதிற்கு மட்டும் வாருங்கள், வாழ்வில் அனைத்தும் நல்லதாக மாறுவதை உணர்வீர்கள்**

**தோல்விக்கு சவால் விடு, முடிந்தால் என்னை தோற்கடி என்று...! - குருஜி ஐயா.**

**பிரதி மாதம் சென்னை : 5, 15, 25. பெங்களூர் : 16, மலேசியா, சிங்கப்பூர் (Appointment Only)**

அவரவர் வசதிக்கேற்ப, கொலுவைக் காண வருபவர்களுக்குத் தாம்பூலத்துடன் ஏதாவது சிறு பரிசுப்பொருளை வழங்குவதும், குழந்தைகளுக்கு சுண்டல் அல்லது இனிப்புகளை வழங்கி அவர்களை முகம் மலர வைப்பதும், திருமணங்களைத் தவிர்த்து, நவராத்திரி நாட்களில் மட்டுமே சாத்தியம்.

**நவசக்திகளுக்கான வழிபாடு:** புரட்டாசி மாத வளர்பிறைப் பிரதமையில் தொடங்கி விஜயதசமியில் நவராத்திரி முடிகிறது. முதல் ஒன்பது நாட்களில் முப்பெரும் தேவியரை வழிபடவேண்டும்.முதல் மூன்று நாட்கள் துர்க்கையின் வழிபாடு. நடுவில் உள்ள மூன்று நாட்கள் இலட்சுமி வழிபாடு. கடைசி மூன்று நாட்கள் சரஸ்வதி வழிபாடு. முப்பெரும் சக்திகளில், ஒவ்வொரு சக்திக்கும் மும்மூன்று அம்சங்கள் உள்ளன. **துர்க்கை:** 1. மகேசுவரி, 2. கௌமாரி , 3. வராகி. **இலட்சுமி:** 4. மகாலெட்சுமி 5. வைஷ்ணவி 6. இந்திராணி. **சரஸ்வதி :** 7. சரஸ்வதி 8. நாரசிம்மி , 9. சாமுண்டி. நவராத்திரியின் போது இந்த ஒன்பது தேவியர்களையும் முறையாக வழிபடுகிறோம். ஒரு தேவியை முதன்மையாகவும், மற்றவர்களைப் பரிவார தெய்வங்களாகவும் கொள்ளவேண்டும்.

**வீரம் தரும் துர்க்கை:** துர்க்கையானவள் வீரத்தின் தெய்வம். வீரர்களின் தொடக்கத்திலும், முடிவிலும் வழிப்படும் தெய்வம் இவள் நெருப்பின் அழகுடன் ஆவேசப் பார்வை கொண்டவள் சிவபிரியையான துர்க்கை இச்சா சக்தி. "கொற்றவை " என்றும் "காளி" என்றும் குறிப்பிடுவர். வன துர்க்கை, சூலினி துர்க்கை, ஜாதவே தோதுர்க்கை, ஜ்வாலா துர்க்கை, சாந்தி துர்க்கை, சபரி துர்க்கை, தீப் துர்க்கை, சூரி துர்க்கை, இலவண துர்க்கை இவர்கள் துர்க்கையின் அம்சங்கள்.

**செல்வம் தரும் இலட்சுமி:** இலட்சுமி தேவி செல்வத்தின் தெய்வம். மலரின் மென்மையுடன் அருள் பார்வையுடன் அழகாக விளங்குகிறாள். இவள் விஷ்ணுப் பிரியை, கிரியா சக்தி. இலட்சுமி அமுதத்துடன் தோன்றியவள். அமுத மயமானவள். பொன்னிற மேனியுடன் கமலாசனத்தில் வீற்றிருக்கிறாள். இவளை நான்கு யானைகள் எப்போதும் நீராட்டுகிறது. முக்கியமாக, இவள் செல்வ வளம் தந்து வறுமையை அகற்றி அருள் புரிபவள். இவளுக்குத் தனிக் கோயில் இருக்குமிடம் திருப்பதியிலுள்ள திருச்சானூர். அஷ்ட இலட்சுமியாக அருள் பாலிக்கிறாள் ஆதி இலட்சுமி, மகா இலட்சுமி, தன இலட்சுமி, தானிய இலட்சுமி, சந்தான இலட்சுமி, வீர இலட்சுமி, விஜய இலட்சுமி , கஜ இலட்சுமி . இவர்கள் இலட்சுமியின் அம்சங்கள்.

**சகல வித்தை தரும் சரஸ்வதி:** சரஸ்வதி தேவி கல்வியின் தெய்வம். இவள் அமைதிப் பார்வையுடன் வைரத்தின் அழகுடன் அழகாகப் பிரகாசிக்கிறாள். பிரம்பிரியை. ஞான சக்தி. நவராத்திரியின் ஆறாவது, ஏழாவது நாளில் மூல நட்சத்திரம் உச்சமாக இருக்கும்போது, சரஸ்வதியை ஆவாகனம் செய்வது முறையாகும். இது தேவியின் அவதார நாள். சரஸ்வதி பூஜை சிரவணம் என்ற நட்சத்திரம் உச்சமாகும் நாளில் நிறைவு பெறுகிறது. ஆயுதபூஜையாகவும் கொண்டாடுகின்றனர். சமுதாயத்தில் தொழில், புலமை என்ற இரண்டே பிரிவுகளில் அடங்குகிறது. ஒன்று புலமை ஞானம், இரண்டு தொழில் ஞானம். புலமை பெறுவதும் ஒரு தொழில்தான், இது ஞானத்துடன் தொடர்புடையது. எனவே, ஞானத்தின் தெய்வமான சரஸ்வதியைப் பூஜிப்பது சரஸ்வதி பூஜை. சரஸ்வதி தேவியும் வாகீஸ்வரி, சித்ரேஸ்வரி, துளஜா, கீர்த்தீஸ்வரி, அந்தரிட்ச சரஸ்வதி, கடசரஸ்வதி, நீலசரஸ்வதி, கினி சரஸ்வதி என அஷ்ட சரஸ்வதியாக போற்றப்படுகிறாள்

**விஜயதசமி:** நவராத்திரியின் எட்டாம் நாளை மகா அஷ்டமி அதாவது துர்க்காஷ்டமி என்றும், ஒன்பதாம் நாளை மகா நவமி என்றும் குறிப்பிடுவது வழக்கம். இவை மேலான நாட்களாகும். ஒன்பது நாட்கள் மகிஷாசுரனுடன் போரிட்ட தேவி , பத்தாம் நாள் அவனை அம்பெய்து வதம் செய்தாள். இந்நாளே விஜயதசமி — வெற்றி தருகிற நாள். பல குழந்தைகள் கல்வியினை இன்றுதான் ஆரம்பிப்பார்கள். இன்று தொடங்கும் அனைத்து நற்காரியங்களும் வெற்றி தரும் என்பது நம்பிக்கை. வால்மீகி இராமாயணத்தில் புரட்டாசியில் வரும் தசமி (விஜய தசமி) அன்று இராமன், இராவணனுடன் போர் செய்ய உகந்த நாள் என்று அன்று போருக்கு புறப்பட்டதாக இருக்கிறது. பத்தாவது நாளான விஜய தசமி அன்று புதிய கல்வி கற்பதைத் தொடங்குவார்கள். பாண்டவர்கள் அஞ்ஞானவாசம் முடிந்து அர்ச்சுனன்தான் ஓர் ஆண்டு காலமாக கட்டி வைத்திருந்த ஆயுதங்களை எல்லாம் விஜய தசமி அன்று மீண்டும் எடுத்து உயிர்ப்பித்துகொண்டான்.

இதுபோன்று ஒன்பது நாளும் விரமிருந்து அன்னையை ஆராதித்து வழிபடும் கன்னிப் பெண்களுக்கு திருமணம் கூடிவந்து குடும்பத்து அன்பும் ஒற்றுமையும் உண்டாகி, இல்லத்தில் செல்வம் சேரும். மஹாசக்தி அருளால் மங்களம் பொங்கும். நினைத்தது நிறைவேறும். அனைவர் வாழ்விலும் மங்களம் பெருகட்டும். நவராத்திரி நன்மைகள் யாவும் நல்கிடும் சுபராத்திரி. அதுவே ஒவ்வொருவர் வாழ்விலும் உயர்ந்த நிலையில் உயர்த்திடும் உன்னத சுபாராத்திரி

சித்தர் அடிமை **ஸ்ரீ சி.இராஜு**

**Cell : 97104 21880**



# கர்ம பரிகார வகுப்பு

## (கர்ம வினைகளை அகற்றி வெற்றி தரும்)



1. பிரம்ம முகூர்த்த வழிபாடு. 2. அபிஜின் முகூர்த்த வழிபாடு. 3. அஸ்தங்க முகூர்த்த வழிபாடு.4. ஒருவருடைய ஜாதகத்தில் பிதுர் தோஷம், லக்ன சூரிய தோஷம், பிரமகத்தி தோஷம், விஷகன்னிக தோஷம், திருடா கர்ம தோஷம், பகை பெற்றசூரிய திசை, ராகு திசை, லக்னத்தில் அல்லது ராசியில் இருந்து சூரியன் 3,6,8,12ல் மறைந்தால் செய்ய வேண்டிய வழிபாட்டு முறை, சாதாரண பரிகார பூஜை, விஷேச பரிகார பூஜை, பெரிய பரிகார பூஜை, தந்திர சாஸ்திர மூல மந்திரம். 5.சந்திர பகவான் நீசம் பெற்று சந்திர தோஷம், மாதுர் தோஷம், அஸ்தங்க தோஷம், கிரக யுத்தம், பகை பெற்றசந்திர திசை, லக்னத்திற்கு ராசிக்கும் 3,6,8,12ல் சந்திரன் மறைந்தாலும், ராசிக்கு சனிப்பார்வை இருந்தாலும், செய்ய வேண்டிய வழிபாட்டு முறைசாதாரண பரிகார பூஜை, விஷேச பரிகார பூஜை முறை, பெரிய பரிகார பூஜை முறை, தந்திர சாஸ்திர மூல மந்திரம். 6.ஜாதகத்தில் செவ்வாய் நீசம் பெற்று, அஸ்தங்க தோஷம், கிரக தோஷம், செவ்வாய், மிதுனம், கன்னி ராசியில் இருந்து செவ்வாய் தோஷம் ஏற்பட்டு, பகை பெற்றசெவ்வாய் திசை நடப்பு இருந்தால் லக்னத்திற்கும், ராசிக்கும் செவ்வாய் 3,6,8,12ல் மறைவு பெற்றால் செய்ய வேண்டிய பரிகார முறை, சாதாரண பரிகார பூஜை முறை, விஷேச பரிகார பூஜை முறை, பெரிய பரிகார பூஜை முறை, தந்திர சாஸ்திர மூல மந்திரம். 7. புதன் நீசம் பெற்று, புதன் கேந்திர தோஷம் பெற்றால் லக்னத்திற்கும், ராசிக்கும் புதன் 3,6,8,12ல் மறைவு பெற்றால் செய்ய வேண்டிய பரிகார முறை, சாதாரண பரிகார பூஜை முறை. விஷேச பரிகார பூஜை முறை, பெரிய பரிகார பூஜை முறை, தந்திர சாஸ்திர மூல மந்திரம். 8. குரு நீசம் புத்திர தோஷம், அஸ்தங்க தோஷம், அடைந்து, கிரக யுத்தம் ஏற்பட்டு, கேந்திர தோஷம் அடைந்து, ரிஷபம், துலாம் ராசியில் அமர்ந்து, லக்னத்திற்கு அல்லது ராசிக்கு 3.6.8.12ல் மறைந்தால் பகை பெற்றகுருதிசை நடப்பு இருந்தால், ஆபத்தான துர் ஆவிகள் தொல்லை இருந்தால் செய்ய வேண்டிய பரிகார முறைசாதாரண பரிகார பூஜை முறை, விஷேச பரிகார பூஜை முறை, பெரிய பரிகார பூஜை முறை, தந்திர சாஸ்திர மூல மந்திரம். 9. சுக்கிரன் நீசம் பெற்று களத்திர தோஷம், அஸ்தங்க தோஷம், கிரக யுத்தம், கேந்திர தோஷம் அடைந்து பகை பெற்றசுக்கிர திசை நடப்பு, லக்னத்திற்கு அல்லது ராசிக்கு 3,6,8,12 ல் மறைந்தால் செய்ய வேண்டிய பரிகார முறை, சாதாரண பரிகார பூஜை முறை, விஷேச பரிகார பூஜை முறை, பெரிய பரிகார பூஜை முறை, தந்திர சாஸ்திர மூல மந்திரம். 10. சனிஸ்வர பகவான் நீசம் பெற்று லக்னத்திற்கு அல்லது ராசிக்கு 3,6,8,12ல் இருந்தால் அல்லது 19 வருட சனிதிசை நடப்பில் இருந்தால் செய்ய வேண்டிய பரிகார முறைசாதாரண பரிகார பூஜை முறை, விஷேச பரிகார பூஜை முறை, பெரிய பரிகார பூஜை முறை, தந்திர சாஸ்திர மூல மந்திரம். 11.ராகு அல்லது கேது 2 அல்லது 8ல் உடையவர்கள், பிரேத சாபம், மாங்கல்ய தோஷம் உடையவர்கள், ராகு திசை, கேது திசை நடப்பில் உள்ளவர்கள் செய்ய வேண்டிய பரிகார முறைசாதாரண பரிகார பூஜை முறை, விஷேச பரிகார பூஜை முறை, பெரிய பரிகார பூஜை முறை, தந்திர சாஸ்திர மூல மந்திரம். 12. சர்ப தோஷம் நீக்கக் கூடிய சிறு விளக்க முறை.13. பிதுர் தோஷம், பிரேத சாபம், குல தெய்வ சாபம் நீங்க கூடிய முறை. 14. கடன் பிரச்சனையிருந்து வெளி வருவதற்கான முறை. 15. விதியை வெல்லக்கூடிய 10விதமான வழிபாட்டு முறைகள். 16. பாலரிஸ்ட தோஷம், துர் தேவதைகள் உபத்திரவங்கள் நீக்க, புத்திர தோஷம் நீங்க, சிறு நீரகக் கல் நீங்க, பட்சி தோஷம், குரி தோஷம் நீங்க செய்யும் பரிகார முறை. 17. இறப்பு திதிக்கு செய்யும் சாதாரண பூஜை, விஷேச பரிகார பூஜை முறை, பெரிய பரிகார பூஜை முறை, தந்திர சாஸ்திர மூல மந்திரம். 18. அனைத்து அதிர்ஷ்டங்களையும் தரும் சவ்பாக்கியங்களை தரும் அஞ்சனம் தயாரிக்கும் முறைஅதற்கான மந்திரம். 19. சார லக்னம், ஸ்திர லக்னம், உபய லக்னம், செய்ய வேண்டிய நவகிரக பரிகார நிதியும், தீபமும். 20. ஆபத்தான கடன் சுமை தீர சுபசுமபரிகார முறை. 21. 27 நட்சத்திரங்களுக்குரிய தலங்கள். 22. நவக்கிரக தீபம் தயாரிக்கும் முறை23. ஸ்வர்ண பைரவர் மந்திரம், பைரவ தேவி. இந்திர தேவி, சண்ட பைரவர், கௌமாரி, வராகி, அஸிதங்க பைரவர், பிரம்னி தேவி, குரு பைரவர், மகேஸ்வரி தேவி, குரோதன பைரவர், வைஸ்ணவி தேவி, சம் கார பைரவர், சண்டி தேவி, பீஷன பைரவர், சாமுண்டி தேவி மந்திரங்கள்.

பயிற்சியாளர்: K.S.G. **முனீஸ்வரன் பிள்ளை** அவர்கள்.

மதிய உணவு, 70 பக்க பயிற்சி கையேடு, 6"X6" கோல்ட் பிளேட்டிங் செய்யப்பட்டு கண்ணாடி ப்ரேம் செய்த சக்தி வாய்ந்த யந்திரம் வழங்கப்படும். கட்டணம்: 2,500-

| சென்னை | திண்டுக்கல் | திருச்சி |
| --- | --- | --- |
| தேதி: 18.10.2015<br>இடம்: ஆஷாநிவாஸ்,ரட்லண்ட் கேட், 5வது.தெரு, நுங்கம்பாக்கம். | தேதி: 13.10.2015<br>இடம்: சர்வ சாஸ்திர வித்யாபீடம், நாதன் காம்ப்ளக்ஸ், ஸ்கீம் ரோடு. | தேதி: 11.10.2015<br>இடம்: ஹோட்டல் அருண். |

தொடர்புக்கு: 8903551587,9842140131 .Pandit M.G.P

# தீமைகளை நீக்கி நன்மைகள் நல்கிடும்


# தீப எண்ணெய்




இராஜ தர்ஷினி

செல்: 94447 96305


அதர்வண வேதத்தில் எதிரியை உறவாடி கெடுக்கும் சூழ்ச்சி நிறைய உண்டு. இதனை தந்திரமாக எதிரிக்கு தெரியாமல் செய்து, செய்வித்து எதிரியை அழிப்பார்கள். மூலிகை, யந்திரம், மந்திரம், எண்ணெய் இவைகளில் ஒன்றுக்கொன்று எதிர்ப்பாக இருப்பதை தெரிந்தெடுத்து அதனை விரோதிக்கு கொடுத்து உபயோகிக்கச் செய்து கெடுபலன்களை செய்வார்கள். அதாவது ஒன்றுக்கொன்று எதிரான நரசிம்ம மந்திர யந்திர பூஜையையும், சிவ பெருமானுக்குரிய மந்திர யந்திர பூஜையையும் பூஜை அறையினில் ஒன்றாக செய்யும் போது பூஜிப்பவர்க்கு கெட்ட பலன்கள் ஏற்படும். சிவன் கோயிலுக்கு சென்று பூஜித்தபின் நரசிம்மர் கோயிலுக்கு சென்றால் பூஜிப்பவர்க்கு கெடு பலன்கள் ஏற்படும். பெரும்பாலும் இவை ஆன்மீக டூர்களில் நடைபெறும். அதேபோன்று பித்ருக்கள் ஆசி ஆதரவுடன் வீடு அமைந்து விட்டால் அந்த வீட்டில் எப்படியாவது சிறியா நங்கை, பெரிய நங்கை, செடிகளை வளரச் செய்து பித்ருக்களை நகரச் செய்து விடுவார்கள். அதேபோன்று அனைத்து ஆன்மீக பக்தர்களும் கூடு எண்ணெய், கலப்பு எண்ணெய் போன்றவற்றை பயன்படுத்தச் செய்து கெடு பலன்களை வரவழைத்துக் கொடுக்கிறார்கள்.



தேங்காய் எண்ணெய் கணபதிக்கு உரியது. இலுப்பை எண்ணெய் ருத்ர தேவதைகளுக்கு உரியது. நல்லெண்ணெய் நாராயணனுக்கு உரியது. நெய் தீபம் மகாலஷ்மிக்கு உரியது. விளக்கெண்ணெய் குல தெய்வத்திற்கு உகந்தது. எந்த காரணத்தை முன்னிட்டும் வேப்ப எண்ணெய் விளக்கினை வீட்டினில் ஏற்றக் கூடாது. உக்ர தேவதை தெய்வங்களுக்கு மட்டும் வேப்ப எண்ணெய் தீபம் போட வேண்டும். ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒவ்வொரு தனித்துவம் உண்டு. அதனை கட்டாயம் உணர்ந்து அதற்கேற்றாற்போன்று பூஜிக்க வேண்டும். ஆனால் எண்ணெய்களை கலந்து ஏற்றக்கூடாது. கலந்து ஏற்றிய கலப்பு எண்ணெய் தீபம் எதிர்மறையான பலன்களை ஏற்படுத்தும். அசுப நிகழ்ச்சிகளை ஏற்படுத்த தந்திரமாக ஏற்படுத்த கையாண்ட முறைதான் கலப்பு எண்ணெய் தீபம். வேப்பெண்ணையை கலந்து வீட்டினில் தீப மேற்றினால் கெட்ட பலன்கள் உடனடியாக ஏற்படும். பஞ்ச எண்ணெய் தீபம் ஏற்ற வேண்டும். என்று தெய்வத்திற்கு சொல்லப்பட்டால் ஐந்து அகல் விளக்கினில் தனித்தனியாக ஐந்து வகையான எண்ணெய்கள் ஊற்றி தனித்தனியாக தீபம் போட வேண்டும். ஒரு அகலில் ஏற்றிய தீபத்தினின்று இன்னொரு அகலுக்கு தீபம் ஏற்றக் கூடாது. ஒவ்வொரு எண்ணெய் கொண்டு எரிகின்ற தீபத்தின் சக்தி மாறுபட்டு அமைந்திருக்கும். தனித்தனியாக தீபம் ஏற்றி வழிபட்டால் உங்களின் பிரச்சனைகள் தீரும் இந்த முறை பிரச்சனைகளுக்கான தீர்வுகளுக்கு மட்டுமே. சாதாரணமாக ஏற்றக் கூடாது.

கலப்பு எண்ணெய் தீபமானது ஏற்றியவர்களின் குடும்பத்தில் திருமண தடைகளை ஏற்படுத்தும். முறை தவறிய விவாகங்கள் உண்டாக்கும். குழந்தை பேறை தடை செய்யும். குழந்தைகளுக்கு மூர்க்க குணத்தை ஏற்படுத்தும். திடீர் அறுவை சிகிச்சை திடீர் களவு போதல் போன்றவற்றை ஏற்படுத்தும்

எப்போதுமே கலப்பு எண்ணெய் தீபமானது எதிர் மறையான பலன்களை ஏற்படுத்தி கொடுக்கும். கலப்பு எண்ணெய் தீபம் ஏற்றக் கூடாது. எண்ணெய்களை தனித்தனியாக தீபம் போட்டு பூஜை செய்யுங்கள்.

இப்பொழுது கோவில்களில் கற்பூர ஆராதனை தடை செய்யப்பட்டு வருகின்றது. அதற்கு காரணம் கற்பூரத்தில் பாரபின் மெழுகு கலக்கப்பட்டு எதிர்மறை பலன்களை தேடிக் கொடுக்கின்றது. அதற்கு பதிலாக ஐந்து ரூபாய் கொடுத்தால் நெய் தீபம் கொடுக்கப்படுகின்றது. ஆனால் அந்த நெய்தீபத்தினில் பாரபின் மெழுகு கலக்கப்பட்டு வருவது ஆன்மீக பக்தர்களுக்கு தெரிவதில்லை. நெய் என்றால் சுத்தமான பசும்பாலினின்று பெறப்பட்டதாக இருக்க வேண்டும். அவ்வாறு கிடைத்தால் மட்டுமே நெய்தீபம் போட வேண்டும். கலப்பு நெய்தீபத்தை கட்டாயம் போடக்கூடாது. கடைகளில் விற்கப்படும் நெய்யினில் எருமாட்டு நெய்யினை கலந்து விடுகின்றார்கள். அதனால் எரியப்படும் நெய் தீபத்தினால் கெட்ட பலன்களே ஏற்படுகின்றது.

சாதாரணமாக கடைகளில் விற்கப்படும் எண்ணெய்களில் தவிட்டு எண்ணெய் கலக்கப்படுகின்றது. இதனை ஏற்றுவதால் எந்தவொரு பலனும் ஏற்படாது. எதிர் மறை பலன்கள் ஏற்பட வாய்ப்புண்டு. பூஜைகளில் சரியான எண்ணெய் உபயோகப்படுத்தினால் மட்டுமே சரியான பலன்கள் உங்களை தேடி வரும்.

இதற்கு சரியான பரிகாரம் என்னவெனில் எண்ணெய்களை செக்கில் இட்டு ஆடி வரும் எண்ணெய்யாக பார்த்து வாங்கி வர வேண்டும். அதனால் மட்டுமே முழுமையான பலன்கள் ஏற்படும்.

இலுப்பை எண்ணெய் மட்டுமே கலப்பு இல்லாமல் மார்க்கெட்டில் வருவதாக உண்மையாகப்படுகின்றது. மற்றவைகளை ஒப்பிட்டு பார்க்கும்போது இலுப்பை எண்ணெய் உபயோகிக்கலாம். சிவனையும் அதன் வகையறா தெய்வங்களையும் பூஜிக்க உபயோகப்படுத்தலாம். ஆனால் மகாவிஷ்ணு வகையரா தெய்வங்களை பூஜிக்க செக்கிலிருந்து பெறப்படும் நல்லெண்ணெய் அல்லது ஒரிஜினல் பசுநெய் மட்டுமே உபயோகப்படுத்த வேண்டும். ஆலயங்களின் வெளிப்புறம் விற்கப்படும் நெய்தீபம் ஏற்றப்படுவதால் நீங்கள் மட்டுமல்ல, கோயிலின் பூஜையும் பாதிக்கப்படும். மற்றும் கலப்பெண்ணெய் உபயோகபடுத்துவதை தவிர்த்திடுங்கள். ●


ஸ்ரீ காமாட்சி அம்மன் துணை

**ஆதரவற்றபெண்கள் முதியோர்களுக்கு அன்னதானம் செய்ய தங்களை அன்புடன் அழைக்கின்றோம்**

அன்புடையீர் வணக்கம், அருள்மிகு ஸ்ரீ பத்மாவதி தாயார் ஸ்ரீ வெங்கடேச பெருமாள் மாங்காடு ஸ்ரீ காமாட்சி அம்மன் அருளால் தங்களுக்கும் தங்கள் குடும்பத்தினருக்கும் அனைத்து நலன்களையும் தந்தருள பிரார்த்திக்கின்றோம். ஸ்ரீ பத்மாவதி தாயார் ஸ்ரீ வெங்கடேச பெருமாள் ஸ்ரீ காமாட்சி அம்மன் அருளால் நமது ஸ்ரீ பத்மாவதி அம்மா முதியோர் இல்லம் ஆதரவற்றமுதியோர்கள், விதவை பெண்கள், கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கும், காக்கும் உயர்ந்த தெய்வீக தொண்டினை எந்தவித பிரதிப்பலன் எதிர்பாராது கருணை அடிப்படையில் செய்து வருகிறது. **“கருணை கொண்ட நெஞ்சம் அது கடவுள் வாழும் இல்லம்”** என்றகவிஞரின் சொல்லுக்கேற்ப எங்களுடன் தங்களும் சேர்ந்து ஆதரவற்றோர்களுக்கு அன்னதானம் செய்து தங்கள் பிரதிப்பலனை அடையுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். தினந்தோறும் நடைபெறும் அன்னதானத்திற்கும் தங்களின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்களின் பிறந்தநாள், திருமணநாள், புத்தாண்டு, தீபாவளி, பொங்கல், அமாவாசை, பௌர்ணமி, மற்றும் முக்கிய பண்டிகை தினங்களிலும் தங்கள் முன்னோர்களின் நினைவு தினங்களிலும் அன்னதானம் செய்யும்படி தங்களை அன்புடன் அழைக்கின்றோம். தாங்கள் அனுப்பும் நன்கொடையை தொகையாகவும், பொருளாகவும் இருந்தாலும் ஏற்றுக்கொள்ளகிறோம். நன்கொடை அனுப்பும் அன்பர்களுக்கு மாங்காடு ஸ்ரீ காமாட்சி அம்மன் பிரசாதமும், தங்கள் பூஜை அறையில் வைத்து பூஜித்து அருள்பெறஸ்ரீ காமாட்சி அம்மன் படம் அனுப்பி வைக்கின்றோம், தாங்கள் அனுப்பும் நன்கொடைத்தொகைக்கு ஏற்றவாறு சென்னையிருந்து வெளிவரும் இதழ்களில் தாங்கள் விரும்பிய இதழ்களின் பெயரை தெரிவித்தால் அந்த இதழ்களும் ஸ்ரீ காமாட்சி அம்மன் விளக்கும் ஸ்ரீ பத்மாவதி தாயார் ஸ்ரீ வெங்கடேச பெருமாள் வெள்ளி காசும் அனுப்பி வைக்கின்றோம்.

நமது இல்லத்திற்கு தற்போது இடம் குறைவாக உள்ளதால் புதிதாக உதவிகேட்டு வரும் அனைவருக்கும் உதவி செய்ய முடியவில்லை என்பதால் கருணை உள்ளம் கொண்ட தாங்கள் கட்டிடம் கட்டுவதற்கு தங்களால் முடிந்த தொகையினை கட்டிட நிதியை அனுப்பி வைத்து உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். தாங்கள் அனுப்பும் நன்கொடையை நெட்பேங்கிங் மூலமாக அனுப்புவதற்கு Sri Padmavathi Amma Aged Home Current A/c. No. 05760400009955 Bank of Baroda, Mangadu, Chennai-600122. NEFT IFSC Code : BARBOMANGAD. MICR Code : 600012026. மற்றும் Cheque / D.D. / M.O. மூலமாகவும் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

(நன்கொடைகளுக்கு 80G **பிரிவின்படி வருமான வரிவிலக்கு உண்டு.)**

**ஸ்ரீ பத்மாவதி அம்மா முதியோர் இல்லம்**




Public Charitable Trust (Regd)

எண்.3, புங்கவனம்மாள் அவின்யூ, வடக்கு ரகுநாதபுரம் மெயின்ரோடு, மாங்காடு, சென்னை - 600122.
தமிழ்நாடு, இந்தியா.Phone No. : 044-65129170, Cell : 09282234541

E-mail : padmavathyoldagehome@gmail.com www. padmavathi amma aged home.com




சேவை மனப்பான்மையுடன் இல்லத்தில் தங்கி நடக்க முடியாத முதியோர்களை கவனித்துக் கொள்ளும் வேலைக்கு பெண்கள் மற்றும் ஆண்கள் தேவை

# கோடீஸ்வரனாக்கும் குபேர இரகசியங்கள்



ஜோதிடரத்னா
**S.தனபாலன்** MA, D,Co.Op, DA.
**செல்: 95003 93813.**

இன்று, நாட்டில் எல்லோருக்கும் தலையாய பிரச்சனை, கடன் பிரச்சினை தான். அதை தீர்ப்பதற்கு, பணம் தேவை. ஏனெனில், பணம் தான் ஒரு மனிதனுக்கு ஆதாரம். அடிப்படை தேவைகள் மட்டுமின்றி, அத்தியாவசிய தேவைகளையும், ஆடம்பர தேவைகளையும் பூர்த்தி செய்ய, நமக்கெல்லாம் தேவைப்படுவது பணம் தான்.

**"இல்லாரை எல்லாரும் எள்ளுவர்**
**செல்வரை எல்லாரும் செய்வர் சிறப்பு"**
**பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்**
**பொருளல்லதில்லை பொருள்"**

என்பது திருக்குறள். அதாவது பொருள் இல்லாதவரை (வேறு நன்மை உடையராக இருந்தாலும்) எல்லாரும் இகழ்வர். செல்வரை (வேறு நன்மை இல்லாவிட்டாலும்) எல்லோரும் செய்வர் சிறப்பு.

ஒரு பொருளாக மதிக்கத்தகாதவரையும், மதிப்புடையவராகச் செய்வது, பொருள் அல்லாமல் சிறப்புடைய பொருள் வேறு இல்லை என்பது அர்த்தமாகும்.

**நாம் செல்வச் செழிப்புடன் வாழ சில எளிய வழிமுறைகளைக் காண்போம்.**

உத்திரட்டாதி நட்சத்திரம் ஓர் உன்னதமான சுப நட்சத்திரம் ஆகும். குரு வீட்டு சனி நட்சத்திரமாகிய உத்திரட்டாதி நட்சத்திரத்தின் அதிதேவதை காமதேனு, உத்திரட்டாதி நட்சத்திரம் வரும் நாளில் கடவுளிடம் வேண்டுதல் வைத்தால், நிச்சயமாக நடைபெறும். பணவரவு, திருமணம் என என்ன கேட்டாலும் கிடைக்கும்.

வீட்டின் வாசலை பார்த்தவாறு, ஏழுமலையான் படம் வைப்பது, மிகவும் சிறப்பு.

செவ்வாய் — வெள்ளி, 5 முகம் கொண்ட குத்துவிளக்கு ஏற்றி திருமகளை வழிபட்டு வருவது நன்று. தாம்பூலம் தரிப்பது, பெருத்த யோகத்தைக் கொடுக்கும். எந்த தேதியில் பிறந்தோமோ, அந்த தேதிக்குரிய நட்பு நாட்களில் வெற்றிலை போட்டு ஒரு காரியம் செய்தால், வெற்றிதான்.

காலையில் எழுந்தவுடன் வலது உள்ளங்கையை தான் முதலில் பார்க்க வேண்டும். குளித்த பின்பு, முதுகைத்தான் முதலில் துடைக்க வேண்டும். பின்புதான் முகத்தைத் துடைக்க வேண்டும். குளித்தவுடன் துவட்டும்போது முதலில் மூதேவி தான் உடலில் இடம் பிடிப்பாள். பின்தான் இலட்சுமி வருவாள்.

தாமரைப் பூவில் அமர்ந்து, குடத்திலிருந்து தங்க காசுகள் கொட்டும், மஹாலட்சுமி படத்தை பர்ஸ், ஹேண்ட் பேக்கில் வைத்திருந்தால் வருமானம் பெருகும்.

ஆபிரகாம் லிங்கனின் படத்தைப் பாக்கெட்டில் வைத்திருந்தால், பண வருமானம் குறையாது.

அஸ்த நட்சத்திரம் வரும் நாளில், விரதமிருந்து காலை உணவாக பால், பழம் சாப்பிட வேண்டும். மதியம் கொண்டைக்கடலையால் செய்யப்பட்ட பதார்த்தத்தை உட்கொள்ள வேண்டும். மாலை 6 மணிக்குள்ளாக நவக்கிரக குருபகவானுக்கு 3 நெய் தீபம் ஏற்றி வணங்கி வர வேண்டும். இரவு வாழை இலையில், கொண்டைக்கடலை கலந்த உணவை சாப்பிட்டு, விரதத்தை முடிக்க வேண்டும். இதன்மூலம் செல்வ வலிமை ஏற்படும்.

இரவில் தயிர் சேர்த்து கொள்ளக்கூடாது. அது விஷ்ணுவானாலும் சரி, அவரை விட்டு இலட்சுமி கடாக்ஷம் காணாமல் போய்விடும்.

வெண்மை சம்பந்தப்பட்ட பொருள் எதுவும் தானமாக கொடுக்கக்கூடாது. யோகம் போய்விடும். (உப்பு, பால்,தயிர், வெள்ளைத்துணி உள்பட) சாப்பிடும் போது, இடதுகை எப்போதும் வட்டிலைத் தொட்டுக் கொண்டு தான் இருக்க வேண்டும். வட்டிலை, தட்டு என்று சொல்லக் கூடாது. அது தட்டுப்பாட்டுக்கு உரிய சொல்.

எந்தவொரு பிரச்சினையும் தீர, சனிக்கிழமையில்

கோவிலுக்குச் சென்று கடவுளை வழிபட்டு ஒரிஜினல் பிராமணர்க்கு இரண்டு வெற்றிலை, பாக்கு + தட்சணையாக ரூ.11, 21 அல்லது ரூ.51 கொடுக்க வேண்டும். பெருத்த யோகத்தை கொடுக்கும்.

திருவாதிரை நட்சத்திரம் வருகிற நாள் அன்று, கால பைரவர்க்கு அருகம்புல் மாலை சாற்றி 2 நல்லெண்ணெய் தீபம் ஏற்றி, என்ன கோரிக்கை வைத்தாலும் காலபைரவர் அதை நிறைவேற்றுவார்.

பணத்தைப் பிறரிடம் வழங்கும் போது, தலைப்பகுதியை நம் பக்கம் வைத்தபடி வழங்கி பிரியாவிடை தரவும். காலை 4.30 மணிக்கு, கோவில் திறக்கும்போது முதல் தெய்வ தரிசனம் (நிர்மானிய தரிசனம்) நாம் பார்த்தால் தெய்வ கடாட்சம் கிட்டும்)

வீட்டில் ஒரு நெய் தீபம் ஏற்றினால் 1000 தீபம் ஏற்றியதற்கு சமமாகும். (நெய் ஒரிஜினல் நெய்யாக இருக்க வேண்டும்) மாலை 6 மணிக்கு மேல் தீபம் ஏற்றும் போது, மறுநாள் காலை 6 மணிவரை தீபம் எரிய வேண்டும். கிளியாஞ்சட்டி நல்லது. தீபம் அணையாமல் இருப்பதற்கு கண்ணாடி குடுவை ஒன்றை அதன் மேல் மூடி வைக்கவும். கண்டிப்பாக யோகசக்தியை கொடுக்கும்.

குலதெய்வ வழிபாடு மிகவும் சிறப்பு. குலதெய்வத்தை அமாவாசையில் வழிபட்டு வந்தால் நல்லது. குலதெய்வ கோவிலுக்கு செல்ல முடியாதவர்கள். வீட்டினுள் குலதெய்வத்தின் படத்தை வைத்து அல்லது நினைத்து, தேங்காயை இரண்டாக உடைத்து நெய்தீபம் ஏற்ற வேண்டும். (விடிய, விடிய) மார்கழி அமாவாசை, மிகவும் சிறந்தது. அமாவாசை அன்று ஒரு காரியம் செய்தால் 100% வெற்றியைக் கொடுக்கும்.

எந்தவொரு பிரச்சினையும் தீர, காலையில் உணவுடன், உளுந்த வடை சாப்பிட்டு வந்தால் பிரச்சினை பொறி மாதிரி பறந்துவிடும்.


தூய்மையற்ற இடத்திற்குள், திருமகள் நுழைய மாட்டாள். வீடு.. அலுவலகம்... கல்லாப்பெட்டி... பணப்பை... எனச் செல்வம் புழங்க வேண்டிய இடங்களை எப்போதும் தூய்மையாக வைத்துப் பராமரிக்கவும்.

வணிகத்தை, தொழிலை, அலுவலகப் பணியை மனமலர்ச்சியுடன் விளையாட்டாகச் செய்ய வேண்டும். சிரிப்பவர்களைப் பார்த்தே செல்வ இலட்சுமி வருகிறாள். சிடுமூஞ்சிகளையும் அழுமூஞ்சிகளையும் பார்த்து, மூதேவி தான் விரும்பி வருகிறாள். சிரித்து வாழுங்கள் சிரிப்பவர்களுடன் சேர்ந்து வாழுங்கள்.

மனம் தரும் பணம் போன்ற பொன்மொழிகளை உணர்ந்து முதலில் மனத்தைப் பணக்கார மனமாக மாற்றுங்கள் வெகு சீக்கிரம் வெளியில் பணக்காரன் ஆகி விடுவீர்கள். ●


# பாப, தோஷ சாபநிவர்த்திக்கு உடனடி தீர்வு பலன் அளித்திடும் பரிகார மூலிகை இரக்ஷை

வாசகர்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்பு ஏற்றம் பெறும் வகையில், கர்ம பலன்களைக் நல்ல மாற்றம் தரும் நிலையில், விதியை மதியால் வெல்லக்கூடிய சூட்சும இரகசியங்களை "தமிழ் புத்தாண்டு" மற்றும் "ஆங்கிலப் புத்தாண்டு" "குருப்பெயர்ச்சி" ஆகிய பலன்களில் வெளியிடப்பட்ட ஸ்ரீ ஸ்கந்த ஜீவநாடி மூலம் அந்தந்த இராசியினருக்கு ஜீவநாடியில் சொல்லப்பட்ட பரிகார மூலிகை இரக்ஷை முன்பதிவு செய்பவர்களுக்கு குறுகிய கால இடைவெளியில் கிடைக்கும்.



ஒரு மண்டலம் பூஜை செய்யப்பட்டு உருவேற்றி, உயிரோட்டத்துடன் வழங்கப்படுகிறது. "அப்ஸரா பப்ளிகேஷன்ஸ்" நிறுவனத்தின் ஆதரவுடன் அனுபவம் வாய்ந்தோரால் வழங்கப்படுவதால் 100% பலன் கிடைக்கும் என்பது உறுதி. ஜீவநாடிப் பரிகாரங்களைக் கடைபிடித்து பலன் பெற்றோர் ஏராளம். இந்த இரக்ஷை சகலவிதமான பாப, தோஷ, சாபநிவர்த்திக்கும், உடனடி பலனுக்கும், இரக்ஷையுடன் "தமிழ் புத்தாண்டு" மற்றும் "ஆங்கிலப் புத்தாண்டு" "குரு பெயர்ச்சி"யில் வெளிவந்துள்ள ஜீவநாடி ஆலய பரிகாரங்களையும் கண்டிப்பாக தொடர்ந்து கடைபிடித்தால் வாழ்வில் மாற்றம் காண்பது உறுதி. சந்திரன் நின்ற இராசியை உறுதி செய்துக் கொள்வது அவசியமாகும். குறைந்த அளவிலே ஜீவநாடி பரிகார யந்திர இரக்ஷைகள் செய்யப்பட்டுள்ளதால் பாக்கியம் செய்தோர்க்கே கிடைக்கும் பிராப்தம் ஏற்படும். இதுவரை பதிவு செய்தவர்களுக்கு தொடர்ந்து வரிசைப்படி அனுப்பப்பட்டு வருகிறது

**தொடர்பு கொள்க 9444541239**

குருவின் அருளுடன் குறைவில்லாத நிறைவைத் தரும்

# ஆன்மிக சூட்சும இரகசியங்கள்




புலிப்பாணி **மு.இளங்கோ**

செல்: 98943 85933


**26**

## தரித்திரம் நீக்கி குபேர ஸம்பத்துக்களை வாரி வழங்கும் ஸ்வர்ணாகர்ஷண பைரவர்

சிறப்பான பொலிவு உடையதும், எல்லா நேரங்களிலும் மதிப்பு உடையதும், சிறந்த புகழினை உடையதும், எந்த சூழ்நிலையிலும் தன்னுடைய குணத்தை இழக்காததும் காலத்திற்கு ஏற்ப அனுசரித்துப் போகக் கூடியதுமான தத்துவங்களை தான் ஸ்வர்ணம் என்று அழைக்கப்படுகிறது. கனகம் என்று நாம் அழைக்கும் தங்கம் இத்தகைய குணங்களை பெற்றிருப்பதால் அதற்கு ஸ்வர்ணம் என்று பெயர். இத்தகைய குணங்களை எந்த ஜீவன் பெற்றிருக்கிறதோ அதையும் நாம் தங்கம் என்று அழைக்கிறோம்.

1. ஒரு ஜாதகன் எப்படிப்பட்ட துன்பங்களினால் பாதிப்பு அடைந்தாலும் தன்னுடைய சிறந்த குணத்தை எப்பொழுதும் இழக்காதவனாக இருக்க வேண்டும்.

2. ஒரு ஜாதகன் உலக இன்பங்களுக்காக பல விதமான குணமாற்றங்களை ஏற்படுத்தி கொண்டாலும், நடைமுறை வாழ்க்கையில் தாமரை இலைமேல் தண்ணீர் போல பாபங்களை சேர்க்காது புண்ணியவானாய் வாழ வேண்டும்.

3. அதுபோல ஒரு ஜாதகன் தன்னுடைய புண்ணிய குணத்தை உயர்வு, தாழ்வு இல்லாமல், பேத ரூபங்களை எண்ணாமல் செயல்படுபவராக இருக்க வேண்டும்.

இத்தகைய உயரிய குணங்களைதான் ஸ்வர்ணம் என்று அழைக்கிறோம். இப்படிப்பட்ட அருங்குணங்களை ஸ்வர்ண ஆகர்ஷண பைரவர் என்ற இறைவன் தன்னை வணங்கும் உலக உயிர்களுக்கு சிறப்பாக வழங்குகின்றார். ஸ்வர்ண ஆகர்ஷண பைரவரின் அருளால் தான் சித்தர்களும் ரிஷிகளும் இரும்பு மற்றும் செம்புவை தங்கமாக மாற்றும் இரசவாத வித்தைகளை தெரிந்து வைத்திருந்தனர்.

ஸ்வர்ணம் என்பது உலோகமாக இருந்தாலும் அதன் பெருமைகளை தெரிந்த மனிதனை தவிர மற்ற உலக உயிர்கள் ஏறெடுத்தும் பார்ப்பது இல்லை. ஆனால் ஸ்வர்ண மயமான உயரிய குணங்களை எல்லா உயிர்களும் விரும்பி ஏற்கின்றன. ஆகவே ஸ்வர்ணம் என்ற உலோகத்தை விட ஸ்வர்ணமயமான நற்பண்புகளே சிறப்புக்குரியது ஆகும்.


இப்பொழுது இங்கு நான் தரக்கூடிய ஸ்வர்ண ஆகர்ஷண பைரவர் மற்றும் பைரவி வழிபாடு என்பது என்னுடைய தன ஆகர்ஷண இரகசியம் என்ற பயிற்சி வகுப்பின் போது சென்னை பயிற்சி வகுப்பில் கற்றுக்கொடுத்த ஒரு சிறிய பகுதியே ஆகும். இதனை முறைப்படி நான், சொல்லி உள்ளவாறு பின்பற்றி வருபவர்களுக்கு கட்டாயம் வாழ்க்கையில் படிபடியாக செல்வம் சேரும். மேன்மைகள் உண்டாகும். இந்த வழிபாட்டின் பெருமையை எனக்கு சொல்லிக் கொடுத்த என் குருநாதர் ஆன்மீக பேரொளி மிஸ்டிக் செல்வம் ஐயா அவர்களையே சாரும். இந்த வழிபாட்டு முறையானது தமிழகத்தில் வேறு எந்த நபர்களாலும், மற்றும் குரு குலத்திலும் சொல்லி கொடுக்கப் பட்டது அல்ல என்பதை தெளிவாகவும் உறுதியுடனும் கூறிக் கொள்கிறேன்.

சொர்ண ஆகர்ஷண பைரவர் மூல மந்திரம்

**ஓம் ஸ்ரீம் க்லீம் ஸ்ரீம் ஓம் நமோ பகவதே ஸ்வர்ண ஆகர்ஷண பைரவாய தனதான்ய விருத்திகராய சீக்கீரம் ஸ்வர்ணம் தேஹிதேஹிவசியம் குரு குரு ஹீம் ஸ்ரீம் க்லீம் ஸ்ரீம் ஹீம்பட் சுவாஹா**

27 தடவை

ஸ்வர்ண ஆகர்ஷண பைரவி மூலமந்திரம்



**ஓம் ஸ்ரீம் க்லீம் ஸ்ரீம் ஸ்வர்ண தாயை நம: ஸ்ரீம் க்லீம் ஸ்ரீம் சுவாஹா** — *108 தடவை*



### வழிபாட்டு முறை

*1. ஒரு செப்பு தகட்டில் உரிய முறைப்படி ஸ்வர்ண ஆகர்ஷண பைரவி எந்திரம் வரைந்து அதற்கு ப்ராண பிரதிஷ்ட்டை கொடுத்து மூலமந்திரத்தை கொண்டு* **108 தடவையாக 30 நாட்கள் உரு ஏற்றி** *வழிபாடு செய்ய வேண்டும். மல்லிகை, சிகப்பு அரளி, மரிக்கொழுந்து, மலர்களால் மட்டுமே அர்ச்சனை செய்ய வேண்டும்.*

*2. பின்பு தாமரை இலை அல்லது பாக்குமர தட்டில் எந்திரத்தை வைத்து அதன் மீது ஏகமுகம் கொண்ட குத்து விளக்கினை வைத்து அந்த விளக்கில் தேங்காய் எண்ணெய், பசும் நெய் கலந்து தீபம் ஏற்ற வேண்டும். இந்த தீபத்தினை நோக்கி அமர்ந்து பட்டு துணியில் அல்லது தர்ப்பைபாயில் அமர்ந்து ஸ்வர்ண பைரவர் மந்திரத்தை 27 தடவை ஜெபம் செய்ய வேண்டும். கூடவே தினசரி ஸ்வர்ண பைரவி மந்திரத்தையும் 108 தடவை ஜெபம் செய்ய வேண்டும்.*

*3. பூஜையை முடித்த பின்பு விளக்கின் சுடர் ஒளியை பார்த்து அதனை ஸ்வர்ண ஆகர்ஷண பைரவராக பாவித்து மனதின் வேண்டுதல்களை செய்ய வேண்டும்.*

*4. விளக்கு மேற்கு திசைபார்த்து எரிய வேண்டும். நாம் கிழக்கு முகம் நோக்கி அமர்ந்து ஜெபம் செய்ய வேண்டும்.*

*5. கூடவே என்னுடைய ஆன்மீக சூட்சம இரகசியங்கள் பாகம் — 1 என்ற நூலில் உள்ள பைரவமாலையை தொடர்ச்சியாக படித்து வரலாம்.*

*6. சந்தனம், ஜவ்வாது உடலில் பூசிக்கொள்ள வேண்டும்.*

*7. தேன், பேரீச்சம் பழம், வெள்ளை பூசணியில் செய்த இனிப்பு, மாதுளைபழம், போன்றவைகளை பைரவருக்கு படையலாகக் கொடுத்து பின்பு வீட்டில் உள்ளவர்கள் சாப்பிட்டு வரலாம்.*

*8. சைவ உணவு வெகுவிரைவில் பலன் தரும்*

*9. புகைபிடித்தல், போதை பொருள் பயன்படுத்துதல், மது அருந்துதல் உடையவர்களுக்கு வழிபாடு செய்வதால் உரிய பலன் கிடைக்காது.*

*10. இந்த வழிபாடு செய்பவர்கள் வளர்பிறை, தேய்பிறையில் அஷ்ட்டமி திதி மற்றும் பௌர்ணமி திதியில் முடிந்த அளவு அன்னதானம் செய்து வர வேண்டும். வாழ்க்கையில் படிப்படியாக முன்னேற்றம் உண்டாகும் இது அனுபவபூர்வமான உண்மையாகும். வாழ்க அறமுடன். வளர்க அருளுடன்*

**தொடரும்...**




**வெள்ளை தழும்புகள்**

எமது சிகிச்சை ஆரம்பித்த 20 மணி நேரத்தில் தழும்பின் நிறம் மாறத் தொடங்கி தோலின் அசல் நிறத்தை அடைந்து விடுகிறது. ஆயிரக்கணக்காணோர் பயனடைந்துள்ளனர். நீங்களும் நோயின் முழு விவரத்தையும் எழுதி ஒரு முறை அவசியம் பரிச்சித்து பார்க்கவும். மருந்து விலை ரூ.510/- பெற விரும்புவோர் உடன் நேரில் வரவும் அல்லது அஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளவும்.

**ரகசிய நோய் மருந்து**

எமது மருந்து உபயோகித்தால் நித்திரையில் ஸ்கலிதம், சிறு நீர். மலம் கழிப்பதற்கு முன். பின் சக்தி வீணாதல், சிறுநீர் சம்பந்த நோய், சீக்கிர ஸ்கலனம், உயிர் அணு குறை, கனோரிய ஸிபிலிஸ் போன்ற நோய் அடியோடு அழிக்கப்பட்டு நிரந்தரமாக குணமாகிவிடும். உடலில் ஒப்பற்ற சக்தி ஓட்டம் பெற்று பாலுணர்ச்சியில் முன்னேற்றம் காணப்படும். ஆயிரக்கணக்கானோர் பயனடைந்ததாகும். பெற விரும்புவோர் நோய் விவரம் வயதுடன் எழுதவும்.

**மருந்து ஒரு கோர்ஸ் விலை ரூ. 625/—** **முழு கோர்ஸ் ரூ. 900/—**

**ஆண்மை குறைபாட்டை போக்கும் அற்புத இயந்திரம் இலவசம் - புத்தம் புதிய கண்டுபிடிப்பு**

திருமணத்திற்கு முன் அல்லது பின் ஏற்பட்ட ஆண்குறி தளர்ச்சி, நரம்பு வீரியமின்மை அல்லது வளர்ச்சியின்மை, மெலிவு, வளைவு, முதலான குறைபாடுகள் இருந்தால் எமது புத்தம் புதிய கண்டுபிடிப்பில் உருவான ஆண்குறி குறைபாட்டை போக்கும் அற்புத இயந்திரத்தின் உபயோகத்தால் எப்பேர்பட்ட எவ்வயதுடையோரின் ஆண்குறி குறைபாடும் நிச்சயம் நிரந்தரமாக குணமடைந்துவிடும். இந்த இயந்திரம் ஒரு மெசின் போன்றதாகும். இதை உபயோகிப்பது மிக மிக எளிதாகும். இதன் உபயோகத்தால் 100% பயன் கிட்டுவது உறுதியாகும். விளம்பரத்திற்காக இந்த இயந்திரம் இலவசம். இன்றே அஞ்சல் மூலமோ அல்லது நேரிலோ தொடர்பு கொண்டு இயந்திரம் பெற்று பயனடைவீர். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**VAIDYAR N.RAMESH NAIDU**
**PAKKAM DHARNAMPET-GUDIYATHAM, (VELLORE) 632601.**
**CELL-9865415652, 9994486669**

# தொட்டது துலங்க, நினைத்தது நிறைவேற
# ஸ்ரீ சக்ர பூஜைப் பலன்கள்



ஜோதிஷ ஞான சிரோன்மணி
"புஷ்கராம்ஸம்"
**கடகம் இராமசாமி**
செல் : 94431 67046

ஸ்ரீ சக்கரம் என்பது ஓர் அட்சரத் தகடு ஆகும். இதனை பூபுர ஸ்ரீ சக்கரம் என்று அழைப்பர். ஸ்ரீ சக்கரப் பூஜை இந்தியா முழுவதும் பரவியுள்ளது.

ஸ்ரீ துர்வாஸ மகரிஷி காலம் முதற்கொண்டே இது பிரபலமாக உள்ளது. ஸ்ரீ ஆதி சங்கரரால் ஸ்ரீ சக்கரப்பூஜை பிரபலப் படுத்தப்பட்டுள்ளது.

ஸ்ரீ சக்கரத்தின் மத்தியில் உள்ள முக்கோணத்தில் உள்ள பிந்து ஸ்தானத்தைச் சுற்றிச் சுற்றி கோணத்துக்கு ஐவராக முக்கோணத்துக்கும் பதினைந்து திதி நித்யா தேவதைகள் உள்ளனர்.

ஸ்ரீ பேருண்டா, ஸ்ரீ வஹ்னிவாசினி, காமேஸ்வரி, ஸ்ரீகமாலினி, ஸ்ரீ நித்யக்லின்னா, ஸ்ரீ மஹாவஜ்ரேஸ்வரி, ஸ்ரீ சிவதூதி, ஸ்ரீத்வரிதா ஸ்ரீகுலசுந்தரி, ஸ்ரீநித்யா, நீலபதகா, விஜயா, சர்வ மங்களா, ஜ்வாலாமாலினி, சித்ரா, மகாநித்யா என பதினாறு தேவதைகள் பூஜிக்கப் படுகின்றனர்.

ஸ்ரீ சக்கரத்தைச் சந்தன பலகை, வேங்கைமரம், கருங்காலி ஸ்படிகம், பச்சைக்கல் இப்படி பலவகைகளில் செய்து பூஜிப்பது சிறப்புடையது. ஸ்ரீ சக்கரத்தில் உயர்சக்தி மிக்க தேவதைகள் சிரத்தையுடன் பூஜிக்கப்படுகின்றனர்.



ஸ்ரீ சக்கரம் ஒன்றிலேயே அனைத்து தேவதைகளையும் ஆவாஹனம் (இறுத்துதல்) செய்து பூஜிக்க முடியும். மற்ற யந்திரங்களுக்கு இச்சக்தி கிடையாது. உக்ரமாக உள்ள தேவதைகளை (தேவதாபிம்பங்களை) ஸ்ரீ சக்கரம் கொண்டு சாந்தப்படுத்த இயலும்.

பாலாதிரிபுரசுந்தரி முதலாக இராஜசியாமளா, வாராகி ஈறாக சௌபாக்ய பஞ்சதசி எனும் மூல மந்திரம் உபதேசம் பெற்றவர்கள் ஸ்ரீ சக்கரப் பூஜைக்கு அருகதை உடையவர்கள் ஆவார்கள்.

ஸ்ரீ சக்கரத்தின் வேறு ஓர் அமைப்பு ஸ்ரீமகாமேரு என அழைக்கப்படும். இலட்சுமியும், சரஸ்வதியும் வெண்சாமரம் வீசிட, ஆயிரம் செல்வ இலட்சுமிகள் பணிவிடை செய்யப் புடைசூழ வீற்றிருப்பவள் இவளே.

ஸ்ரீ சக்கரத்திற்கு ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம், லலிதா திரிசரி, கட்கமாலா எனும் பூஜைகளைச் செய்தால் அளவற்ற செல்வமும் அளப்பறிய ஆற்றலும் ஏற்படும்.

குண்டலினி எனும் சக்தியாக வீற்றிருந்து, விஷ்ணு முடிச்சு, பிரம்ம முடிச்சு, என யோக சக்தியின் ஆறு ஆதாரங்களைக் கடந்து ஆயிரம் இதழ் கொண்ட மகாபத்மம் எனும் சகஸ்ராரத்திலே காமேஸ்வரனுடன் களித்தும், ரமித்தும் இருப்பவள் இவளே. சகல மந்திரங்களின் சொரூபமாகவும் சூட்சும ரூபமாகவும் இவளே இருக்கிறாள்.

ஸ்ரீ ஹயக்ரீவர், அகஸ்தியர், லோபாமுத்திரா, ஸ்ரீ விஷ்ணு குபேரன், நந்தி, காமன் என பல உயர் கடவுளர்களால் ஆராதிக்கப் பட்டவள்.

தாமரைப் பூ, துளசிப்பூ, செங்கழுநீர்ப்பூ, கதம்பம் சம்பகம், ஜாதிமல்லிகை, அலரி, வில்வம், முல்லை, குங்குமபூ போன்ற மலர்களால் ஸ்ரீ சக்கரப் பூஜை செய்தால் பெருஞ்செல்வம் கிட்டும் துர் மரணம் (அபமிருத்யு) தவிர்க்கப்படும். ஜ்வரங்கள் விலகும். தீர்க்க ஆயுள் தரும்.

ஸ்ரீ சக்கரப் பூஜையில் வெண்ணெய் நிவேதனம் செய்து புத்திர சந்தானமற்றவர்களுக்கு கொடுத்திட குழந்தை பாக்கியம் ஏற்படும். எல்லா வளர் செல்வங்களும், உயர் நலங்களும் கிட்டும், ஸ்ரீ சக்கர பூஜையின் விபூதி எல்லா வியாதிகளையும் நீக்கும்.

யாரேனும் ஆபிசார செய்வினைகளை நிகழ்த்தி நம்மை இம்சித்தால், அவர்களை பிரத்யங்கிரா தேவி அழித்து விடுவாள். ஸ்ரீ சக்ர பூஜை ஒன்று இருந்தாலே அனைத்து தோஷங்களையும் நிவர்த்தி செய்ய இயலும் (கிரக தோஷம் முதலாக) மன ஆத்ம சாந்தியும் உண்டாகும்.

ஸ்ரீ சக்ர பூஜைக்கு வாலைக்குமரி (பாலை — பாலா) உபாசனை மிக முக்கியமானது. அதற்குப்பின் சௌபாக்ய பஞ்சதஸி மந்திரம் வழிபடத்தக்கது.

**முக்கிய மந்திரங்கள்.**

பாலா — ஓம் ஐம் க்லீம் ஸௌ — ஸௌ க்லீம் ஐம்
சண்டி — ஓம் ஐம் ஹ்ரீம் க்லீம் சாமுண்டாயை விச்சே
தேவி — ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீம்
ஐம் — க ஏ ஈ லஹ்ரீம்
க்லீம் — ஹஸக ஹல ஹ்ரீம்
ஸௌ — ஸகல ஹ்ரீம்.

இதனை ஸ்ரீ வித்யா உபாசகர்களிடம் உபதேசமாகப் பெற்ற பின்னே (பே) செய்வதற்குத் தகுதி உண்டு. அவ்வாறே செய்து நற்கதி அடையலாம். முதலில் ஸ்ரீ மஹா கணபதியை ஒரு லட்சம் தடவை ஜபித்த பின்பு ஸ்ரீ வித்யா உபாசகர்களை அணுகுவது சாபங்கள் நிவர்த்தியாகும்.

சுபமஸ்து.

நோய் வரும்முன் உணவே மருந்து ! நோய் வந்தபின் மருந்தே உணவு !

எல்லா உயிர்களும் இன்புற்றுஇருக்கவே யாம்ஒன்றும் அறியேன் பராபரமே !

உடற்பிணி அனைத்தையும் உயிர்ப்பிணி அனைத்தையும்
அடர்ப் பறத் தவிர்த்த அருட்சிவ மருந்தே.

# M.S. ஹெர்பல்ஸ்

1 / 31, மாரியம்மன் கோவில் தெரு, கல்பகனூர் – 636 109, ஆத்தூர் Tk., சேலம் Dt. தமிழ்நாடு.

உலகிலேயே முதன்மையான மற்றும் தலைச்சிறந்த மருத்துவம் நமது சித்த மருத்துவம். சித்த மருத்துவத்தில் தலைச்சிறந்த பெரும் மருந்துகளான, **காலாந்தக கௌரி, லோகநாத பதங்கம், நவலோக செந்தூரம், நீலகண்டவாலை, பரிபூரணம், பஞ்சகல்ப செந்தூரம், மார்கண்டேய மெழுகு, இரசகந்தக பஸ்பம், கனகலிங்க கற்பூரமெழுகு** மற்றும் **முப்பு, குரு மருந்துகள்** மேலும் மூலிகைகளின் சத்துகளாகிய உப்புகளை எடுத்து அதை **கட்டு மருந்துகளாக்கி** நோய்களின் தன்மைக்கு ஏற்றவாறு சில நாட்கள், சில வாரங்களில் முழுமையாக குணப்படுத்தப்படும்.

**எமது நிறுவனத்தின் சிறப்பு**

- நாள்பட்ட தோல் நோய்
- சரவங்கிவாதம், மூட்டு, தண்டுவடம்,
- இடுப்பு, கழுத்து வலிகள்
- குழந்தையின்மை, மகளிர் நோய்கள்
- அனைத்து ஆண்மை குறைபாடுகள்
- தீராத ஆஸ்துமா, சைனஸ், அடுக்குதும்மல்
- குடல்புண், சிறுநீரக கோளாறுகள்
- யூரியா, கிரேட்டின் அதிகரிப்பு
- யூரிக்ஆசிட் அதிகரிப்பு
- கண் குறைபாடுகள்
- ஹெப்பாடிடிஸ் B,C,வைரஸ்
- இரத்தக்கொதிப்பு
- வெள்ளைபடுதல், 9 வகையான மூலம்
- வெண்குஷ்டம், வெள்ளை தழும்புகள்
- அனைத்து வகையான புற்றுநோய்
- கொடிய வெட்டையான பாலியல் நோய்
- கருப்பை நீர்கட்டி, சதை கட்டி
- தலைமுடி பிரச்சனைகள்

மற்றும் உள்ள அனைத்து நோய்களுக்கும் குரு பரம்பரை மூலமாக வரும் 100க்கு 100 குணமளிக்கக்கூடிய ஏந்தவித பக்கவிளைவுகள் இல்லாத பெரு மருந்துகளை கொண்டு சில நாட்கள், சில வாரங்களில் குணம் காணலாம்.

**100க்கு 100 குணமளிக்கக்கூடிய குருபரம்பரை மூலமாக பல நூறு ஆண்டுகளாக கையாளப்பட்டு வந்த இம்மருத்துவ முறைகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்து செல்லும் நோக்கில், நேரடி செய்முறை பயிற்சி அளிக்கப்படுகிறது. மருத்துவர்கள் தொடர்பு கொண்டு பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளவும்.**

## சித்த மருத்துவத்தின் இரகசியம்

**பாகம் – 1**

புத்தகம் – கலர் படங்களுடன்,
ஆய்வக சான்றிதழ்களின் எடுத்துகாட்டுடன்,
வீடியோ சிடியுடன் வெளிவர உள்ளது.
மருத்துவர்கள் தொடர்புகொள்ளவும்.

**மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்க :**

சித்தாந்த ரத்தினம்
சன்மார்க்கி, குருபரம்பரை மருத்துவர்

**M. சுகவனேஸ்வரன்,** RAMP., SMP., B.A., D.Y.Ed., D.A.,

**Cell : 94438 53756** email : msherbalcare@gmail.com

# சகல பாக்கியங்களுடன் புண்ணியம் தரும் புரட்டாசி மாதம்



கோட்டையூர்
என். சிவசுப்பிரமணியம்
செல்: 94431 37989 / 95005 96309

புரட்டாசி மாதம் ஸ்ரீமகா விஷ்ணுவுக்கு உகந்த மாதம் இந்த மாதத்தில் மகாவிஷ்ணுவை நினைத்து விரதமிருந்து வழிபட ஏற்ற மாதமாகும்.

பொதுவாக மகாவிஷ்ணுவை சனிக்கிழமையில் வழிபடுவது மிகவும் சிறப்பு ஆகும். அதுவும், புரட்டாசி சனிக்கிழமைகளில் மகாவிஷ்ணுவை வழிப்பட்டால் எல்லாவிதமான கஷ்டங்களும் நீங்கி வளமான வாழ்வு கிட்டும்.

புரட்டாசி சனிக்கிழமைகளில் விரதமிருந்தால் நவக்கிரகங்களின் தோஷம் நீங்கும். குறிப்பாக விஷ்ணு, சனிக்கு அதிபர். விஷ்ணுவை நினைத்து இம்மாதம் விரதம் இருப்பதால் சனி பகவானின் தாக்கம் நீங்கும்.

நவக்கிரகங்களில் ஒன்றான புதன் கிரகத்திற்கு உரிய மாதங்களுள் ஒன்று புரட்டாசி மாதமாகும். புதனின் அதிதேவதையாகவும், பிரத்யதி தேவதையாகவும் இருப்பவர் ஸ்ரீ மகாவிஷ்ணு. ஆகவே விஷ்ணுவின் அருள்பெற உகந்த மாதமாக புரட்டாசி திகழ்கிறது.

புரட்டாசி மாதத்தை எமனின் கோரைப் பற்களுள் ஒன்றாக அக்னி புராணம் சொல்கிறது. எமபயம் நீங்கவும், துன்பங்கள் விலகவும் புரட்டாசி மாதத்தில் காத்தல், கடவுளான விஷ்ணுவை வணங்குவது சிறப்பு ஆகும்.

ஒவ்வொரு மாதமும் சனிக்கிழமைகளில் விரதம் கடைபிடிப்பது நல்லது. அப்படி விரதத்தினைக் கடைபிடிக்க முடியாதவர்கள் புரட்டாசி சனிக்கிழமைகளில் குடும்ப வழக்கப்படி விரதம் இருந்து மாவிளக்கு இட்டு பெருமாளுக்கு பூஜை செய்து முடிந்த அளவு அன்னதானம் செய்து பெருமளவு வழிபட்டு வந்தால் பெருமாளின் பேரருள் கிடைக்கும்.

மேலும் விஷ்ணு காயத்ரீ சொல்லியும் திருமகளையும் வழிபடலாம். இது பெருமாளின் அருளைப் பெற்ற மந்திரங்களில் ஒன்று ஆகும்.

**"நாராயணாய வித்மஹே வாசுதேவாய தீமஹே**
**தன்னோ விஷ்ணு ப்ரசோதயாத்"** என்பதே விஷ்ணுவின் காயத்திரி மந்திரம்.

இந்த மந்திரத்தை பூஜையின்போது சொன்னாலோ ஹோமம் செய்தாலோ சிறப்பான பலன்களைப் பெற முடியும் என்று ஆபஸ்தம்ப மகரிஷி சொல்லியிருக்கிறார். தவிர விஷ்ணுவை வழிபட வேறு சில மந்திரங்களும் உள்ளன. அவை எட்டெழுத்து மந்திரம், 12 எழுத்து மந்திரம், 6 எழுத்து மந்திரம் இந்த விஷ்ணு காயத்ரியில் ஓம் நமோ நாராயணாய என்னும் எட்டு எழுத்து மந்திரமும், ஓம் விஷ்ணுவே நம என்ற 6 எழுத்து மந்திரமும் ஓம் நமோ பகவதே வாசு தேவாய என்னும் 12 எழுத்து மந்திரமும் உள்ளன.

இந்த மூன்று மந்திரங்களின் எழுத்துக்களை கூட்டினால் 26 எழுத்துக்களாகும். இந்த மந்திரங்களை பெருமாளை வழிபடும்போது சொல்லி வழிபட்டு வந்தால் சகல பாக்கியங்களும் கிடைக்கும் என்பதுடன் அருள் செல்வர்கள்ஆவர்.

திருப்பதி வெங்கடாசலபதி பெருமாளுக்குரிய தினமாகவும் புரட்டாசி சனிக்கிழமைகள் கருதப்படுகின்றன.

சனிக்கிழமை பூஜைக்குரிய பொருட்கள் முன்னதாகவே ஆசாரமாக வைத்துக் கொள்ள வேண்டும். வெங்கடேச பெருமாளின் படத்தை வைத்து மாலை சூட்டி வெங்கடேச அஷ்டகம் சொல்லி செய்ய வேண்டும். சிலர் வெங்கடேச பெருமாளின் முகத்தை வைத்து பூஜை செய்வதுண்டு.

மாவிளக்கு செய்வதற்கான பச்சரிசி மாவை ஆசாரத்துடன் சலித்து வைத்துக் கொள்ள வேண்டும். அதிகாலையில் எழுந்து குளித்து பூசைக்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். மாவினாலே விளக்கு செய்து அதில் நெய் மட்டுமே விட்டு தீபமேற்ற வேண்டும். பெருமாளுக்கு நெய்தீபம் ஏற்றுவதால் வறுமை நீங்கி வீட்டில் செல்வ செழிப்பு ஏற்படும்.

பெருமாளுக்கு படைக்கப்படும் படையலில் சர்க்கரைப் பொங்கல், வடை கண்டிப்பாக இடம் பெற வேண்டும். சிலர் பாயாசமும் படைப்பர், வெண்ணெயும், சர்க்கரையும் கலந்த சுவையான பிரசாதமும் படைப்பது உண்டு.

பெருமாளுக்கு படையல்லிட்டு பூஜை செய்யும்போது உறவினர்களையும், நண்பர்களையும் அழைக்க வேண்டும். எல்லோரும் பக்தி பெருக்குடன் கோவிந்தா, கோவிந்தா என்று கோஷமிட வேண்டும். புரட்டாசி சனிக்கிழமை திருப்பதி வெங்கடேசப் பெருமானை நினைத்து வழிபடும் விழாவானதால் அன்று வீட்டில் உள்ள பிள்ளைகளின் நெற்றியில் திருநாமம் இடுவர். அவர்கள் கையில் நாமமிட்ட பாத்திரம் ஒன்றை அளித்து நாலைந்து வீடுகளுக்கு சென்று பிச்சை எடுத்து வரச்சொல்வர். பூஜை முடிந்த பிறகு பக்தி பாடல்களைப் பாடி வணங்கி வழிபாடு செய்ய வேண்டும். பிறகு வீட்டிற்கு வந்துள்ள விருந்தினர்களுக்கு உணவளித்து தாம்பூலம் கொடுக்க வேண்டும். புரட்டாசி சனிக்கிழமைகளில் ஏதேனும் ஒரு நாளில் திருப்பதிக்குச் சென்றும் தமது காணிக்கையைச் செலுத்தி வரலாம்.

சகல பாக்கியங்களுடன் புண்ணியம் தரும் புரட்டாசி மாதத்தை போற்றி வழிபடுவோம். புகழுடன் வாழ பெருமாளை போற்றிப் பாடுவோம். கோவிந்தா, கோவிந்தா, என கோஷமிட்டு அவன் அருளை வேண்டுவோம்.

# திருககல்யாண வைபோகமே!
# அருட்பேரொளி அளித்திடும் ஆனந்தமே!

ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், புதுக்காடு கிராமம், விலாங்குட்டை மலைக்காரன் தோட்டத்தில் உள்ள ஸ்ரீ ஞானஸ்கந்தாஸ்ரமத்தில் கடந்த 29—08—2015 அன்று சுப தினத்தில், சுப நேரத்தில் சுப்ரமண்யர் வள்ளி தேவசேனா திருமணம் கொங்கு முறைப்படி எல்லா வகையான சீர்களையும் செய்து மங்கல வாழ்த்துப் பாடி ஆன்றோர்களும், சான்றோர்களும் இதில் கலந்து கொண்டு மிக அருமையாகவும் அதே சமயத்தில் சீரும் சிறப்புமாகவும் நடைபெற்றது.

இந்த விழாவை கோவை சரவணம்பட்டியில் உள்ள கௌமார மடாதிபதி சிரவை ஆதீனம் தவத்திரு. குமர குருபர சுவாமிகள் தலைமை ஏற்று சிறப்பித்தார்கள்.



"திருவருள் சக்தி" வாசகர்கள் பலர் இதில் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர். சுமார் 1400 பக்தர்கள் இந்த திருக்கல்யாண வைபவத்தைக் கண்ணுற்று. கந்தன் அருள் பெற்று மனம் மகிழ்ந்தனர்.

கொங்கு நாட்டில் இதுவரை எந்த ஓர் ஆலயத்திலும் முருகப்பெருமான் மற்றும் வள்ளி தெய்வானைக்கு கொங்கு முறைப்படி திருமணம் நடந்ததாக சான்று இல்லை. இந்த அற்புதமான திருமண விழாவில் கலந்துக்கொண்ட அனைவருடைய மனதையும் நெகிழவைத்தது. விழாவில் அடியார்கள் ஒரு சிலர் வள்ளி தெய்வானையை மணப்பெண்ணாக பாவித்து பெண் வீட்டார் பக்கமும் மற்றும் சிலர் முருகப்பெருமானை மணமகனாக பாவித்து ஆண் வீட்டார் பக்கமும் நின்று திருக்கல்யாண வைபவத்தை சீரும் சிறப்பாக நடத்தி வைத்தனர்.

அப்ஸரா பப்ளிகேசன்ஸ் நிறுவனத்தின் நிர்வாக நிலைக்குழுத் தலைவராகவும், "குருவருள் ஜோதிடம்", "திருவருள் சக்தி" ஆகிய இதழ்களின் துணை ஆசிரியராகவும், திம்ப சக்கரம், புண்ணிய சக்கரம், ஞானம் அருளும் காலக்கண்ணாடி ஆகிய நூல்களின் ஆசிரியராகவும், ஞானஸ்கந்தாஸ்ரமத்தின் பீடாதிபதியாகவும் இருந்துக் கொண்டு மக்கள் சேவையே மகேசன் சேவை எனும் தாரக மந்திரத்தை தலைமேற்கொண்டும், ஜீவ நாடி படிக்கும் கலையைக் கைவரப் பெற்றும் மிகப் பெரிய நல்லோர்களின் நல்லதரவையும் அவர்கள் ஆசியும் பல்வேறு மகான்களின் தொடர்பும் அவர்களது ஆசியும் சதுரகிரி, பொதிகை மலை போன்ற தவ பூமிகளில் தவநிலையில் அருள் பெற்றும் வலம் வந்துக் கொண்டிருக்கின்ற "ஸ்ரீஸ்கந்த உபாசகர்" பி.டி.ஜெகதீஸ்வரன் அவர்கள் மிகச்சிறப்பாக திருமண நிகழ்வை பல்வேறு மக்களின் உதவியாலும், ஞானஸ்கந்தாஸ்ரம அடியார்களின் கடின உழைப்பினாலும், குடும்ப நபர்கள் மற்றும் உறவினர்களின் ஒத்துழைப்போடும் சிறப்பாக நடத்தி இருக்கிறார்.

இந்த நிகழ்வில் எமது வாசகர்களின் சார்பில் குடும்பத்தாருடன் நேரில் சென்று கலந்துக் கொண்டு அந்த கந்தன் அருளைப் பெற்று வந்தோம். காணக் கண் கொள்ளாக் காட்சி அது. அவ்வளவு சிறப்பாக இருந்தது.

கௌமார ஆதீனம் தவத்திரு குமர குருபர சுவாமிகள் அருளாசி அளித்து பேசும்போது இந்த இடம் மிகப் புனிதமான இடம் (ஸ்ரீஸ்கந்த உபாசகர் பி.டி.ஜெகதீஸ்வரன் அவர்களைக் கைகாட்டி) இந்த பேராசிரியர் போன்ற அருளாளர்கள் பலர் அடிக்கடி தோன்றி இறைவனுக்கு பல சேவைகள் செய்து வருகிறார்கள். இந்த வகையில் இந்த திருக்கல்யாண வைபோகத்தை காண்பதற்கு நாமெல்லாம் புண்ணியம் செய்து இருக்க வேண்டும். கண்ணினால் நல்ல காட்சியைக் காண்பது மிக நல்லது எனக் குறிப்பிட்டு இந்த மலை அகத்தியர் வடிவில் இருப்பதாகவும், இங்கு முருகப் பெருமான் சுயம்புவாகத் தோன்றியதாகவும் பேராசிரியர்(ஸ்ரீஸ்கந்த உபாசகர்) அவர்களை பாராட்டி வாழ்த்துரை வழங்கினார். அதை என்னால் உணர முடிகிறது என்று கூறி திருமண நிகழ்வில் ஓதப்படும் பின்வரும் பதிகத்தை ஓதி வந்திருந்த அனைத்து மக்களுக்கும் நல் ஆசி வழங்கினார்.

**மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்**
**கண்ணில் நல்லஃதுறுங் கழுமல வளநகர்ப்**
**பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே**

எல்லாம் வல்ல ஸ்ரீ ஞானஸ்கந்த மூர்த்தியின் திருவருள் நமது அனைத்து வாசகர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்றும் இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழ இன்னருள் கிட்ட வேண்டும் என்றும் பிரார்த்தனை செய்கிறோம்.

சித்தர் அடிமை **ஸ்ரீ சி.இராஜு**, ஆசிரியர்.

திருகாட்சிகள் பக்கம் 18இல்

# திருக்கல்யாண வைபோக திருக்காட்சிகள்















# தீய சக்திகளை தீக்கிரையாக்கிடும் மூலிகைகள்





மூலிகை சித்தர்
**ஞானகுரு**
**செல்: 95002 19209**

இறைவன் அருளால் உங்கள் அனைவருக்கும் மங்களம் உண்டாகட்டும்.

பணம் பந்தியிலே குணம் குப்பையிலே என்று இருக்கும் இக்கலியுகத்தில் பணம் இல்லையென்றால் சிறு துரும்பும் அசைவதில்லை

அப்படிப்பட்ட பணத்தை சம்பாதிப்பதற்கு பல வழிமுறைகளை நாம் கையாள்கின்றோம். அதன் அடிப்படையில் போட்டி, பொறாமை நீயா? நானா? எனும் பகைமை, அதனால் ஏற்படக்கூடிய வஞ்சகத் தன்மை மேலோங்கி பழிவாங்கும் நிலைமைக்கு நம்மை ஆட்படுத்திக் கொள்கிறோம்.

நமது வாழ்க்கையில் நமக்கு பல எதிரிகள், உறவினர்கள், பங்காளிகள் மற்றும் நண்பர்கள் ஏராளாமானோர், எதிரியின் வாழ்க்கை அழிக்கக்கூடிய தீய சக்திகளை அதர்குண்டான நபர்கள் மூலம் செய்வினை ஏவல், சூன்யம், மற்றும் வயிற்றில் வசிய மருந்து மூலம் நம்மை அழிக்கிறார்கள். இதற்கு இறைவன் அருளிய தீயசக்திகளை அழிக்கும் மூலிகை சைவ முறையில் செய்யப்பட்டவைகளை எளிய முறையில் நீக்கலாம்.

வாராகி உதிரம் என்பது பெண் பன்றி இரத்தம். இது செய்வினை ஏவல், பில்லி, சூன்யத்தல் பாதிக்கப்பட்டவர்க்கு உடம்பின் எல்லா பகுதிகளிலும் தடவி விட்டு பத்து நிமிடம் கழித்து குளிக்க வைத்தால் அதன் பாதிப்புகள் எல்லாம் நீங்கி குணமடைவார்கள் என்பது உறுதி. வீட்டின் வாசலில் சோற்றுக் கற்றாழை, வளர்த்து வந்தாலும் அல்லது தொங்க விட்டாலும் தீய சக்திகள் உள்ளே வராது.

நாம் தங்கியிருக்கும் வீட்டிலோ அல்லது அலுவலகத்திலோ, தீய சக்தியின் பாதிப்பு ஏற்பட்டு இருந்தால் கரு ஊமத்தை எடுத்து வந்து எட்டு திக்குகளிலும் குழி தோண்டி மண்ணில் புதைத்தால் தீய சக்தியின் பாதிப்பு குறையும் வயிற்றில் வசிய மருந்து இருந்தால் வெள்ளைப் பூசணியில் சாம்பார், கூட்டு செய்து வாரம் 2 நாட்கள் சாப்பிடலாம். நாட்டு மருந்துக் கடை அல்லது சித்த மருத்துவ கடைகளில் வெள்ளைப் பூசணி லேகியம் கிடைக்கும் அதனை இரவு படுக்கும் போது சிறிது சாப்பிட்டு பால் அருந்தவும்.

உங்களுக்கு தீங்கு செய்பவர் வீட்டில் சாப்பிட்டால் அவர்கள் வீட்டில் ஒரு டம்ளர் ரசம் வாங்கி சாப்பிடவும். வயிறு, உடம்பு சம்பந்தமான பிரச்சனை வராது.

வெளி வாசலின் உள்ளே தர்ப்பைபுல் வலது பக்கம் 5, இடது பக்கம் 5 வைத்து துடைப்பம் படாத அளவுக்கு மேலே உயர்த்தி செல்லோ டேப் போட்டு ஒட்டி வைக்கவும்.

வசிய ஈடு மருந்து கொண்டு ஒருவரை மயக்கி அவரின் வாழ்க்கையை பாதிக்க வைக்கும் மக்களே இந்தக் காலத்தில் அதிகம். அத்தகைய பாதிப்பினால் கூட ஒருவருக்கு சித்த பிரமை ஏற்படலாம்.

அத்தகைய வசிய ஈடு உள்ளவர்களுக்கு வயிற்றில் மற்றும் குடல்களில் அடிக்கடி தொந்தரவுகள் ஏற்படும். அது மட்டுமல்லாமல் ஒரு குறிப்பிட்ட நபரையே நினைக்கத் தோன்றும். அவர்கள் சொன்னபடி நடக்கத் தோன்றும். அத்தகைய பாதிப்புகளுக்கு உள்ளானவர்கள் வெற்றிலையை கைகளால் நன்றாக கசக்கி அதில் 2 சொட்டு தண்ணீர் கலக்கி உள்ளங்கையில் விட்டுப் பார்த்தால், அது கட்டியாக மாறி நிறமும் மாறும்.

இத்தகைய பாதிப்பு உள்ளவர்களுக்கு முருங்கை இலை ஜுஸ் வெறும் வயிற்றில் ஒரு டம்ளர் கொடுக்க வேண்டும். பின்னர் அரை மணி நேரம் கழித்து ஸ்ட்ராங்கான டீ கொடுக்க வேண்டும். அதன் பின்னர் சித்த மருத்துவத்தில் உள்ள 3 பேதி மாத்திரையை பயன்படுத்த வேண்டும். இதன் பின்னர் இரண்டு எலுமிச்சம் பழம் சாறில் 100 கிராம் தோல் நீக்கிய இஞ்சி ஜுஸ் செய்து அதனுடன் 100 மிலி தேனைச் சேர்த்து குடித்தால் வசிய ஈடு முற்றிலும் வெளியே வந்து விடும்.

வசிய ஈடு மருந்து நீங்க மலர்மருவத்தில் உள்ள வைட் செஸ்ட் நட் சாப்பிடலாம். ●

# உலக அரங்கில் ஆன்மீகம் மற்றும் சமூக சேவையில் அகில உலக ஷீரடி சாய்பாபா ஆன்மீக நற்பணி அறக்கட்டளை மற்றும் பேரவை!

இந்த நூற்றாண்டுகான கண்கண்ட தெய்வமாக அருள்புரியும் ஷீரடி ஸ்ரீசாய் நாதரின் திருவருளால் சாய் பக்தர்களை கொண்டு அகில உலக ஷீரடி சாய்பாபா ஆன்மீக நற்பணி அறக்கட்டளை மற்றும் பேரவையை KA.ஸ்ரீலிங்கம் அவர்கள் தலைமையில் சாய் நாதரின் மகிமைகளை பரப்பவும், நம்பிவரும் பக்தர்களுக்கு அவருடைய திருஅருள் கிடைக்கவும் தொடங்கப்பட்ட இந்த அறக்கட்டளையின் சார்பில் ஸ்ரீ சாந்தி சாய் பிராத்தனை மையம் என்ற துணை அமைப்பு தொடங்கப் பட்டுள்ளது.



ஸ்ரீ சாய் நாதரின் திருபணிகளின் முழுமையாக அர்பணித்து கொண்டிருக்கும் இந்த அறகட்டளை மற்றும் பேரவையின் பணிகள்.

பௌர்ணமிதோறும் பிரசித்திபெற்ற அம்பிகை ஆலயங்களில் உலக நலன் வேண்டியும் அறகட்டளை நன்கொடை தாரர்களின் நலன்வேண்டியும் குங்கும அர்ச்சனை செய்து பிரசாதம் அனுப்பி வைக்கப்படுகிறது.

கிரக பெயர்ச்சிகளின் போது உலக நலன்கள் வேண்டி பரிகார ஹோமங்கள் செய்யபடுகிறது.

அவ்வப்போது மாற்று திறனாளிகள் மற்றும் வருமை நிலையில் உள்ள மக்களுக்கு நலதிட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

சுற்றுசூழல் பராமரிப்பு, சுற்றுசூழல் பராமரிப்பின் அவசியம் சாலை விதிகளை மதிப்பது பற்றிய அவசியம் போன்ற சமூக நல விழிப்புணர்வு குறித்த கருத்தரங்கம் பிரச்சாரங்கள் போன்றவைகளை நடத்தி வருகின்றனர்.

விசேஷ நாட்களில் கோவில்களில் அன்னதானம் போன்றவைகளை நடத்தி வருகிறது.

இப்பேரவையில் மாவட்டவாரியாக உறுப்பினர்களை நியமிக்க உள்ளோம் விரும்பும் அன்பர்கள் அடையாள அட்டை பெற பேரவையை தொடர்பு கொள்ளலாம்.

உலக அமைதி சமாதானம் மத நல்லிணக்கம் எய்ட்ஸ் விழிப்புணர்வு. அனைவருக்கும் கல்வி சுற்றுசூழல் பாதுகாப்பு பல்வேறு விழிப்புணர்வு பிரசாரங்களை காவல்துறை உயர் அதிகாரிகள் நீதிஅரசர்கள் தலைமையில் தொடர்ந்து நடத்தப்பட்ட வருகிறது.

வியாழன் தோறும் மையத்தின் சார்பில் கூட்டு பிரார்த்தனை மாலை 6 மணிமுதல் 7 மணி வரை நடைபெறுகிறது. அப்போது அன்பர்கள் எழுதி அனுப்பும் குறைகளை பாபாவின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு

பிரார்த்தனை செய்யப்பட்டும் அன்பர்கள் தங்கள் பெயர், வயது, நட்சத்திரம் மற்றும் கோரிக்கைகளை எழுதி அனுப்பினால் உங்களின் நலம் வேண்டி கூட்டு பிரார்த்தனை செய்யப்படும் மற்றும் பௌர்ணமி பிரசாதமும் அனுப்பி வைக்கப்படும்.

பௌர்ணமி தோறும் பேரவையின் சார்பில் அன்னதானம் செய்ய உள்ளோம் விரும்பும் அன்பர்கள் தங்களால் இயன்ற உதவியை அகில உலக ஷீரடி சாய்பாபா ஆன்மீக நற்பணி அறக்கட்டளை என்ற பெயருக்கு **M.O. or D.D.** அனுப்பி இப்புனித பணிக்கு உதவிகள் செய்யலாம். அகில உலக ஷீரடி சாய்பாபா ஆன்மிக நற்பணி பேரவையின் சார்பில் ஸ்ரீ சாந்தி சாய் மந்திர் (ஆலயங்கள்) பல இடங்களில் நிறுவ உள்ளோம். இடமிருந்து கோவில் நிறுவ விரும்பும் அன்பர்கள் மையத்தை தொடர்பு கொள்ளலாம். ■



*நீதியரசர் திரு. பொன்னுதுரை அவர்கள் முன்னிலையில் மாற்றுத்திறனாளிகளுக்கு சைக்கிள் வழங்கியபோது*


இந்துக்களின் தளபதி

**KA ஸ்ரீலிங்கம்** நிறுவனர்

அகில உலக ஷீரடி சாய்பாபா ஆன்மீக நற்பணி பேரவை

24/67, விஸ்வகர்மா இல்லம், சைதாப்பேட்டை ரோடு, வடபழனி, சென்னை - 26.

செல் : **98404 25712** வாட்ஸப் தொடர்புக்கு : **98845 02057**

E-mail : auantrust@gmail.com website : www.auantrust.org

ADVT

# இராஜயோகம் அள்ளித்தரும் ஸ்ரீஇராகு பகவான்

**அத்தகாயம் மஹாவீர்யம் சந்திராதித்ய விமர்தனம் ஸிம்ஹிகா கர்ப்பஸம்பூதம் தம்ராகும் ப்ரணமாம் யஹம்.**




ஜோதிடக் கலையரசி
**வசந்தா சுரேஷ் குமார்**
**போன்: 044–2498 0898**


இப்பூவுலகில் பிறந்த மானுடர்களாகிய நாம் அனைவரும் பெரும் செல்வச் சிறப்புடன் வாழ வேண்டும் என்றே விரும்புகின்றோம். ஆனால் ஒரு சிலருக்கு மட்டுமே அத்தகைய ப்ராப்தம் கிட்டுகிறது. ஆம் வாழ்க்கையில் கடைநிலையில் இருந்தவர்கள் திடீரென வேகமாக முன்னேற்றம் அடைவதைக் காண்கின்றோம்.

அதற்குக் காரணம் அவர்களின் ஜாதகத்தில் ஏதேனும் ஒரு கிரகம் வலுப்பெற்று, அவருடைய திசையோ அல்லது புக்தியோ நடைபெறும்போது முன்னேற்றம் ஏற்படும். ஆனால் ஒரு சிலருக்கு அவர்களே நினைத்துப் பார்த்தேயிராதபடி, இராஜயோகம் ஏற்படுகின்றது.

எப்படியேயின் யோககாரகன் என்று போற்றப்படும் இராகுபகவான் அவர்களின் ஜாதகத்தில் வலுப்பெற்றுக் காணப்படும். ஆம், திடீர் இராஜாயோகத்தை அள்ளி வழங்கும் அற்புதவள்ளல் இராகுபகவான் அவர் பெருமைகளைக் காணத்தொடருங்கள்.



ஒரு சமயம் தேவர்கள் பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுத்து அதை உண்ணும் சமயம் தேவர்கட்கு மத்தியில் சங்கிரமர் குலத்தில் பிறந்த இராகுபகவான் எவரும் அறியாவண்ணம் தேவன்போல வேடந்தரித்து அமுதம் உண்ணும் சமயம் சூரிய, சந்திரனால் கண்டு பிடிக்கப்பட்டார்.

அச்சமயம் அமுதம் பரிமாறிக் கொண்டிருந்த மகாவிஷ்ணுமிகவும் சினமுற்றுத் தம் சக்கரத்தினால் சிரம் கொய்துவிட்டார். எனவே தலைவேறு, உடல்வேறாகி விழும்படியாய் ஆனது. ஆனால் அமுது உண்டதால் இறவா வரம் பெற்ற இராகு, மகாவிஷ்ணுவை நோக்கிக் கடுந்தவம் புரியலானார்.

பின்பு மகாவிஷ்ணு பிரசன்னமாகி இராகுவின் தவத்தைப் புகழ்ந்து நவகோட்களில் ஒருவனாய் மனிதனின் சிரமும், அரவின் உடலுடன், கருநிறம் கொண்டவனாய், தென்மேற்கு திசைக்கு அதிபதியாய், கிரகங்களில் பெண் கிரகமாயும், நிறங்களில் கருமை நிறமாயும், ஜாதியில் கிரமனாகவும், வடிவத்தில் உயரமானவராய் கிரக அவயங்களில் தொடை, பாதம், கனுக்கால் எனும் உறுப்புகட்கு உரியவராய், உலோகப்பொருளில் கருங்கல்லாகவும், பாஷைகளில் துலுக்குமொழி இவருக்குரியதாகும்.

அந்நிய பாஷைகட்கு இவரே கர்தாவாயும், இரத்தினங்களில் கோமேதகத்திற்கு அதிபதியாய், வஸ்திரங்களில் கருநீலம், கறுப்புடனி சித்ரங்கள் சம்பந்தப்பட்டவராய், தூய தீபங்களில் கடுகாகவும், வாகனம் ஆடு இவருக்குரியதாகும்.

சமித்து அருகம்புல்லாகும், சுவையில் புளிப்புசுவை இவருடையது உளுந்து அன்னத்தில் விருப்பம் கொண்டவர், பஞ்சபூதங்களில் ஆகாயமாகவும், நாடியில் பித்தநாடி கொண்டவர், இவரின் அதிதேவதைகள் காளியாகவும், கருமாரியும் எனப் போற்றப்படுகிறார்.


சாக்கிரகமாய் '(மேஷம், கடகம், துலாம், மகரம், இராசிகள்) குணங்களில் தாமஸ குணம் கொண்டவராய், அலிகிரகமாய், திருவாதிரை, சுவாதி, சதயம் நட்சத்ரத்தின் நாயகனாய், சுமார் 11/2 ஆண்டுக்காலம் ஒவ்வொரு இராசியிலும் சஞ்சரிப்பாவராய் இவரின் திசை வருடம் 18 ஆண்டுகள் என்றும், பிற்கூறிலே பலன் அளிக்க வல்லவராய், இராகுவைப்போல் கொடுப்பார் இல்லை என்று இவ்வகிலம் போற்றிப்புகழும் படியாய் செயல்படுவாயக என்று விஷ்ணுபகவான் வாழ்த்துக்கூறி மறைந்தார்.

அத்துடன் பிதாமகன் (பிதுர் பாட்டனார் வம்சம்) பிரதாபம், களவு, செப்பிடுவித்தை, களவு, நானாவித வேடத்தொழில், சேவகதி தொழில், பரதேசவாசம் (அயல்நாடு) சாதிக்கு விரோதமாய் செயல்படுதல், செய்யத்தகாத செயல்களால்


அகத்திய ஜோதிட விஞ்ஞானி
பி.எஸ். தேவராஜ்

# அகத்தியர் சித்தா மூலிகை மருத்துவம்

முற்றிலும் மாறுபட்ட சித்த மருத்துவ முறையில் பத்தியம் இல்லாமல் குறைந்த கட்டணத்தில்.
50 ஆண்டு அனுபவம் மிக்க சித்த மருத்துவ மாமணி இரா.சுப்பிரமணியம் அவர்களால்
குறைந்த கட்டணத்தில் நிறைந்த மருத்துவம் சேவை புரிகிறார்.


Dr.இரா. சுப்பிரமணியம்
அரசு பதிவு பெற்ற
மருத்துவர் பதிவு எண்: 1794

## குடியை நிறுத்த!

## குடிப்பவருக்கு தெரியாமல் கொடுக்கலாம்

**கை, கால், மூட்டு வலிகளை முற்றாக நீக்கி உடலுக்கு உரம் சேர்த்து மேனி எழிலை மேம்படுத்த சிறப்பு சிகிச்சை அளிக்கப்படுகிறது. நவமூலம், சொரியாசிஸ், நீரிழைவு, ஆண்மை குறைவு, ஆஸ்துமா. பெண்களுக்கு கர்ப்பபை கோளாறுகளை நீக்கி கர்ப்பம் தரிக்க சிறந்த சிகிச்சை அளிக்கப்படும்.**

**ஆண்மை சக்தி பெருக, யாத்திரைக்கு இன்ப மாத்திரை ஒன்று ரூ.5/**

**பைல்ஸ் மற்றும் சர்க்கரை நோய்க்கு சிறப்பு சிகிச்சை**

**பெண்கள் சம்பந்தப்பட்ட அனைத்து நோய்களுக்கும் நிரந்திர தீர்வு காணப்படும்.**

**நெ. 13, எ. முத்தையப்பர் தெரு, செனாய் நகர், சென்னை - 600 030.**
**(பச்சையப்பன் கல்லூரி பின்புறம், நுங்கம்பாக்கம் இரயில் நிலையம் அருகில்)**

**போன்: 044 - 2668 0381. செல்: 99403 42800**


அவமானம் அடைதல், விகடவிநோத செயல்கள் புரிவதில் வல்லவராய், நீண்ட நாட்கள் நோயினால் அவதிப்படுதல், உடலில் ரணகாயங்கள் தகாத உறவினால் மறைந்து வாழ்தல், சிறைப்படுதல் என இவாகட்கு எல்லாம் நீயே காரணமாய் இருப்பாய் எனக் கூறிமறைந்தார். அன்று முதல் சாயா கிரகமான இராகு பகவான் அனைத்து ஜிவஇராசிகளிலும் அருளாட்சி புரிந்து வருகின்றார். எனினும் மானுடர்களாகிய, நமக்கு அவராவர் இலக்கினப்படி சில இடங்களில் சாதாரணமான பலன்களும், பல இடங்களில் மிகப்பிரபலமான இராஜயோகங்களையும் அருள்கின்றார். இலக்கினத்தில் நிற்க தேகபலம் உடையவராய், பிடிவாதமான குணமும், மர்மமான மனதும் உடையவராய், வறட்டு வேதாந்தம் பேசும் தன்மையுடையவராய், இவரால் பிதுர்சொத்துக்கள் சுகப்படாது.

**2இல்** முன்கோபம் கொண்டவர், விஷவாக்குடையவர். பிறருக்கு சாபம் இடுபவர், அதிக செலவாளி, குடும்பத்தற்கு எப்போதும் கட்டுப்படாதவராய் சுயநலத்துடன் வாழ்பவர், **3இல்** சகோதர, சகோதரி உடல் நலிவடையும், அகால போஜனம் ஏற்படும், சதா பிரயாணம் செய்யவிருப்பம் உள்ளவர். பொன் நகைகள் சேரும், பிதுர்க்கள் ஏற்றுமை குறையும். **4இல்** ஜாதகருக்கு அடிக்கடி உடல் நலியும் தாயாருக்கு தேக சுகவீனமும், அகாலபோஜனமும், எந்நேரமும் பிரயாணம் செய்வதில் ஆர்வமும், நவரத்னங்கள் சேரும் யோகமும் உண்டு, **5இல்** புத்திரத்தையும், திருமணத்தையும், உறவினர்களால் தொந்தரவும், நண்பர்களால் அதிருப்தியும், பக்திமார்க்கத்தில் செல்லும் யோகமும் உண்டு, இறைதரிசனம் காண்பவர்கள். **6இல்** திடீர் தனப்ராப்தி, விவாகப்ராப்தி, தீர்க்காயுள். செல்வச்செழிப்பு, இரகசியமுறையில் பணவரவு, விதவைகளால் யோகம், அயல்நாட்டினரால் பணவாய்ப்பு கிட்டும். **7இல்** பழிக்சொல் ஏற்படுதல், திருமணத்தடை, குடும்பம் பிரிவு ஏற்படுதல், கமிஷன் வாழ்க்கை, நாணயம் தவறுபவர், **8இல்** கடின மனம் கொண்டவர், ஆளடிமை உடையவர், இரக்கமாற்றவர், கஞ்சத்தன்மை உடையர், எப்போதும் சிந்தனை மனம் கொண்டிருப்பர். ஆயுள்விருத்திஉண்டு, பிறருக்காக சேமிப்பவர், **9இல்** பிதாவிற்கு எல்லாவிதத்திலும் தடை ஏற்படும். உறவுகள் பகையாகும், ஆயுள்தீர்க்கம், அயல்தேச வாசம், அனைத்து சுகமும் ஜாதகருக்கு உண்டு, பூமி, பொன், பொருள் சேரும், மூதாதையரின் சொத்து கிட்டாது. **10இல்** கோடீஸ்வரர், விதவைகளின் மூலம் பொருள்சேரும், நவரத்தினவிற்பனை புரிவர், யோகமானவாழ்வு கிட்டும், அயல்நாடு சென்று வருவர். வளமான நலமாக வாழ்வு அமையும், இலட்சுமி கடாட்சம் கிட்டும் அதிர்ஷ்டசாலிகள் திடீர்யோகமுன்டு, **11இல்** பிதுர்கட்கு தோஷமாகும், பிற்காலத்தில்நல்ல யோகமுண்டு, திடீர்தனப்ராப்தி

கிட்டும், பிறருக்காக பொருள் சேமிப்பர், தான் அனுபவிக்க மனமற்றவர்கள், குழப்பவாதிகள், மர்மமான மனது உடையவர்கள். **12இல்** சதா சிந்திப்பவர், குழப்பவாதிகள், எவருக்கும் பிடிகொடுக்காதவர்கள், சயனசுகம் அற்றவர்கள், சர்ப்பதோஷம் உண்டு, அதிகமாய் செலவு செய்து அவதிப்படுபவர்கள்.

*1,2,5,7,8,12* இவ்விடங்களில் (இலக்கினத்திற்கு) நிற்க சர்ப்பதோஷமாகும், இவர் வீடான கன்னியில் ஆட்சியுடனும், விருட்சிகத்தில் உச்சமாயும் உள்ள இராகு பகவான் திடீர் யோகம் தருமிடங்கள்,

**"கேளப்பா இன்னுமொரு புதுமை கேளு, கனமான கரும்பாம்பு**
**கேந்திர, கோணம், ஆளப்பா அத்தலத்தோன் சுபரைக்கூட**
**அப்பனே சேர்ந்தாலும் கண்ணுற்றாலும்.**
**சீரப்பா ஜென்மனுக்கு யோகம்மெத்த**
**சிவா சிவா கிளர் யோகம்,**
**திடமாய்ச் செப்பு**

(புலிப்பாணிசித்தர்)

கேந்திரஸ்தானம் *1,4,7,10*, திரிகோணம், *1,5,9* இவ்வீடுகளில் சுபக்கிரகங்களுடன் சேர்ந்தோ, சுபக்கிரகங்களின் பார்வையை பெற்றோ அவர்களின் திசை, புக்தி காலங்களில் திடீர் யோகம் ஏற்படும் என போகர் சித்தரின் சீடர் புலிப்பாணி சித்தரின் பாடல் வரிகள் இவையாகும்.

இன்னும் பிரபலமான இராஜாயோகம் தரும் இடங்கள் **"ஆமேடம், எருது, சுறா, நண்டு, கன்னி இவ்வைந்திடத்தில் கருநாகம் (இராகு) அமர்ந்திருக்கில் பூமேடைதனித்துயிலும் இராஜயோகம்"** மேஷம், ரிஷபம், மகரம், கடகம், கன்னி என்னும் இவ்வைந்து இடங்களில் இராகு பகவான் நிற்கில் அவரின் திசையோ, புக்தியோ நடைபெறும் காலங்களில் ஜாதகரே நினைத்து பார்க்கவே இயலாத அளவிற்கு வாழ்வில் உயர்த்தும் அசுர பலம் கொண்டவர் இப்பெருமான் ஆவார்.

உலக விஷயங்களில் அறிவைத் தருபவர், உள்ளத்தில் தெளிவை கொடுப்பவர், அனைத்து உலகெங்கும் பயணிப்பவர், அதிகார ஆற்றல், பலம் கொடுப்பதில் பலவான், அரசாங்கத்தில் உயர்பதவி ஸ்பெகுலேஷன் துறை மூலம் கோடீஸ்வரன் ஆக்குவதில் வல்லவர். சூதாட்டமன்னர்களைத் தோற்றுவிப்பவர், திருமணகாலங்கள் வரும் நேரம் இவரின் திசைகள் நடைபெறுமாயின் ஜாதகருக்கு சிரமங்கள் நேரும். தோஷங்கள் உடையவராயின் திருமணம் தாமதமாகும்.

சனிபகவானுக்கு என்னென்ன குணாதிசயங்கள் உண்டோ அவைகளில் பெரும்பாலானவைகள் இராகுவுக்கும் பொருந்தும், சனி, இராகு இருவரின் நிறம் கருப்பு, இருவரும், பாபக்கிரகங்கள், சுபர்பலம் பெற்ற சனிபகவான் எந்தவிதம் பலன் அளிப்பாரோ, அதைப்போன்று இராகுவும் பலன் அளிப்பவர். சாயாகிரகமான, அப்பிரதட்சணமாக வலம் வரும் இராகுபகவான் சுபபலத்துடன் அமைந்திருக்க மண் வீட்டில் வசிப்பவரையும் மாடிவீட்டில் கொண்டு சேர்க்கும் மகா பலவான்ஆவார். இவரின் பலம் உண்டெனில் உலகம் முழுவதும் சுற்றிப் புகழ் பெறும் யோகமும், பலமொழியில் பாண்டித்யமும், அதிகாரம், அந்தஸ்து, பொருள்வளம் அடையவும் வழிவகை செய்வார். இப்படிப்பட்ட பெருமகன் இராகு நம் ஜாதகத்தில் பலமுடன் அமைய வில்லையே எனயாரும் வருந்தவேண்டாம். தக்க பரிகாரங்களின் மூலம் வாழ்வு பெறலாம். ஆம் நம் ஆத்மார்த்த தெய்வம் உமாதேவியார் பரமேஸ்வரன் இடம் வினவியது. சுவாமி பூர்வ கர்மத்தினால் ஜாதகத்தில் உள்ள தோஷங்கள் மூலம் அவதிப்படுவர்கட்கு விமோசனமே கிடையாதா? தாங்கள் தயைகூர்ந்து திருவாய் மலர்ந்தருளுங்கள் எனவினவவும், நன்மை காத்து ரட்சிக்கும் பரம்பொருளான உலகைகாக்கும் பரமேஸ்வரன் உமாதேவியாருக்கு அருளியது.

தேவி! மானுடர்கள் நோயுற்றால் மருத்துவரிடம் சென்று தன் நோய்நீங்க இன்புறுகின்றனரோ, அதுபோன்றே கிரகங்களால் ஏற்படும் தோஷங்களை அவர்கள் எழுந்தருளியுள்ள க்ஷேத்ரங்களில் அடுத்தது (அவர்கள்—நவகிரக அதிதேவதைகள்) எழுந்தருளியுள்ள ஸ்தலங்கட்கு சென்று முறையாக வழிபடின் முன்வினை தோஷங்கள் நீங்கி இன்ப வாழ்வுபெற கிரகங்கள் அருளும். என வினவினார். நம் தாயாகிய உமாதேவியார் சித்தர்களாகிய ஸ்ரீஅகஸ்தியர் போகர், புலிப்பாணி போன்ற சித்தர்கள் ஞானிகட்கு அருள அவர்கள் தம் நூலில் எழுதிவைத்துள்ளது. <u>பரிகாரங்கள் விபரம்.</u> இராகு பகவான் திருத்தலம்—கும்பகோணம் அருகோயுள்ள திருநாகேஸ்வரம் என்ற க்ஷேத்ரத்தில் உள்ள இராகு பகவானுக்கு இராகு காலத்தில் (அவரவர் ஜாதகத்தில்) இராகு உள்ள இடம், அவர் யார் சாரத்தில் உள்ளார் என்பதைக் கண்டறிந்து (தங்கள் ஜோதிடரை அணுகி) அந்நாளில் சென்று முறையாக வழியிடுதல் நன்று.

இப்பிரபுவின் கருணையைப்பெற இவரின் அதிதேவதைகளான காளி, துர்க்கை, கருமாரி, ஸ்ரீ சரபேஸ்வரரை இராகு காலநேரம் ஞாயிறு மாலை 4.30—6.00 மணிக்கு, நெய்தீபமேற்றி, எலுமிச்சைமாலை சாற்றி, செவ்வரளி கொண்டு அர்ச்சனை செய்து வர சகல சௌபாக்யங்களும் கிட்டும். யோகம் தரும் இராகுவை கீழ் வரும் பாடல் மூலமும் வழிபட்டுப் பயன் அடையலாம். (எளிமையான பாடல்)

**"ஏகாந்த வாழ்வில்லை எந்நிலையும் மாறவில்லை**
**பாகாக நெஞ்சுருகிப் பாடுகின்றேன் இராகுவே**
**தூமலரைச் சார்த்தித் தொழுதிட்டேன்.**
**என் குறையைத் தாமதமின்றித் தகா".**

பரிபூரண சரணாகதியாய் முழு நம்பிக்கையுடன் இராஜயோகம் பெற நாளும் இராகுபகவானைத் தொழுவோம் நன்மைகள் பல பெறுவோம். ●

ஸ்ரீ விஷ்ணு பகவான் துணை

# அற்புத வசிய மூலிகைகள்

## ஜெயா TV புகழ் 'பரிகாரச் செம்மல்' மூலிகை சித்தர் ஞானகுரு

**அனைத்து மூலிகைகளும் சித்தர் முறைப்படி உயிருடன் எடுத்து உங்களுக்காக 48 நாட்கள் அதற்குண்டான உரு ஏற்றி உயிரோட்டமாக உங்களது ஆயுட்காலம் வரையில் பலன் பயன் அளிக்கக்கூடியது.**

**1. தெய்வீக மூலிகை ரூ.15,000/-** உங்களது குலதெய்வம் அல்லது இஷ்ட தெய்வம் எது வேண்டுமோ இந்த மூலிகையை சிவப்பு பட்டுத்துணியில் சுற்றி மரப்பலகை மேல் வைத்து தினமும் தெய்வத்தின் யந்திரம் வைத்து அதற்குண்டான மந்திரங்கள் தினமும் காலை, மாலை முழு நம்பிக்கையுடன் ஊதுவத்தி காண்பித்து வந்தால் அந்த தெய்வம் உங்களுக்கு காட்சி தந்து உங்களுடனே இருந்து உங்களது எல்லாக் காரியத்தையும் வெற்றி அடையச் செய்யும்.

**2. வெள்ளை விஷ்ணுகிராந்தி மூலிகை தாயத்து ரூ.10,000/-** சகல ஐஸ்வர்யமும், சகல வசியம், எடுத்த காரியம் அனைத்து ஜெயம் உண்டாக்கி கடைசி காலம் வரையில் சகல செல்வாக்கு, செல்வம் உண்டாக்கும். தொழில் வெற்றி, குடும்பத்தில் ஒற்றுமை.

**3. சகலரும் வசியமாகும் தொட்டாற்வாடி மூலிகை தாயத்து ரூ.5000/-** ஆண், பெண் வசியமாக்கும் மிகச்சிறந்த மூலிகை

**4. பகைவரையும் நண்பனாக்கும் சங்கிலிக்கொடி மூலிகை தாயத்து ரூ.5000/-** உங்களது பகைவர்களை, எதிரிகள், உங்கள் மேல் பாசம் உண்டாக்கி நீங்கள் சந்தோஷமாக இருப்பீர்கள்.

**5. அதிர்ஷ்ட ரக்ஷிணி மூலிகை தாயத்து ரூ.5000/-** திடீர் காரியசித்தி உண்டாக்கும் புத்ரதோஷம், அனைத்து துன்பங்களையும் விரட்டி அடிக்கும் வல்லமை உள்ளது.

**6. செய்வினை, தீயசக்தி குடும்பத்தில் ஒற்றுமை குடும்பத்தில் சந்தோஷம் உண்டாக்கும் மூலிகை பவுடர் ரூ.10,000/-** இந்த மூலிகை பவுடரை பூஜையில் சாம்பிராணி போல் தினமும் 2 வேளை மனமுறுக போடவும்.

**7. கணவன் - மனைவி ஒற்றுமை மூலிகைப் பவுடர் ரூ.10,000/-** கணவன் - மனைவி ஒற்றுமை இல்லாமை, கணவன் - மனைவி பிரிந்து கோர்ட், கேஸ் விவகாரம் முற்றிலும் நீங்கும். இருவரும் சேர்ந்து சந்தோஷமாக இருப்பீர்கள்.

**8. ஏறு சிங்கி ரூ.10,000/-** 21 இன்ச் அளவுள்ளதில் மஞ்சள், குங்குமம் வைத்து பச்சை பட்டுத்துணி சுற்றி உங்களது பூஜையில் மரப்பலகையின் மேல் வைத்து ஊதுவத்தி காண்பித்து மனதார வேண்டினால் நலிவடைந்த தொழில், வியாபாரம் மீண்டும் செழிக்கும். கடன் பிரச்சனை நீங்கி சகல ஐஸ்வர்யமும் உண்டாகும்.

**9. நினைத்ததை நடத்தும் ஸ்ரீபைரவர் யந்திரம் ரூ.7,500/-** தீயசக்தி, செய்வினைகள், காரியத்தடை, அப குணங்கள், பங்காளிகள் பிரச்சனை, வழக்கு, திருமணத் தடை, குழந்தை பாக்கியம், எதிர்பார்த்த உத்யோகம், உத்யோக உயர்வு, வெளிநாட்டுப் பயணம், எதிர்பார்த்த காரியங்கள் அனைத்தும் லாபம் தரும் மகாசக்தி பைரவர் யந்திரம் சித்தர் முறைப்படி 6X6 கடினமான செப்புத் தகட்டினால் கையினால் எழுதி உங்களது பெயர், இராசி, நட்சத்திரத்துடன் 7 நாட்கள் சக்தியூட்டப்பட்டு வசிய மூலிகை உள்ளே வைத்து பிரேம் செய்து தரப்படும். இத்துடன் பைரவர் வழிபாட்டு முறை வழங்கப்படும்.

**10. தொழில் வியாபாரம், பணவரவு சிறக்கும் ஸ்ரீகாமதேனு யந்திரம் ரூ.7,500/-** தொழில் மந்தம், வியாபாரத் தடை, ஊழியர் பிரச்சனை, கடன் தொல்லை அனைத்தும் விலகி எதிர்பார்த்தபடியே தொழில் சிறப்பாக நடக்கும். வியாபாரம் செழிப்பாக மாறும். எதிர்பார்த்தபடியே தொழிலாளர் பிரச்சனை விலகும். கடன் தொல்லைகள் விலகி எதிர்பார்த்த பணவரவு, ஐஸ்வர்யம் உண்டாக்கும் மகாசக்தி ஸ்ரீ காமதேனு யந்திரம் சித்தர் முறைப்படி 6X6 கடினமான செப்புத் தகட்டில் கையினால் எழுதி உங்கள் பெயர், இராசி, நட்சத்திரத்துடன் 7 நாட்கள் சக்தியூட்டப்பட்டு வசிய மூலிகை உள்ளே வைத்து பிரேம் செய்து தரப்படும். ஸ்ரீகாமதேனு வழிபாட்டுமுறை கட்டுரை வழங்கப்படும்.

**11. வசிய அஞ்சனம் ரூ.5,000/-** உங்களது இருபுருவத்திலும் வைத்து தினமும் 21 தடவை "ஓம் ரீம் ஐயும் கிலியும் சவ்வும் சர்வலோக வசியமாக ஸ்வாஹா" சொல்லவும். இதனால் ஆண்/பெண் வியாபாரம் வசியம் ஆகும்.

**12. வசிய மருந்து ரூ.2000/-** இந்த மூலிகை பவுடருடன் உங்களது 5 இடத்து அழுக்கு எடுத்து 4 வேளை சாப்பாடு குழம்பு, வருவலில் கலந்து உங்களது பேச்சை கேட்க வேண்டும் என்பவருக்கு கொடுக்கவும். இதனால் கணவன், மனைவி, பிள்ளைகள் உங்களது பேச்சைக் கேட்பார்கள்.

**13. வசிய எண்ணெய் ரூ.5000/** இந்த எண்ணெயுடன் உங்களது ரத்தம் 2 சொட்டு கலந்து ஒரு வாரம் வைத்து இருந்து விரும்பியவருக்கு உச்சந்தலையில் சிறிது 3 தடவை தடவும். மேலும் அவர்கள் உபயோகிக்கும் தேங்காய் எண்ணெயில் கலந்து விடவும். இந்த எண்ணெய் உபயோகிக்கும் கணவன், மனைவி, பிள்ளைகள், மாமியார், நாத்தனார், எதிரிகள், காலம் முழுவதும்ட உங்களுக்கு வசியமாவார்கள்.

**14. மூலிகைக் கட்டு ரூ.3000/-** இதன் மேல் மஞ்சள், குங்குமம் வைத்து பச்சை பட்டுத்துணியால் பூஜையில் பலகைமேல் வைப்பதால் தீயசக்திகள, வெளியேறி, செல்வச்செழிப்பு, சுபநிகழ்ச்சிகள், சந்தோஷம், பணவரவு, ஐஸ்வர்யம் பெருகும்.

**15. ஞாபக சக்தி படிப்பில் முன்னேற்றம் மூலிகைப் பவுடர் பாக்கெட் ரூ.500/-** இத்துடன் 50 கிராம் சாம்பிராணி கலந்து வாரத்தில் 3 நாட்கள் வீட்டின் வெளியிலிருந்து உள்ளே தூபம் போடவும். இதனால் படிப்பில் பிள்ளைகள் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

**16. செய்வினை, கிரகதோஷம், தீயசக்தி, கண்திருஷ்டி, சூன்யம் நீக்கும் மூலிகைப் பவுடர் ரூ.500/-** இத்துடன் 50 கிராம் சாம்பிராணி கலந்து வாரத்தில் 3 நாட்கள் வீட்டின் வெளியிலிருந்து உள்ளே தூபம் போடவும்.

17. மூட்டுவலி, மூலிகை தைலம் பாட்டில் ரூ.300/- கை, கால், இடுப்பு, மூட்டுவலி, இரத்தக்கட்டு சுளுக்கு, தொடைவலி, எலும்புமுறிவுக்கு இரவு படுக்கும்போது நன்றாக தேய்த்து உறங்கவும். ஒரே நாளில் பலன் தெரியும்.

**18. ஜன்னி, தலைவலி, சைனஸ், அலர்ஜி நீக்கும் மூலிகைப் பவுடர் ரூ.1000/-** பவுடரை நல்லெண்ணையுடன் சிறிது கலந்து சூடுபடுத்தி தலைக்கு தேய்த்து குளிக்கவும். தேய்த்து மூழ்கியவுடன் ரசம் சாதம் சாப்பிட்டு விட்டு சிறிது நேரம் தூங்கவும்.

**19. வாகன விபத்து ஆபத்து நீக்கும் வெள்ளி மோதிரம் ரூ.3500/-** எதிர்பாராதவிதமாக ஏற்படும் வாகன விபத்து, ஆபத்து மனித வாழ்க்கையில் ஏற்படும் ஆபத்துக்கள் தடுக்கும் அபூர்வ வெள்ளி மோதிரம்.

**20. வியாதி, தீயசக்தி விலக்கும் மூலிகைப் பவுடர் ரூ.500/-** ஒரு பாக்கெட்டுடன் 100 கிராம் நெய் கலந்து தினமும் பூஜையில் குறைந்தது 48 நாட்கள் தீபமேற்றவும். வியாதிகள் குணமாகி தீய சக்திகள் வெளியேறும்.

**21. அபூர்வ மூலிகைகள் DVD ரூ.1500/-** இதுவரையில் மூலிகைப் புத்தகத்தில் மூலிகையின் பெயர், புகைப்படம் மட்டும் பார்த்து இருப்பீர்கள். அனைத்து அபூர்வ மூலிகைகள், அற்புத மூலிகைகள், சஞ்சீவி மூலிகைகள் மற்றும் புல்லுருவிகள் அனைத்தும் DVD மூலம் காணும் வாய்ப்பு மூலிகைகளின் பயன் மற்றும் பலன், உபயோகிக்கும் முறை தெளிவாகச் சொல்லப்படும். DVD வீட்டில் இருந்தால் மூலிகையின் நல்ல அதிர்வுகள் மூலம் வீடே சுபிட்ஷமாக இருக்கும்.

**22. குபேர கண்ணாடி ரூ.600/-** தினம் காலையிலும், வெளியே செல்லும்போதும் குபேர கண்ணாடியை பார்த்துச் சென்றால் மேலும் குபேர மந்திரத்தை 21 முறைச் சொல்லவும். காரிய ஜெயம், அதிர்ஷ்டம், செல்வம், செல்வாக்கு, பணவரவு உண்டாகும்.

- வசிய மூலிகைகளின் மேல் நம்பிக்கையும், விருப்பம் இருந்தால் மட்டுமே போன் செய்து விட்டு நேரில் பெற்றுக் கொள்ளலாம். அல்லது தேவையான பொருட்களின் விவரம் தெளிவான விலாசத்துடன் செல் நம்பருடன் "ஞான குரு" என்ற பெயருக்கு மணிஆர்டர் அனுப்பவும். அல்லது R.GNANASEKARAN என்ற பெயருக்கு சென்னையில் மாற்றத்தக்க டி.டி. அனுப்பவும். பொருட்கள் கூரியரில் அனுப்பி வைக்கப்படும்.
- நம்பிக்கை, இல்லாமல், தேவையில்லாத கேள்வி கேட்பதை கண்டிப்பாக தவிர்க்கவும்.
- எப்படிப்பட்ட செய்வினை, ஏவல், தொழில் வியாபாரம், கல்வி, உத்யோகம் கணவன், மனைவி பிரச்சனை, விரும்பியவரை மணக்க மற்றும் அனைத்துப்பிரச்சனைக்கும் சித்தர், முறையில் பரிகாரங்கள் உத்திரவாதத்துடன் செய்யப்படும்.



முன் அனுமதிக்கும் தொடர்புக்கும் : **95002 19209**

**ஜெயா TV புகழ் 'பரிகாரச் செம்மல் சித்தர் ஞானகுரு**

**பியூட்டி மூன் லாட்ஜ், பெரம்பூர் பேரக்ஸ் ரோடு, டவ்ட்டன்**

**புரசைவாக்கம், சென்னை - 600 007. ( டவுட்டன் சிக்னல் அருகில் )**

ஜெயா டி.வி.யில் காலை மலரில் சிறப்பு விருந்தினராக நான் கலந்து கொண்ட நிகழ்ச்சியைக் காண எனது WEBSITE பார்க்கவும் www.sidharmiracleherbals.com

# நல்வழி காட்டும் ஆன்மிக பொக்கிஷங்கள்




**கே. ராஜலக்ஷ்மி குமாரசிவம்**
**செல்: 94447 79426**

காதுக்கு இனிய செய்தி கண்ணுக்கு இனிய காட்சி மனதுக்கு அமைதியைத் தருகிற அறிவுரைகளைத் தருபவையே நம் நாட்டின் ஆன்மிகச் செல்வங்கள் அவற்றை மிகச்சிறிய செய்திகளாக மனதில் ஏற்றிக் கொள்வோம்.

### மழை வளம் தரும் ருஷ்ய ஸ்ருங்கர் ஸ்துதி

விபாண்டக மகரிஷயின் புதல்வரான ருஷ்யஸ்ருங்க மகரிஷி சகல வேத சாஸ்திரங்களையும் நன்கு கற்றுத் தேர்ந்தவர். சாந்த சொரூபமான இவரை பற்றி துதி கூறினால் நாட்டில் மாமழை வருஷிக்கும் என்பது நம்பிக்கை. மழை வளம் கண்டு பயிர் செழிக்கவும் நீர் பெருகவும் தண்ணீர் கஷ்டம் தீர்ந்திடவும் இவரது துதியைப் படிப்போம். ஒருவரோ கூட்டாக ஒரு சன்னதியிலோ பொது இடத்திலோ அரச மரமேடையிலோ அமர்ந்து கூறலாம்.

**ரிஷ்ய ஸ்ரங்காய முநயே விபண்டக சுதாயச**
**நமஸ் சாந்தாதி பதயே ஸத்யஸ் ஸத்வ்ருண்டி ஹேதவே**
**விபண்டக ஸுத: ஸ்ரீமான் சாந்தாதிபதி: அகல் மஷ:**
**ருஷ்ய ஸ்ருங்க இதிக்யாதோ மஹா வர்ஷம் ப்ரயச்சது!**
**சந்த்ரப்ரபம் பங்கஜ ஸந்நிவிஷ்டம்**
**பாசாங்குசா பீதிவரான் ததானம்!**
**முக்தா கலா பாஞ்சித ஸர்வ காத்திரம்**
**தியாயேத் ப்ரஸன்னம் வருணம் ஸுவ்ருஷ்ட்யை!**



### கடன் தீர்க்க அருள் தரும் அங்காரக அஷ்ட புஷ்பம்

வாங்கிய கடனுக்கு வட்டி கட்டியே முடியவில்லை என்று அவதிப்படுவோர் அந்த இடையூறு தீர அங்காரகனை செவ்வாயன்று 8 சிவப்பு மலர்சாற்றி வழிபட கடன் தொல்லை மறைந்து விடும்.

ஓம் அங்காரக மகீபுத்ரோ ருணமாசு விநாசய என்று சொல்லி எட்டு சிவப்பு மலர்களை சாற்றுக. ஓம் பூமி புத்தாய நம: ஓம் சகோதர காரகாய நம: ஓம் பூமிலாபகராய நம: ஓம் குஜாய நம: ஓம் ரண கராய நம: ஓம் ருணரோக நிவாரகாய நம: ஓம் ருணத்ரய விமோசனாய நம: ஓம் மஹீகதாய நம: பிறகு

**தியானம் கூறுக**

**ஓம் ரக்த மாஸ்யாம் ப்ரதரம் சக்தி சூல கதாதரம்**
**சதுர்ப்புஜம் மேஷவாஹம் வரதாபய பாணிநம்**
**ஓம் அம்ரம் ரிம் அம் அங்காரகாய நமோநம:**
**மம ஜென்ம ருணமாசு விநாசய விநாசய ஓம் நம இதி:**

இதற்கு 16 சங்கு கோலம் போட்டு 16 செவ்வாய்க் கிழமைகளுக்கு நெய் தீபம் ஏற்றி வர வேண்டும்.

### பயனற்ற ஏழு அறிந்துக் கொள்க

இந்த உலகில் ஒவ்வொருவரும் மனித இனம் வாழ தம்மால் இயன்றதைச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் இடையூறு செய்யாமல் அமைதியாக இருக்கலாம். வாழ்ந்தும் இருந்தும் பயன் படாதவைகளிலிருந்து விலகி விடலே தர்மம் என்கிறது விவேக சிந்தாமணி. அவை என்ன?

ஆபத்துக்கு உதவாப் பிள்ளை, அரும்பசிக்கு உதவாத அன்னம், தாகத்தைத் தீர்க்காத தண்ணீர், தரித்திரம் அறியாப் பெண்டிர், கோபத்தை அடக்காத அரசன், குருமொழிகேட்காத சீடன், பாவத்தைத் தீர்க்காத தீர்த்தம், பயனில்லை ஏழும்தானே! ஆலயம் மிதியாப் பாதம் சிவனடி வணங்காதப் பிறவி, கேட்பவருக்கு கொடுக்காத கைகள், இனியசொல் கேளாத காது, மறப்பவர் தங்கள் கண்ணீர், பொழிதரச்சாகா தேகம், இருப்பினும் பயன் ஏன் என்றது.

### பெண்கள் கர்ப்பம் தரித்திட – புலிப்பாணி சித்தர் கூறிய இரகசியம்

மாமரத்தின் இலைகளை ஐந்து எடுத்து வந்து

கர்ப்பமாகாத பெண்ணின் தலையைச் சுற்றி வீட்டு நடுவாசலில் குழி தோண்டிப் புதைத்து விட வேண்டும். பிறகு தலை குறித்து வரச்செய்து அகில் கட்டையைப் பொடி செய்து, சாம்பிராணிப் பொடியுடன் சம அளவில் கலந்து அக்னியில் இட்டு புகையை உடம்பில் பட போர்வையால் மூடி வேவு பிடிக்கவும். இப்படி மாதவிடாய் ஆன மூன்று நாட்களும் செய்திட மலட்டுத்தன்மை நீங்கி குழந்தை உண்டாகும்.

தொடர்ந்து சித்தர் பாடல் கருத்தை கவனித்துக் கடைபிடிக்க வேண்டும்.

**வீட்டை விலக்கிடும் பெண்டிர் நாளதனில்**
**நாட்டு இலந்தம் நான்கினைப் பொடித்து**
**காரமாய் மணிமிளகுஞ் சேர பூண்டதும்**
**ஊரச் செய்யின் ஆண்டது எதுவாகினும்,**
**என்ன ! மகிழ்ந்திட மங்கையும் மலடியாயின்**
**நன்மக்களும் உண்டது தானே ! காண்பீர் !**

இதன்கருத்தாவது மாதவிடாய் ஆகும் காலத்தில் நாட்டு இலந்தை இவை 10 பூண்டு 5 மிளகு 5 அரைத்துக் காலை வெறும் வயிற்றில் உட்கொள்ள கர்ப்பம் தரிக்கும்.

தினமும் காலை மாலை வீட்டு பூஜை அறையில் தீபம் ஏற்றிவிட்டு இந்த மந்திரங்களை 12 முறை ஜெபம் செய்து வர வேண்டும். அரளிக்கட்டையைக் கடைந்தால் அதிலிருந்து (நெருப்பு) அக்னி உண்டாவதைப் போல இந்த உடம்பில் கர்ப்பம் உண்டாகி பத்தாவது மாதத்தில் குழந்தை பெறுவதற்கு அனுக்ரஹம் செய்யுங்கள் என்று வேண்டுதல் செய்து வெண்ணெயை படைத்து, பிரசாதமாக கணவன் மனைவி இருவரும் உட்கொள்ள வேண்டும். நம்பிக்கையோடு செய்துவர கருவில் குழந்தை மலரும். முதலில் கணபதியைத் துதித்து விட்டு,


**1. விஷ்ணுர் யோநிம் கல்பயது த்வஷ்டா ரூபாணி பிம்சது**
**ஆஸிஞ்சந்து ப்ரஜாபதி , தாதா கர்ப்பம் ததாது.**

**2. கர்ப்பம் தேஹி ஸினிவாலி, கர்ப்பம் தேஹி சரஸ்வதி**
**கர்ப்பம் தே அச்வினென தேவெலி ஆதத்தாம் புஷ்கர ஸ்ரஜா**

**3. ஹிரண்யயீ அரணீயாம் நிர்மந்ததோ அச்விநா**
**தம்தே கர்ப்பம் ஹவாமஹே தசமே மாஸி சூனவே**

### பிரம்மன் கூறிய பித்ரு ஸ்துதி

பித்ருக்களை அமாவாசை, அவரவர் திதிநாளில், தை, ஆடி, அமாவாசைநாளில் நினைக்க வேண்டும். அவ்வாறு நினைவில் இருத்தி இந்த பித்ரு வணக்கத் துதியைக் கூறுபவர்களுக்கு இந்த உலகில் கிடைக்கக் கூடாதது இல்லை. எல்லாவிதமான பாவங்களிலிருந்தும் விடுபட்டு சுகபோக பாக்யங்களைப் பெறுகிறான். வீட்டு பூஜை அறை, குளக்கரை, புஷ்கரணிகள், புனித நதி தீரங்கள், இங்கெல்லாம் பித்ரு வழிபாடு செய்து விட்டுக் கூறிட முன்னோர்கள் மகிழ்ச்சி அடைந்து ஆசி கூறுவர்.



ஸ்ரீ பிரம்ம உவாச—

**ஓம் நம: பித்ரே ஜன்ம தாத்ரே ஸர்வதேவ மயாயச**
**சுகதாய பிரசன்னாய ஸுப்ரீதாய மஹாத்மனே**

**ஸர்வ யக்ஞ ஸ்வரூபாய ஸ்வர்காய பரமேஷ்டினே**
**ஸர்வ தீர்த்தாவ லோகாய கருணா சாகராயச**

**நம: ஸதா ஆசுதோஷாய சிவரூபாயதே நம**
**ஸதா அபிராத ஷமினே சுகாய சுகதாய ச**

**துர்லபம் மானுஷமிதம் யேன லப்தம் மயாவடி:**
**ஸம்பாவனீயம் தர்மார்த்தே தஸ்மை பித்ரே நமோநம:**

**தீர்த்த ஸ்நான தபோ ஹோமம் ஜபாதி பஸ்ம தர்ஸனம்**
**மஹா குரோஸ்ச குரவே தஸ்மை பித்ரே நமோநம:**

**யஸ்ய ப்ராணாய ஸ்தவனாத் கோடீச: பித்ரு தர்ப்பணம்**
**அஸ்வமேத சதை துல்யம் தஸ்மை பித்ரே நமோநம:**

**பித்ரு ப்ரீதி கரோநித்யம் ஸர்வ கர்மாண்ய தார்ஹதி**

பித்ரு ஸ்துதி ஸம்பூர்ணம்

### கேஷ் இருந்தால் உயர்ந்த நிலையை அடையலாமா?

Cash இருந்தால் (பணம் இருந்தால்) வாழ்க்கையில் உயர்ந்த அந்தஸ்துக்கு வந்து விடலாம் என்று பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கங்கே பணத்தைக் கொட்டிய போது தொழிலில் ஏமாற்றம் மிச்சமானது. ஒரு தொழிலில் cash போட்டால் மட்டும் போதாது Kashம் பயன்படுத்தத் தெரிய வேண்டும்.

K-Knowledge A-Attitude S-Skill H- habit

அறிவு, மனப்பாங்கு தனித்திறமை பிறரிடம் பழகும் விதம், ஆகிய kash நம்மிடம் இருந்தால் உலகில் வெற்றிபெற்ற மனிதர்களாக வலம் வர முடியும்.

### ஆன்மிகம் தந்த புதுவாழ்வு

டெலஸ்கோப்பைக் கொண்டு வந்த கலிலியோ எப்போதும் இளம் வயதில் ஒரு நாத்திக வாதியாகவே வளர்ந்து நாத்திகக் கவிதைகளை எழுதிக் குவித்து வந்தார். வறுமையே மிஞ்சியது அப்போது அவரது இயற்பெயர் கவிஞர் வார்டு டென்னிசன். இங்கிலாந்தில் கஷ்டப்படும் மனிதர்கள் மத்தியில் இவரது கவிதை நம்பிக்கையை ஊட்டாததால் உரிய மரியாதை கிடைக்காமல் போய்விட்டது.

ஒரு ஞாயிறன்று தற்செயலாக சர்ச்சுக்குள் புகுந்தவர் தன்நிலையை மாற்றிக் கொண்டு மனமாற்றம் உண்டாகி Prayer பிரார்த்தனை என்ற கவிதையை எழுதி புகழ்பெற்ற நாளிதழுக்கு அனுப்பி வைத்தார். இக்கவிதையை நாளிதழில் படித்துவிட்டு வியந்த இங்கிலாந்து இளவரசி உடனே அவரை வரவழைத்து அந்த நாட்டின் அரசவைக் கவிஞராகப் பதவி ஏற்கும்படி கூறினார். இறைவன் மேல் நம்பிக்கை மனதில் துளிர்விட்ட நிலையில் அவரது தலை எழுத்தே மாறிவிட பெயர், புகழ், செல்வம் அனைத்தையும் பெற்று உயர்ந்த நிலைக்கும். வந்தார். கடவுள் நம்பிக்கை இருந்தால் வாழ்க்கை உயரும் என்பதற்கு இந்நிகழ்வும் ஓர் உதாரணம்.

# வாசகர்களின் கேள்விகளுக்கு

ஜோதிடத் தென்றல் அஷ்ட்ரோ

# தெய்வீகன் மாரிமுத்து பதில்கள்



**செல்: 98425 21669 / 92446 21669**

*நடேசன் (எ) சிவஜெகநடேஷ் நாகர் கோவில்*

*10.5.198 இரவு மணி 9.14 தனுசு இலக்கினம் சதயம் நட்சத்திரம் 4ம் பாதம் கும்பம் ராசி*

| | | | |
|---|---|---|---|
| | சூ குரு | பு | சுக் |
| ரா சந் | இராசி | | |
| செவ் | | | கேது |
| ல சனி | | | |

| | | | |
|---|---|---|---|
| சந் | சனி | ரா பு | ல |
| | அம்சம் | | |
| | | | |
| சுக் | சூ கேது | குரு | செவ் |

*கேள்வி:* **நான் 3500க்கு மேற்பட்ட கோயில்களை கலெக்ட் செய்து 8 நோட் முழுவதும் எழுதியிருக்கிறேன். நான் முற்பிறவியில் நான் கட்டிய விநாயகர் ஆலயத்தை எனது பிரார்த்தனையால் கண்டுபிடித்து அங்கு சென்றப் போது நீ இப்பிறவியில் அந்த ஆலயத்துக்கு கோபுரம் கட்டி கும்பாபிஷேகம் செவ்வாய் என மூலவர் வலம்புரி விநாயகர் பதலித்தார் மேலும் முற்பிறவியில் நீ கட்டிய சிவாலயம் 12 ஜோதிர்லிங்கங்கலில் ஒன்று என பிரார்த்தனை கூறுகிறது அது வடஇந்தியாவில் இருக்கிறது.**

**இவ்வளவு இருந்தும் வாழ்வில் நிம்மதியில்லை. உடலிலும் மனதிலும் ஏதேனும் பிரச்சனைகளால் வாழ்க்கை கஷ்டமாக இருக்கிறது. Telecom பிரிவில் பணிபுரியும் எனக்கு Bank வேலை எப்போது கிட்டும்? இந்த 2015 to 2016 ஜோதிடம் MA படிக்க திட்டமிட்டுள்ளேன் ஜோதிடம் MA., MPhil படிக்கும் பாக்கியம் உண்டா? அடுத்ததாக மதுரையில் சித்தர் தெய்வ உபாசனை படிக்க போகவுள்ளேன் சென்றால் வெற்றிகிட்டுமா? சித்தர் சார்ந்த அனைத்தையும் கற்க பிரசன்னத்தில் அமைந்திருக்கிறது.**

**ஆனால் சில நேரம் பிரசன்னதிடமிருந்து சரியான பலன் கிடைப்பதில்லை காரணத்தை பிரசன்னதிலுமே கேட்டதற்கு ஜாதகத்தில் ,ராகு சந்திரன் இணைவு மன தடுமாற்றத்தை ஏற்படுத்தி தவறான பதிலை தரும் என பதில் வந்துள்ளது. எனினும் பலரிடம் பிரசன்னம் கற்றுக் கொள்ளமுடிகிறது. திருவருள் சக்தியில் பலன் எழுதுங்கள்?**

**பதில்:** *அன்பு நண்பர் நடேஷ்க்கு வணக்கம் உங்கள் கடிதத்தில் ஜோதிடத்தின் மீதுள்ள பற்றையும் ஆன்மிக தேடல்களை உரைமுடிந்தது குரு உபதேச இலக்கினமாகிய தனுசுவில் அவதரித்து இலக்கினாதிபதியை பஞ்சமத்தில் பாக்கியாதிபதி பெற்ற யோகக்காரரே. பாக்கியாதிபதி ஸ்ரீ சூரியன் பஞ்சமத்தில் உச்சம் ஜெகத்தினை ஜெயிக்கும் மாவீரன். இணையாக இலக்கினாதிபதி ஸ்ரீ குரு பகவான் வாழ்க்கை இரகசியம் பொதிந்த வாழ்வியல் சாஸ்திரத்தை உங்களுக்கு அருள்வார் கற்கும்போது பல குருநாதர்கள் அவர்கள் கற்றதை அவர்கள் பாணியில் கற்றுக் கொடுப்பார்கள். அவ்வாறு நாம் கற்கும்போது சில பயன் தவறாமல் போகலாம் அவை யெல்லாமே அனுபவமே அதற்காக கற்றுக் கொடுத்த குருநாதரை குறைசொல்லக் கூடாது. உங்கள் கடிதத்தில் சில குரு நாதரால் மன உளைச்சல் என்று எழுதியிருந்தீர்கள். அவர்கள் பெயரை என் கேள்வியில் தவிர்த்து விட்டேன். கற்றது கைமண் அளவு கள்ளாதது உலக அளவு. ஒவ்வொரு குருநாதரும். நம்மை வாழ்க்கையின் ஒவ்வொரு படியை ஏற்றி விடுவார்கள். சிலர் முதல் படியை ஏற்றி விட்ட குருநாதரை கடைசி வரை கைப்பிடித்து குழந்தை போல் வாழ்க்கையின் ஞானத்தையும் முக்கியும் அடைந்திருக்கிறார்கள். போகரை பின்பற்றி வாழ்ந்த புலிப்பாணி சித்தரைப்போல். சிலர் தன் எண்ணத்தியிருந்த கருத்துக்களுக்கு விடைகிடைக்க பல குருநாதர்களை தேடி அலைத்திருக்கிறார். அவர்களுக்கு ஒவ்வொரு குருவும் ஒவ்வொரு பதிலை அளித்து நிறைவில் தெளிவு கிடைக்கும் இவையெல்லாம் நாம் வாங்கி வந்த வரம்.*

*ஆனால் உங்கள் ஜாதகம் அற்புத ஜாதகம் பஞ் சாதிபதி பாக்கியதிபதி (சூரியன் உச்சம் + குரு) இணைவு இயற்கையாவே உங்களுக்கு ஜோதிட ஞானமும் ஆன்மிக ஞானமும் உள்ளது ஆகவே பரக்டிக்கலாக மற்றொருக்கு பலன் சொல்லுதல், அருள் வாக்கு சொல்லுதல், அமைந்திருக்கிறது.*

*வாக்கில் அமர்ந்து உச்சம் பெற்ற ஸ்ரீ செவ்வாய் பகவான் (பஞ்மாதிபதி) தெய்வ அருளை வாக்கின் மூலம் அள்ளி வழங்குவார். அதே போல நீங்கள் கற்ற வித்தையை ஒளிவு மறைவு இல்லாமல் எதிர்பார்ப்புகள் இல்லாமல் பலருக்கு கற்றுக்கொடுக்கலாம்.*

*சில நேரங்களில் பிரசன்னம் தடுமாற்றத்தை கொடுக்கிறது என எழுதியிருந்தீர்கள் உங்கள் குலதெய்வம் இஷ்ட தெய்வம், உபாசனை தெய்வத்தினை மனதில் நிருத்தி பிரசன்னத்தை அமைத்தால் பிரசன்னம் சரியாக பதில் வரும்.*

*சிலர் நினைப்பார்கள் ஆதரவாக பதில் வந்தால் சரியான பிரசன்னம் நினைத்த எண்ணத்திற்கு மாறாக ஆதரவு இல்லாமல் பிரசன்னம் வந்தால் சரியில்லாத பிரசன்னம் என்பார்கள். நாம் ஒன்றும் அரசியல்வாதியில்லை என்ன பலன் வந்ததோ அதை ஏற்றுக் கொண்டு செல்ல வேண்டும்.*

*3ஆம் இடத்தில் கும்பத்தில் அஷ்டமாதி*

*இருப்பது ஆயுள் தீர்க்கம் அவருடன் ஸ்ரீ இராகு பகவான் சேர்க்கை மனதில் மாபெரும் உறுதியையும் வாழ்க்கையின் உயர்நிலைக்கு இட்டு செல்லு எனினும் உங்களுக்கு 7இல் உள்ள ஸ்ரீ சுக்கிரன் பகவான் களத்திர தோஷத்தையும் 12இல் உள்ள ஸ்ரீ மாந்தி பகவான் அயன சயன தோஷத்தையும் உருவாக்குகிறார். ஆதலால் இக்கரைக்கு அக்கரை பச்சையாக தோன்றும். கிடைத்த வேலையை சரியாக பயன்படுத்துங்கள். 12இல் மாந்தி இருப்பதால் திருச்சி ஸ்ரீ ரங்கம் அம்மா மண்டபத்தில் ஸ்ரீதர் ஐயங்கரை தொடர்பு கொண்டு மாந்தி பரிகாரம் செய்துக் கொள்வது உத்தமம்*

*வருங்காலத்தில் ஆன்மிக ஜோதிடத்தின் மூலம் பலர் வாழ்வில் நம்பிக்கை ஒளியேற்றக்கூடிய நம்பிக்கை நட்சத்திரம் நடேஷ்க்கு வாழ்த்துக்கள் திருவருள் சக்தி, குருவருள் ஜோதிடம் தொடர்ந்து படியுங்கள்.*

*****

*ஊர்:பெயர் வெளியிட விரும்பாத வாசகி*

**23.12.1982 காலை 5.45. Am பூரட்டாதி 4ஆம் பாதம் விருச்சிக இராசி வியாதிபாதம் நாம யோகம்**

*ஸ்ரீ குரு பகவான்திசை 3 வருடம் 3 மாதம் 17 நாள்*

| | | | |
|---|---|---|---|
| சந் | | | ரா |
| | இராசி | | |
| செவ் | | | |
| சூ சுக் பு கேது | ல குரு மா | சனி | |

| | | | |
|---|---|---|---|
| | | செவ் | சூ |
| ல | அம்சம் | | சந் கேது |
| ரா | | | குரு |
| சனி | பு மா | | சுக் |

*கேள்வி:* **அன்பு சகோதரருக்கு வணக்கம் இக்கடிதத்தை தயங்கி தயங்கி எழுதுகிறேன். எனினும் உங்கள் பதிலை பரிகாரம் வேண்டி எழுதியிருக்கிறேன். என் கணவருக்கு உடலுறவில் நாட்டமில்லை டாக்டரிடம் காண்பித்தும் எந்த பலனுமில்லை விந்தணு குறைபாடு உள்ளது, அவருக்கு குழந்தை இருக்குமா எனக்கு 5 முறை வேறொருவருடைய விந்தனு ஊசி மூலம் செலுத்தியும் தோல்வியடைந்தது. எனக்கு எந்த குறைபாடு இல்லை என்று டாக்டர்கள் கூறுகிறார்கள். டெஸ்ட்யூப் பேபிக்கு அதிக பணம் தேவைபடும் என்று டாக்டர் கூறுகிறார்கள். ஏழ்மை நிலையில் இருக்கும் நான் அவ்வளவு பணம் செலவு செய்ய முடியாத நிலையில் இருக்கிறேன்.எனக்கு குழந்தை இருக்குமா?**

**பதில்:** *மதிப்பிற்குரிய சகோதரிக்கு நீங்கள் கேள்வியை எழுத வேண்டாம் பதில் கண்டிப்பாக வேண்டும் என்று எழுதியிருந்தீர்கள கேள்வியை எழுதாமல் பதில் எழுதமுடியாது அதலால் உங்கள் பெயர் ஊரை குறிப்பிடவில்லை. நீங்கள் தொடர்ந்து திருவருள் சக்தியில் என் கேள்வி பதிலை படித்து வந்தால் உங்களுக்கு உங்கள் கஷ்டத்திற்கு விடை கிடைத்திருக்கும். உங்கள் ஜாதகத்தின் குறிப்பை எழுதுபோதே பிறந்த நேரத்தின் யோகம் வியாதீபாதம் என்று எழுதியிருந்தீர்கள. உங்களுக்கு உள்ள சோதனைகளுக்கு முதல் காரணம் இந்த வியாதிபதி நாம யோகமே ஆகையால் வியாதிபாத யோகத்தின் நாயகர் ஸ்ரீ கிருஷ்ணர் பகவான். ஆகையால் என குல தெய்வத்தை நினைத்து கிருஷ்ண ஜெயந்தி அன்று உங்களுக்கு பிரசன்னம் பார்த்து உங்கள் கேள்விக்கு பதில் எழுதுகிறேன். பிரசன்னத்தில் திருப்பதி ஸ்ரீ வெங்கடாசலபதியே தரிசித்து பின் குருவாயூருக்கு சென்று ஸ்ரீ குருவாயூரப்பனுக்கு கணவன் மனைவி உங்கள் இருவர் எடைக்கு எடை. பழங்கள் கொடுத்து வாருங்கள். வெகு விரைவில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா உங்களுக்கு குழந்தையாக வந்து பிறக்கும்.*

**ஓம் தேவகீ ஸீத கோவிந்த வாஸுதே ஜகத்பதே**
**தேஹீமே தனயம் க்ருஷ்ணத் வாமஹம் ஸரணம் கத**

*என்ற மந்திரத்தை தினமும் 108 முறை கணவன் மனைவி இருவரும் பாராயணம் செய்து வாருங்கள். உங்களுக்கு குழந்தை செல்வம் கிடைக்க திருவருள் சக்தி. குருவருள் ஜோதிடம் ஜோதிட ஆன்மிக ஆசிரியர்கள் உங்களுக்காக பிரார்த்தனை செய்கிறார்கள்.*

*****

*அகிலா விழுப்புரம்*

*11.7.1976 ஞாயிறு மதியம் 12.20 மணி பூராடம் நட்சத்திரம் 3ஆம் பாதம் தனுசு இராசி சுக்கிரன் பகவான் திசை 6 வருடம் 8 மாதம் 23 நாள்*

| | | | |
|---|---|---|---|
| | கேது | குரு | சூ பு |
| | இராசி | | சுக் சனி |
| | | | செவ் |
| சந் மா | | ரா | ல |

| | | | |
|---|---|---|---|
| | பு | சூ மா | செவ் |
| ரா | அம்சம் | | சுக் |
| குரு | | | கேது |
| | | சந் சனி | ல |

*கேள்வி:* **நான் MCA படித்து சென்னையில் பணிபுரிந்து பின் வெளிநாட்டிலும் பணிபுரிந்து தற்போது சென்னையில் தொழில் செய்து வருகிறேன். தொழிலிலும் வாழ்க்கையிலும் பல ஏமாற்றங்களை சந்தித்து வருகிறேன். ஏமாற்றங்கள் தவிர்க்க நான் என்ன செய்ய வேண்டும் மீண்டும் வெளிநாடு செல்வேனா?**

**பதில்:** *கன்னிய இலக்கினம் பூராட நட்த்திரம் தனுசு இராசி தற்போது ஸ்ரீ இராகு பகவான் திசை தனஸ்தானத்தில் அமர்ந்த சுய சாரம் வாங்கியுள்ளார் கோமேதகம்* **Stone** *வங்கி அனிந்துக் கொள்ளுங்கள் ஏமாற்றங்களை தவிர்க்கலாம். எதிர்பார்த்த வருமானங்களும் கிடைக்கும் தொழில் போட்டிகளை சமாளிக்க மரகதபச்சை* Stone *அணியுங்கள். தொழில் ஸ்தானத்தில் அமர்ந்த ஸ்ரீ புதன் பகவான் தொழில் துறையில் சிறப்பிக்கச் செய்வார்.*

*சந்திரன் மாந்தி மன குழப்பத்தைக் கொடுப்பார் எனினும் இந்த இரண்டு* **Stone** *உங்களை காப்பாற்றும் 12ஆம் வீட்டில் அமர்ந்த செவ்வாய் உங்களை வெளிநாட்டிற்கு மீண்டும் அழைத்துச் சென்று குடி அமர வைப்பார் ஸ்ரீ பழநி முருகப் பெருமானுக்கு வேண்டுதல் வையுங்கள்*

**ஸ்ரீ சண்முக மந்திரமான்**
**ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம்**
**கவாம் காமதேனுவே நமஹ**

*தினமும் 108முறை பாராயணம் செய்யுங்கள் எல்லா வளமும் கிடைக்கும்.*



# பழமொழிகள் உணர்த்திடும் வாழ்வின் வழிமுறைகள் ③



எல்.என். விஜயசாரதி அய்யங்கார்
செல்: 90035 86186/ 93446 05966

**55. "களிமண்ணில் பிள்ளையார் போல் பிடிக்க முயல, இறுதியில் அது குரங்கு போல் ஆனது"**

*பொருள்: குறிப்பிட்ட காரியத்தில் இறங்கும் முன்னர், மகாகணபதியை முதலில் வழிபட்டு, பின்னர் இஷ்ட தெய்வத்தை வழிபடவும். இறுதியில் அனுமனை துதித்துவிட்டு செயலில் இறங்கினால் நிச்சயம் வெற்றி உண்டு. சித்தர் பாடல் ஒன்றில் "வேழத்தானையும், மூழத்தானையும் சிதறுகாய் கொண்டு வழிபடின் வெற்றி நிச்சயம்" எனச் சொல்லப்பட்டுள்ளது. (வேழம் — யானை, மூழம் — குரங்கு) "நீ செய்த காரியம் என்னாச்சு?" என ஒரு பெரியவர் நடுரோட்டில் விசாரிக்க; மற்றவர் கண்திருஷ்டி ஏற்படாதிருக்க இன்னொருவர் சொன்ன பதில்: "பிள்ளையார் பிடிக்க, குரங்கா முடிஞ்சது".*

**56. "இடுகதிர்சேய் கூடிநிற்பின், வாலிபத்தில் அமங்கலை ஆவாள்"**

*பொருள்: கன்னி ஒருத்தி ஜாதகத்தில் சூரியனும், செவ்வாயும் கூடி ஒரே இராசியில் அல்லது பாகை அளவில் அஸ்தமனமாகி வெவ்வேறு இராசிகளில் இருந்தாலோ அப்பெண் இளம் வயதிலேயே கணவனை இழந்து விதவை ஆவாள். இலக்கினம், 2ஆம் இடம் 7,8,4,12ஆம் இடங்களே மேற்சொன்னதுக்கு பொருந்தும். பரிகாரமாக 24 வயது முடிந்த பின்னர் திருமணம் செய்யவும்.*

**57. "அர்த்த வித்யை, அனேக அனர்த்தம்" (பாழ்)**

*பொருள்: அரைகுறை கல்வி அல்லது தொழிற்பயிற்சி ஏகப்பட்ட குழப்பங்களுக்கு வழிவகுக்கும். இப்படிப்பட்டவர்களாலேயே, "எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான், பாடினவன் பாட்டைக் கெடுத்தான்" என சொல்லும்படி ஆனது. "விசயம் எதுவாயினும், முழுமையாகத் தெரிந்துக் கொள்ளும் வரை வாயைத் திறக்காதே" என்பது தான் பெரியோர் வாக்கு.*

**58. "பாத்திறமறிந்து பிச்சையிடு! கோத்திரமறிந்து பெண்ணைக் கொடு!!"**

*பொருள் பா பாடல், திறம் — உண்மைப் பொருள், பிச்சை — வெகுமதி. புலவன் பாடும் பாடலின் உண்மைப் பொருள் உணர்ந்து, அதற்கேற்ப பரிசுப்பொருள் மன்னன் தரவேண்டும். திருமணத்திற்கு மணமகன், மணமகள் தேடும்போது, ஒரே முனிவர் வழி கோத்திரத்தில் தேர்ந்தெடுப்பதில்லை. (காரணம்: அண்ணன் தங்கை உறவுமுறை என்பதால்). மாற்றுக் கோத்திரமே தேர்வு செய்வர். இதனையே கோத்திரமறிந்து பெண்ணைக் கொடு என்கின்றனர்.*

**59."நீறில்லா நெற்றி பாழ்! குரு இல்லா வித்தை பாழ்!!"**

*பொருள்: கடவுள் நம்பிக்கை உடையவர் யார் ஆயினும், தினசரி இருவேளை தனது முகத்தில் நெற்றியிலே திருமண் காப்பு (நாமம்) சந்தனம் விபூதி குங்குமம் இடுதல் தொட்ட காரியம் வெற்றி பெற உதவும். நீறில்லா நெற்றி உடையவன், சோகம் அடைவான். முறைப்படி கல்வியை ஆசிரியர் மூலமாகவும் மற்றும் முறைப்படி தொழிற்பயிற்சியை, பயிற்சியாளர் மூலமாகவும் கற்காதவன் செய்யும் செயலும், பேச்சும் வீணாகப் போகும்.*

**60."பாம்பென்றால் படையே நடுங்கும்"**

*பொருள்: இருப்பதில் மிகப்பெரியது ஆயுதங்களுடன் கூடிய மனிதர் கூட்டம். படை என்கிறோம். அதுவே, பாம்பெனில் நடுங்கும் என்பது எதனால்? "வேறென்ன! முதல் கடி யார் வாங்குவது? என்கிற பயத்தில் தான். கடித்தால் உயிர் போய்விடுமே என்பதனால் தான்.*

**61. "சனிப்பிணம் தனிப் போகாது!"**

*பொருள்: சனிக்கிழமை ஸ்திர (நிலையான) வாரம் ஆகும் சனி விருத்தி (வளரும்) எனவே*

*தான் (அசுப) கரும காரியம் வளரக்கூடாது என்பதற்காக சனியன்று புறப்படும் பிணத்துடன் ஒரு கோழியையும் அறுத்து கட்டிவிட்டு அனுப்புவர். பிராமின் இனத்தவர் சந்தன கட்டையை சேர்த்து அனுப்புவர்.*

### 62. "குளிகன் பிணமும் தனிப் போகாது !"

*பொருள்: தினமும் குளிகன் வேளை என குறிப்பிட்ட நேரத்தை வைத்துள்ளனர். எந்தக்கிழமை எனினும், குளிகனில் வீட்டை விட்டு பிணத்தை வெளியே அனுப்புவதில்லை என்பது மிகப் பெரிய உண்மை ஆகும்.*

### 63. "ஏகாதசி மரணம், துவாதசி தகனம்"

*பொருள்: இந்துக்களின் மத நம்பிக்கை சார்ந்த விஷயம் விரும்பும் நேரத்தில் உயிரை விடும் வரம் பெற்றிருந்த மகாபாரத பீஷ்மர், தேவர்களின் பகற்பொழுது தொடங்கும் உத்தராயண புண்ய காலத்தில் (தை மாத தொடக்கத்தில்), வைகுந்த ஏகாதசி நன்னாளில் உயிரை விட்டார். மறுநாள் துவாதசியில் எரியூட்டப்பட்டார். சொர்க்கம் அல்லது வைகுந்தம் சென்றார். நாமும் அதுபோல் ஏகாதசியில் மரணம் அடைந்து, துவாதசியில் தகனம் செய்யப்பட வேண்டும்.*

### 64."பகலில் பார்த்துப் பேசு ! இரவில் அதுவும் பேசாதே !"

*பொருள்: பகலில் வெளிச்சம் அதிகம். அக்கம்பக்கம் பார்த்து நிதானமாக, மெதுவாக பேசுவது எளிது. ஆனால், இரவில் இருட்டு அதிகம். இருட்டுக்கும் பார்க்கின்ற விழிகள் உள்ளதாலும், சுவற்றுக்கும் கேட்கின்ற காதுகள் உள்ளதாலும் எதுவும் பேசாதே! என சொல்கின்றனர்.*

### 65. "பெருமாளுக்கு முன்; சிவனுக்கு பின் !"

*பொருள்: நமது முன்னோர்கள் கோயிலில்லா ஊரில் வாழ்ந்தது இல்லை. கிழக்கு அல்லது வடக்கு பார்த்து வீட்டைக் கட்டி வாழ்ந்தார்கள். பெருமாள் கோயில் இருப்பின்; கோயிலுக்கு முன்பாக தெரு அமைத்து வீடு கட்டி வாழ்ந்தனர். பெருமாள், லட்சுமி (சாத்வீகம்) சாந்தம் என்பதனால். சிவன் (ருத்ரன்) கோயில் இருப்பின்; கோயிலுக்கு பின்பக்கத்தில் வீடுகள் கட்டி வாழ்ந்தனர். உக்ரக — கோப அம்சம் என்பதனால்.*

### 66. "ரோசம் உள்ளவனுக்கு பணத்தைக் கொடு ! அது இல்லாதவனுக்கு பெண்ணைக் கொடு".

*பொருள்: தன்மானம், சொல் பொறுக்காதவன், கௌரவம் பார்ப்பவன் — நாணயம் உள்ளவனாக இருப்பதால் தாராளமாக அவனை நம்பி கடனுக்கு பணத்தைக் கொடு. சொன்ன தேதியில் வட்டியுடன திருப்பி செலுத்திடுவான். நடைமுறை வாழ்க்கையின் யதார்த்தம் அறிந்தவனாய், ரோசமில்லாமல் இருப்பவனைக் கண்டுபிடித்து அவனுக்கு உன் பெண்ணைத் திருமணம் செய்து வை. நல்லவிதமாய் குடும்பம் நடத்துவான்.*

### 67."வைத்தியனுக்கு கொடுப்பதை விட, வாணியனுக்கு கொடுப்பது மேல்"

*பொருள்: வியாதி வந்தபின், வைத்தியனுக்கு கட்டுக்கட்டாய் பணத்தைத் தருவதை விட; வியாதி வராதிருக்க எண்ணெய் வியாபாரிக்கு பணம் தருவது எவ்வளவோ மேல் (நல்லது). அஃதாவது, வேதனையுடன் பணச்செலவு டாக்டருக்காக, வேதனை இல்லாமல் பணச்சிலவு வாணியனுக்காக.*

### 68. "குரு பற்றிய பாடல்"

**"ஜென்மராமர் வனத்திலே சீதையை சிறைவைத்ததும்,**
**தீதிலாதொரு மூன்றிலே துரியோதனன் படைமாண்டதும்,**
**இன்மையெட்டினில் வாலிபட்டமிழந்து போம்படியானதும்,**
**ஈசனாரொரு பத்திலே தலையோட்டிலே இரந்துண்டதும்,**
**தர்மபுத்தர் நாலிலே வனவாசமப்படி போனதும்,**
**சத்ய மாமுனியாறிலே யிருகாலிலே தலைபூண்டதும்,**
**வன்மையுற்றிட ராவணன்முடி பன்னிரண்டில் வீழ்ந்ததும்**
**மன்னுமா குருசாரி மாமனை வாழ்விலா துறுமென்பவே".**

*பொருள்: 1. ஜென்ம இராசியில் குரு:— ஸ்ரீராமர் காட்டிற்கு போனதும், மேலும் மனைவியைப் பிரிந்ததும், சராசரி மனிதர்க்கு வீடு, ஊர், நிலை மாற்றம் ஏற்படும் அல்லது குடும்பத்தில் கலகம் அல்லது மந்தமான நிலை.*

*2. இராசிக்கு 3இல் குரு: துரியோதனன் இனத்தாருடன் மாண்டான். சராசரி மனிதர்க்கு காரியத்தடை, பதவிஇழப்பு, இரத்த சம்பந்தமுள்ள தீட்டு, கௌரவ பாதிப்பான செயலில் ஈடுபடுதல்.*

*3. இராசிக்கு 8இல் குரு: வாலி பட்டமும், உயிரும் இழந்தான். சராசரி மனிதர்க்கு புகழ் இழப்பு, நிலைமாற்றம், நோயினால் அவதி, வீண் பழி, பணம் — தங்கம் இழக்கும் நிலை, மரணம்.*

*4. இராசிக்கு 10இல் குரு—: சிவனே மண்டையோட்டில் பிச்சை எடுத்து சாப்பிட்டார். சராசரி மனிதர்க்கு பதவி இழப்பு, இலாக்கா அல்லது இடமாறுதல், உணவு ஜீரணம் ஆகாமல் அவதி.*

*5. இராசிக்கு 4இல் குரு: தர்மபுத்ரர் ஒன்றுவிட்ட சகோதரன் துரியோதனனால் காட்டிற்கு போனார். சராசரி மனிதர்க்கு இடம் மாறுதல், மனைவி மற்றும் சகோதரரால் துன்பம் ஏற்படும்.*

*6. இராசிக்கு 6இல் குரு:— சத்யமா முனியின் காலிலே விலங்கு இடப்பட்டது. சராசரி மனிதர்க்கு பகை, கடன், வியாதி என்க. தகராறு, போலீஸ், கோர்ட், ஜெயில் எனவும் சொல்லலாம்.*

*7. இராசிக்கு 12இல் குரு: இராவணன் கிரீடம் மண்ணில் வீழ்ந்தது. சராசரி மனிதர்க்கு தூரதேசம் போதல், மரணத்திற்கு சமமான அவமானம் அல்லது கண்டம், பணநட்டம், அரசியல் பதவியில் இருப்போர்க்கு பதவி இழப்பு.*

**தொடரும்...**

# சர்க்கரை நோயை குணமாக்கும் தபசுமலை முருகன்


5



அறந்தாங்கி சங்கர்
செல்: 9444 160161

**தல வரலாறு:** புதுக்கோட்டை மாவட்டம் தபசு மலையில் அருள் புரியும் அழகு முருகனுக்கு பாலதண்டாயுதபாணி என்று பெயர். ஒரு காலத்தில், முனிவர்கள் இங்கே வேல் வைத்து வழிபட்டுள்ளனர். அந்த வேலைக் கண்டு சிலிர்த்த மக்கள், அந்த இடத்தில் முருகப்பெருமானுக்கு விக்கிரம் அமைத்துப் பிரதிஷ்டை செய்து, கோயில் எழுப்பி வழிபடத் துவங்கினார்கள் என்கிறது தல வரலாறு.

**தல பெருமை:** இந்த கோயிலின் முக்கியமான விசேஷம்.. மூலிகை கலந்த பிரசாதம். இந்தப் பிரசாதத்தை உட்கொண்டால், சர்க்கரை நோய் குணமாகும், குடல் புண்ணில் இருந்து விடுபடலாம், வலிப்பு போன்ற நரம்புத் தளர்ச்சி நோயையும் இது கட்டுப்படுத்துகிறது எனச் சொல்லி சிலிர்க்கின்றனர் பக்தர்கள். கிரக தோஷம் மற்றும் நாக தோஷம் உள்ளவர்களுக்கு இங்கே முருகப்பெருமானின் சன்னதியில் சிறப்பு யாகம் செய்யப்படுகிறது. இதில் கலந்துக் கொண்டு தரிசித்தால், விரைவில் தோஷங்கள் யாவும் விலகும். இங்கேயுள்ள சொர்ண ஆகர்ஷண பைரவர் ரொம்பவே சக்தி வாய்ந்தவர். பக்தர்கள் தங்களின் பிரார்த்தனைகளை ஒரு சீட்டில் எழுதி வைத்தால், அந்தக் கஷ்டங்களை உடனே



தீர்த்து வைத்துவிடுவாராம் பைரவர். இவரிடம் வேண்டிக்கொண்டு, கடன்தொல்லையில் இருந்து மீண்டு வந்தவர்கள் ஏராளம் என்கின்றனர். பக்தர்கள். கந்த சஷ்டி நாளின்போது விரதம் மேற்கொண்ட பெண்கள், ஒரேயொரு முறை தபசுமலைக்கு வந்து முருகப்பெருமானைத் தரிசித்து விளக்கேற்றிப் பிராத்தித்தால், விரைவில் கல்யாண வரம் கைகூடும் என்பது ஐதீகம் பிள்ளை வரம் வேண்டுவோர், முருகக் கடவுளின் திருப்பாதத்தில் வைத்து பிரசாதமாகத் தரப்படும் எலுமிச்சைப் பழத்தைச் சாறாக்கிச் சாப்பிட. குழந்தை பாக்கியம் விரைவில் கிடைக்கும் என்பது நம்பிக்கை. மலையடிவாரத்தில் சப்தரிஷிகள் வழிபட்ட இடத்தில், குடைவரைக் கோயிலும் உள்ளது. இந்த இடத்தில் ஐந்து நிமிடம் தியானித்து கந்தக் கடவுளை வணங்கினால், ஞானமும் யோகமும் கைகூடும் என்பது உறுதி.

சர்க்கரைநோய் குணமாகவும், குடல் புண்ணில் இருந்து விடுபடவும், வலிப்பு என்ற நரம்புத் தளர்ச்சி நோயை கட்டுப்படுத்தவும், கிரக தோஷம் மற்றும் நாக தோஷம் விலகவும், கடன் தொல்லையில் இருந்து விடுபடவும், கல்யாண வரம் கைகூடவும், குழந்தை பாக்கியம் கிடைக்கவும் பக்தர்கள் இங்குள்ள முருகப் பெருமானை மனதார பிரார்த்தனை செய்கின்றனர்.

மலையடிவாரத்தில் சப்தரிஷிகள் வழிபட்ட இடத்தில் குடவரை கோயில் உள்ளது.

வேண்டுதல்கள் நிறைவேறிய பக்தர்கள் இங்குள்ள முருகப்பெருமானுக்கு நாகர் விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்தும், விளக்கேற்றியும் தங்களது நேர்த்திக்கடனைச் செலுத்துகின்றனர்.

அருள்மிகு பாலதண்டாயுதபாணி திருக்கோயில், காலை 6 மணி முதல் மணி 10 வரை மால 5 மணி முதல் இரவு 9மணி வரை திறந்திருக்கும்.




# அப்ஸரா நாவல்

## மகிழ மலையா? மர்ம மலையா?

நாவலாசிரியர்- **லக்ஷ்மி ராஜரத்தினம்**

## பதிப்பாசிரியரின் பரிந்துரை

**திருவருள் சக்தி, குருவருள் ஜோதிடம்** குழுமத்தின் அப்ஸரா நாவல் இதழின் படைப்பான "மகிழ மலையா? மர்ம மலையா?' நாவலைப் படைத்தவர் திருமதி லக்ஷ்மி ராஜரத்தினம். இவரின் பல அரிய படைப்புகள் வாசகர்களின் அமோக ஆதரவைப் பெற்றவை. சமீபத்தில் "அப்ஸரா நாவல்" வெளியிட்ட "உறவுகள் தொடர்கதை" நாவலுக்கு கிடைத்த வாசகர்களின் பாராட்டுகள் அவரை ஊக்கப்படுத்தி ஆக்கத்தை கொடுத்தமையால் உருவானதே இந்த நாவல்.

**மகிழ மலையா? மர்ம மலையா?** நாவல், ஜமீன்தாரின் வாரிசை வெளிப்படையாக வெளிப்படுத்த முடியாத சூழ்நிலையில் வளர்த்து ஆளாக்கி சூழ்ச்சி கூட்டங்களில் இருந்து காப்பாற்றி ஜமீனைக் கைப்பற்றுவதே கதையின் மூலக்கரு. அமானுஷ்ய நிகழ்வுகளுடன் திகில் நிறைந்த கதையின் உயிரோட்டம் அடுத்து என்ன ஏற்படப் போகிறது என்ற எதிர்ப்பார்ப்போடு கதையின் வேகத்தை சிறப்பாகக் கொண்டு செல்வதுடன் கதையின் முடிவு எப்படி இருக்கும் என்பதை யூகிக்க முடியாத அளவிற்கு லக்ஷ்மி ராஜரத்தினம் அவர்கள் எடுத்துச் செல்வது சிறப்பான அம்சம். கதையின் வேகம் கருத்துக்கு வியூகம். தீர்ப்பை தீர்மானிக்க வைத்திடும் உங்கள் மதியூகம். படித்துப் பாருங்கள் மலைத்துப் போவீர்கள் மகிழ மலையா? மர்ம மலையா? அதை உணர்ந்துக் கொண்டால் உங்கள் மனம் முழுவதும் வீசிடும் மகிழ மணம் பாராட்ட தூண்டிடும் உங்கள் குளிர்ந்த குணம்.

இந்த நாவலைப்படித்த வாசகர்களின் கருத்துக்களை செல் 89258 26347 என்ற எண்ணில் தொடர்புக் கொண்டு திருமதி **லக்ஷ்மி ராஜரத்தினம்** அவர்களுடன் உங்கள் கருத்துக்களை பகிர்ந்துக் கொள்ளலாம். அவர்களின் எழுத்துக்கு ஏற்றம் கொடுக்கலாம். உங்கள் வாழ்க்கையில் நல்ல மாற்றம் பெறலாம்.



உங்கள் அன்புச் சகோதரி

**இராதா இராஜு** ஆசிரியர்

**இப்போது விற்பனையில்**




**உங்கள் அருகில் உள்ள கடைக்காரர்களிடம் கேட்டு வாங்குங்கள்**

**மேலும் விவரங்களுக்கு: அப்ஸரா பப்ளிகேஷன்ஸ் 18/67, பி.வி. கோயில் முதல் தெரு, புதுப்பேட்டை, இராயப்பேட்டை, சென்னை 600 014. Ph: 044-2811 6770 / Cell: 72999 21880**

# பித்ருக்களே சத்ருகளாகிடும் பிரதான நிலை





கே. குமார சிவாச்சாரியார்
செல்: 91765 39026

பதினெண் புராணங்களில் ஒன்றாக வரும் கருடபுராணத்தில் ஆன்மா, கர்ம வினைகள் சிறப்பு அதற்குப் பிறகு வரும் நிலைகள் மறுபிறவி மோட்சப் பற்றி விளக்கப்பட்டுள்ளது.

ஓர் ஆண்மகன் கேட்கிறான். இன்று காலை டெல்லி, நாளை காலை USA மதியம் சிங்கப்பூர் என்று பிசியாக பிசினஸ் விஷயமாகப் பறந்துக் கொண்டிருக்கிறேன் அப்பா அம்மா சிரார்த்தத்தை பித்ரு வழிபாட்டை எப்படிச் செய்ய முடியும்? என்கிறான்.

பித்ருக்களுக்கு அமாவாசை மற்றும் திதி நாளில் சிரார்த்தம் செய்யாதவர்களுடைய இரத்தத்தை பித்ருக்களே குடிநீர் போல எடுத்து உறிஞ்சுவர் என்கிறது சாஸ்திரம். ஆகவே, நம் முன்னோர்களை அவரவர் நாளில் நினைத்து எள் தர்ப்பணம் பிண்டப்ரதானம், தானங்கள் செய்து விட வேண்டும்.

மகாபாரதத்தில் உள்ள அனுசாசன பருவப்பகுதியின் 143வது சுலோகத்தில்

**தந்யம் யசஸ்யம் ஆயுஷ்யம் ஸ்வர்க்யம் சத்ரு விநாச நம் குல ஸந்தாரகம் சேதி ச்ரார்த்த மாஹீர் மநீஷிண;**

இதன் பொருள் பித்ருக்களை எண்ணி செய்யப்படுகிற தர்ப்பணம், பொருள், புகழ், ஆயுள்நிலை, சொர்க்கபோகம் முதலியவற்றை தரும்.

மாதத்திற்கு ஒரு முறை அமாவாசை அன்று எள் தர்ப்பணமும் முன்னோர் இறந்த திதி நாளில் சிரார்த்தமும் அவசியம் செய்ய வேண்டும். அவ்வாறு செய்ய முடியாதவர்கள் திதி நாளைச் செய்தல் வேண்டும். ஒரு வருடத்து திதி நாளை விட்டு விட்டால் ஆடி, தை, மாளய அமாவாசை தினத்தில் எள் தர்ப்பணம் செய்து புனித குளக்கரைகளில் பிண்ட பிரதானத்தை மூன்று தலைமுறைக்கு வைத்து விட்டு ஆடை அல்லது அன்னதானம் செய்தல் அவசியம்.

இதைத்தான் சொல் வழக்கில், ஆடிப் போனவனுக்கு ஆடி அமாவாசை, தடுமாறி விட்டவனுக்குத் தை அமாவாசை, மறந்து போனவருக்கு மாளய அமாவாசை என்று சொன்னார்கள், ஆம்! வரும் காலங்கள் மகாளய அமாவாசை அனைவராலும் பித்ரு பூஜையாகக் கொண்டாடப்படுகிறது. அதை மறவாமல் ஆன்ம சுத்தியோடு செய்ய வேண்டும்.

**பித்ருக்களை மதியாது ஒதுக்கினால் அவர்களே நமக்கு சத்ருக்களாகி விடுவார்கள்.** நம்மோடு சந்தோஷமாக வாழ்ந்தவர்கள் பித்ருக்களாக விண்ணுலகம் செல்கிறார்கள். அவர்கள்

வாழக்கூடிய சூழ்நிலை அங்கு இருக்காது. அங்குள்ள யமகிங்கரர்கள் எமதர்மனின் அனுமதியைப் பெற்றுத் தந்து புரட்டாசி மாதம் பௌர்ணமி திதி முதல் அமாவாசை வரை பூமிக்குச் சென்று உறவினர்கள் தரும் பல்வேறு உணவு வகைகளை உண்டு மகிழ்ச்சியாக 15 நாட்களைக் கழித்து விட்டு வாருங்கள் என்று அனுப்பி வைப்பார்கள் என்பது ஐதீகம் அவர்களுக்கு உணவு வகைகளைவிட எள்ளும் நீரும் தர்ப்பையில் அவர்களை வர்ணித்து விடுவது தான் அவசியம் தேவை. எனவே அந்த 15 தினங்களில் உங்கள் தாய் தந்தையர் திதி நாளிலும் மகாளய அமாவாசையிலும் தர்ப்பணம் பிண்டமளிப்பதும் முக்கியம். பித்ருக்களை மதியாமல் ஓரம் கட்டினால் வாழ்க்கையில் எதிரித்தொல்லைகள் ஆயுத பயம் புத்திரப் பிராப்தி இல்லாமை, வருமானம் இல்லாத வறுமை ஆண், பெண்களுக்குத் திருமணத்தடை ஆகியன ஏற்பட வாய்ப்புகள் உண்டு. ஒருவருடைய ஜனன ஜாதகத்தில் சூரியன், சனி பித்ரு தோஷத்தை எடுத்துச் சொல்கிற ஆதிபத்யம் உடைய கிரஹங்களாக விளங்குகின்றனர்.

தர்ப்பணம் சிரார்த்த கர்மா, பிண்டம் அளித்தல் ஆகியன செய்து விட்ட பிறகு தானங்களாக குதிரை, யானை, எள்ளு, பசு, தேர் அன்னம், வீடு, கன்னிகை, தங்கம், ரத்தினம் ஆகியவற்றைச் செய்வதற்கு மகாதானம் என்று பெயர். நாம் எளிமையாக ஆடை, நீர் உள்ள சொம்பு, விசிறி மனைப்பலகை, காசுகள், தேங்காய் இவற்றைத் தானமாகக் கொடுக்கலாம்.

தர்ப்பணம், சிரார்த்தம் செய்யும் போது ருத்ராட்சம் அணிந்துக் கொண்டு செய்தால் அதற்கு 10 மடங்கு பலன் உண்டு.

பித்ரு கர்மா செய்ய வேலையின் நிமித்தமாகத் தடைகள் ஏற்பட்டாலும் அசந்தர்ப்பமாக வனாந்தரங்களில் இருக்க நேரிட்டாலும் யாருக்காவது அன்னம் தானம் செய்யலாம். எள்+காசு தானம் கொடுக்கலாம். பசுவுக்கும் புல் கொடுத்துப் பித்ருக்களை வேண்டலாம். புனித புஷ்கரணி (தீர்த்தங்களில்) எள் தர்ப்பணம் செய்யலாம்.

**மணிகர்ணிகாவில் மாயை செய்வீர்!** பித்ரு வழிபாட்டில் முக்கிய நாளான மாளய பட்சத்தில் யாருக்குமே தெரியாத விஷயமாக இந்த மணிகர்ணிகாவில் மாளய தர்ப்பணம் செய்வது தெரியாமல் இருக்கிறது. நம் கர்ம பூமியான இந்திய தேசத்தில் மதுரை திருப்புவனத்திலும், வேதாரண்யம் தர்பாரண்யேஸ்வரர் சிவாலயத்திலும் திருச்சி திருவெள்ளறை பௌண்டரீகப் பெருமாள் ஆலயத்திலும் சென்னை பல்லாவரம் அருகில் உள்ள திருநீர்மலையிலும் மணிகர்ணிகா திருக்குளங்கள் உள்ளன. இங்கே சென்று, எள்தர்ப்பணம் செய்து பித்ருக்களை வழிபட்டு சூரியனது ஆதிக்கம் உடைய ஆண்டான இந்த வருடத்தில் பித்ரு துதியை மும்முறை கூறி ஆசி பெறுங்கள்.

பொக்கிஷமான இந்த பித்ரு வணக்கத்துதியை பிரம்மாவே கூறுவதாக வருகிறது.

**ஓம் நம; பித்ரே ஜன்மதாத்ரே ஸர்வ தேவ மயாயச**
**ஸீகதாய பிரசன்னாய சுப்ரீதாய மகாத்மனே**
**ஸர்வ யக்ஞ ஸ்வரூபாய ஸ்வர்க்காய பரமேஷ்டினே**
**ஸர்வ தீர்த்தாவ லோகாய கருணா சாகராயச**

**நம: ஸதா ஆசுதோஷாய சிவரூபாயதே நம;**
**ஸதா அபிராத க்ஷமினே ஸீகாய ஸீகதாயச**
**துர்லபம் மானுஷமிதம் யேந லப்தம் மயாவா;**
**ஸம் பாவனீயம் தர்மார்த்தே தஸ்மை பித்ரே நமோ நம;**

**தீர்த்த ஸ்நான தபோ ஹோமம் ஜபாதி பஸ்ம தர்ஸனம்**
**மஹா குதோஸ்ச குரவே தஸ்மை பித்ரே நமோநம;**
**யஸ்ய ப்ராணாய ஸ்தவனாத் கோடீச பித்ரு தர்ப்பணம்!**
**அஸ்வமேத சனத ஸ்துல்யம் தஸ்மை பித்ரே நமோ நம;**

இந்த மகா ஸ்துதியை பித்ருக்களை நினைத்து ஒவ்வொரு மாதமும் மணிகர்ணிகா தீர்த்தக்கரைக்குச் சென்று 12 மாதங்கள் தாம்பூலம் எள் வைத்துச் சொல்லி விட்டால் அவர்கள் ஆசீர்வாதத்தால் குடும்பத்தில் தடைகள் விலகி சம்பத்துக்கள் ஏற்படும். மேலும் பவானி கூடுதுறை, திருவரங்கம் அம்மா மண்டபம், கோடியக்கரை சனீஸ்வரவாசல் விருத்த கங்கை, காவிரிக்கரை திருராமேஸ்வரம் ஆகிய தலங்களிலும் சென்று பித்ரு வழிபாடு செய்யலாம். ●

**கேள்விகள் கேட்க விரும்பும் வாசகர்கள் தங்கள் ஜாதக நகலுடன் பிறந்த தேதி, நேரம், இடம் மற்றும் தங்கள் முகவரி, தொலைபேசி எண்ணையும் குறிப்பிட்டு கீழ்க்காணும் திருவருள் சக்தி அலுவலக முகவரி கூப்பனை ஒட்டி அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம்.**

அனுப்பவேண்டிய முகவரி

**Astro தெய்வீகன் மாரிமுத்து ஜோதிட கேள்வி பதில்**

**திருவருள் சக்தி, 18/67, பி.வி. கோவில் முதல் தெரு, புதுப்பேட்டை இராயப்பேட்டை, சென்னை 600 014.**

| | | | |
|---|---|---|---|
| கேது | சந் | | |
| | இராசி 01.10.2015 அதிகாலை 12.01க்கு கிரகநிலை அமர்வு | | |
| | | | குரு செவ் பு சுக் |
| | சனி | | சூ ரா |

# அக்டோபர் மாத இராசி பலன்கள்

**1102015 புரட்டாசி 13ஆம் தேதி முதல் 31102015 ஐப்பசி 14ஆம் தேதி வரை**

18.10.2015 சூரியன் துலாம் இராசி மாற்றம் | 9.10.2015ல் புதன் கன்னி இராசி மாற்றம் 26.10.2015ல் புதன் துலாம் இராசி மாற்றம் |




*புலிப்பாணி*

**மு. இளங்கோ**

**Cell: 98943 85933**


## மேஷம்

நடசத்திரம்: அசுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

செய்யும் காரியங்களில் தீவிர முயற்சியுடன் துடிப்பாகவும் செயல்படக்கூடிய மேஷம் இராசி நேயர்களே உங்களுக்கு இம்மாதம் வீட்டில் பிள்ளைகள் வகையில் சுபவிரைய செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. காதல் விவகாரங்களில் ஈடுபட்டு அல்லது உதவி செய்வதன் மூலம் வீண்பகை, சண்டை சச்சரவுகளை சந்திக்க நேரிடும். இம்மாதம் முற்பகுதியில் சூரியன் மற்றும் சுக்கிர, இராகு, குரு ஆகிய கிரகங்களின் கோட்சார சஞ்சாரம் நன்மைகளையும் சுகபோகங்களையும் செய்யும். சிம்மத்தில் ஏற்பட்டுள்ள குரு, செவ்வாய் சேர்க்கை பூர்வீக குடும்ப வியாபாரம், விவசாய தொடர்பு தொழில சில இலாபம் தரும், சமுதாய தொடர்பு கோவில் திருப்பணி பொறுப்புகளை தலையேற்று செயல்படக் கூடும்.

**குடும்பம்:** கணவன், மனைவி உறவுகளில் அடிக்கடி வீண் தாக்கம் உண்டாகும். இரண்டாவது திருமணம் முயற்சி செய்பவர்கள் பொறுமையுடன் செயல்பட வேண்டும்.பூர்வீக சொத்துகளில் பாகபிரிவினை செய்ய வேண்டாம். மனைவியின் உடல் நலம் பாதிப்பு ஏற்பட்டு மருத்துவ செலவுகள் உண்டாகும். குடும்பத்தை விட்டு பிரிந்து இராணுவத்தில் பணி செய்பவர்கள் குடும்பத்தில் வந்து இணைவர்கள்.

**கல்வி:** கல்வி தொடர்பான வகையில் பெற்றோருக்கு அதிகபடியான பணவிரையங்கள் ஏற்படும். பள்ளி மாணவ மாணவிகள் கல்வி சுற்றுலா மூலம் புதிய இடம் சென்று வர நேரிடும். கல்லூரி படிப்பு படிக்கும் மாணவ மாணவிகள் இடையே நட்புகளில் விரிசல் ஏற்பட்டு பிரிவு ஏற்படலாம். பொறுமையுன் செயல்பட வேண்டும்.

**பெண்கள்:** உத்தியோகம் போகும் பெண்கள் அதிக கோப்புகள் குறைத்து கொள்ள வேண்டும். குடும்ப விஷயங்கள் சக பணியாளரிடம் கூறுதல் வேண்டாம் கருவுற்ற பெண்கள் வீண் அலைச்சல் செய்யக் கூடாது. கருகலைய வாய்ப்பு உள்ளது. வயதான பெண்களுக்கு கண், தலைவலி தொடர்பு வியாதிகளால் அவஸ்தை மருத்துவ செலவுகளைஎதிர்கொள்ள நேரிடும்.

**பணவரவு:** விவசாயத்தில் செய்த முதலீடு ஓரளவு இலாபம் தரும். காவல், இராணுவ பணி செய்பவர். கார் மெக்கானிக், பெயிண்டர், பெட்ரோல் பங்க், மரக்கடைவேலை, ஹோட்டல், தொழில், பழைய இரும்பு வியாபாரம், எலக்ட்ரீசியன் பிரிண்டிங் போன்றவை இலாபம் தரும்.

### வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு

இம்மாதம் குலதெய்வம் மற்றும் காவல் தெய்வகோவில்களுக்கு விளக்கு ஏற்ற எண்ணெய் வாங்கி கொடுக்க சகல மேன்மை ஏற்படும்.

## ரிஷபம்

நடசத்திரம்: கார்த்திகை 2,3,4 பாதங்கள், ரோகிணி, மிருக சிரிஷம் 1,2 பாதங்கள்

பேசும் பேச்சில் தெளிவும், கற்பனை திறனும் கொண்ட ரிஷபம் இராசி நேயர்களே! இம்மாதம் பிற்பகுதியில் சூரியன் மற்றும் சூரியன், மற்றும் சுக்கிரன் கேது ஆகிய கிரகங்களின் சஞ் சாரம் குடும்ப வாழக்கைக்கு தேவையான பணவரவுகளை உண்டுபண்ணும், குடும்பத்தில் சுயகாரிய செலவுகள் ஏற்படும். திருமண விஷயங்களில் உள்ள தடைகள் விலகும். இம்மாதம் அரசுக்கு எதிரான தொழில் மற்றும் கட்டப் பஞ்சாயத்து தொழில் செய்பவர்கள் அடங்கி நடக்க வேண்டும். ஏனெனில் காவல் துறையின் பிடியில் மாட்டி அல்லல் பட நேரிடும்.

**குடும்பம்:** கணவன் மனைவி உறவுகளில் அடிக்கடி வீண் வாக்குவாதம் தகராறு ஏற்படக்கூடும். புதிதாக திருமணம் செய்த தம்பதிகளிடையே கருத்து வேறுபாடு அதிகரித்து பிரிந்து செல்ல நேரிடும். பூர்வீக சொத்துகள் தொடர்பாக பிரச்சனையில் பங்காளிகள் இடையே பரஸ்பர உடன்பாடு ஏற்பட்டு பிரச்சனை முடிவுக்கு வரும். வீட்டில் வயதான பெற்றோர்கள் இருப்பின் அவர்கள் உடல் நலம் பாதிக்கப்பட்டு மருத்துவச் செலவுகள் ஏற்படும்.

**கல்வி:** ஆரம்ப கல்வி மற்றும் உயர்கல்வி படிக்கும் மாணவ, மாணவிகளின் படிப்பில் மேலும் அதிக முயற்சிகள் கட்டாயம் தேவைப்படும். அதிலும் அரசு தேர்வு எழுத இருப்பவர்கள் சிறப்பு பயிற்சிகளை மேற்கொண்டால் மட்டுமே ஓரளவு நல்ல மதிப்பெண்களை பெற முடியும். எனவே ஹயக்கீரீவர் வழிபாடு செய்வது மிகவும் உயர்வான நன்மைகளைத் தரும்.

**பெண்கள்:** இம்மாதம் பெண்கள் உடல்நலத்தில் அதிக அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். அதிலும் குடும்பதலைவியான நடுத்தர வயது பெண்கள் டென்ஷனை குறைத்துக் கொள்ள வேண்டும். புகுந்த வீட்டில் பெண்களுக்கு சரியான மரியாதை கிடைக்காது. புதிதாக வாகனம் ஓட்டும் பொழுது கவனமாக செயல்பட வேண்டும். காய்கறி கடை, ஹோட்டல் தொழில், வக்கீல், வேலை செய்யும் பெண்கள் இலாபம் பெறுவார்கள்.

**பணவரவு:** விவசாயத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்காது. பழைய இரும்பு ஏற்றுமதி இறக்குமதி தொழில், பில்டிங் இஞ்சினியர்கள், கால்நடை தீவனம் விற்பனை, மெடிக்கல் கடை, கிரில் ஒர்க்ஸ், சிற்பிகள், கொத்தவேலை, டிரைவர்கள், கார்பெண்டர்கள் போன்ற வேலை ஓரளவு இலாபம் தரும்.

### வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு

ரவையும், சர்க்கரையும் கலந்து எறும்பு புற்றுகளுக்கு உணவு அளித்து ஓம் கம் கணபதியே நமஹ என்று தினசரி 108 தடவை ஜெபம் செய்ய குடும்பத்தில் பகை விலகும்.

## மிதுனம்

நட்சத்திரம் : மிருகசீரிஷம் 3,4 பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 பாதங்கள்

நட்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து உதவி செய்யும் குணம் கொண்ட மிதுனம் இராசி நேயர்களே! இம்மாதம் நண்பர்கள் மற்றும் வெளிபழக்கங்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். நினைத்த காரியங்களில் வெற்றியும், தொட்ட காரியங்களில் இலாபமும் ஏற்படும். இம்மாதம் செவ்வாய், சுக்கிரன், சனி, கேது மற்றும் புதன் கிரகங்களின் கோட்சார சஞ்சாரம் நன்மையான பலன்களைக் கொடுக்கும். சிலருக்கு வேலை செய்யும் நிறுவனம் மூலம் வெளிநாடு சென்று வரக்கூடும்.

**குடும்பம்:** கணவன், மனைவி உறவுகளில் நேசமும், பாசமும் ஏற்படும். சிலருக்கு வேலைக்கு செல்லும் மனைவி மூலம் எதிர்பாராத இலாபங்கள் கிடைக்கும். வீடுகட்டுவது தொடர்பான முயற்சியில் வங்கிக்கடன் உதவிகள் கிடைக்கும், காவல்துறையில் பணி செய்பவர்களுக்கு பதவிஉயர்வுகள் கிடைக்க வாய்ப்பு உண்டு. குடும்பத்துடன் கோவில் யாத்திரைகள் சென்று வர நேரிடும். உடன்பிறப்புகளின் சுபகாரியங்களை முன்நின்று பொறுப்பேற்று செய்ய நேரிடும்.

**கல்வி:** ஆரம்ப கல்வி மற்றும் உயர்கல்வி படிக்கும் மாணவ, மாணவிகளின் கல்வியில் நல்ல முன்னேற்றமும் உயர்வுகளும் உண்டாகும். ஆனால் புதிய நட்புகளுடன் பார்த்து பழகவேண்டும். கல்லூரி படிப்பு படிக்கும் மாணவ, மாணவிகள் காதல் விவகாரங்களில் மாட்டிக் கொண்டு அவமானங்களை சந்திக்க நேரிடும்.

**பெண்கள்:** இம்மாதம் பெண்களுக்கு கையில் பணபுழக்கம் அதிகரிக்கும். தற்சமயம் சில்லரை கடன் சுமைகளை குறைத்துவிட வேண்டும். சில அடமான தங்கநகைகள் சிலவற்றை மீட்டு எடுப்பார்கள், ஆசிரியர், வங்கிபணி, அறநிலையத்துறை பணி போன்ற பணியில் முன்னேற்றம் இலாபம் ஏற்படும். சிலருக்கு இரண்டாவது கரு உற்பத்தி ஏற்படும். இதனால் மருத்துவ செலவுகள் ஏற்படும்.

**பணவரவு:** விவசாயத்தில் ஓரளவு இலாபங்கள் உண்டாகும். பால்பண்ணை தொழில், நீதிபதிகள், வட்டித் தொழில், பத்திர எழுத்தர், ஜோதிடர், கோவில் குருக்கள், ஏசி மெக்கானிக், பாரம்பரிய தொழில் செய்பவர், பூ வியாபாரிகள், புரோகிதம் செய்பவர்கள், கல்வி நிறுவனம் நடத்துபவர்கள் போன்றவர்களுக்கு நல்ல இலாபம் உண்டாகும்.

### வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு

ஓம் ஸ்ரீம் ஸ்ரீநிவாஸாஸ நமஹ என்று காலை, மாலை 108 தடவை ஜெபம் செய்து வாழைப்பழம் பசுவிற்கு கொடுத்து வர அடமானம் போன நகைகளை மீட்டு விடலாம்.

## கடகம்

நட்சத்திரம் : புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயில்யம்

சந்திரன் கிரகத்தினை அதிபதியாகக் கொண்ட கடகம் இராசி நேயர்களே! உங்களுக்கு இம்மாதம் பழைய பாக்கி பணங்கள் வந்து சேரும், கூடவே தேவையற்ற அலைச்சல் ஏற்படும். இம்மாதம் யாருக்கும் வாக்குறுதிகளை கொடுக்கக் கூடாது. இம்மாதம் குரு, சுக்கிரன், இராகு முதற்பகுதியில் சூரியன் ஆகிய கிரகங்களின் அனுகூலமான சஞ்சாரம் கடன் உதவிகளை பெற்றுத் தரும். பாதியில் நின்று போன கட்டிடம் கட்டும் பணிகள் மீண்டும் தொடர வழிவகை செய்யும். சமுதாயத்தில் பணி செய்பவர்களுக்கு சில கௌரவமான பொறுப்புகளை பெற்றுத் தரும்.

**குடும்பம்:** கணவன், மனைவி உறவுகளை பொறுத்தமட்டில் சமாதானமாக அமையும். விவகாரத்து பெற்ற தம்பதிகள் மீண்டும் மறுமணம் செய்ய காரிய முயற்சிகளை மேற்கொள்ளலாம். வாடகை வீட்டில் குடியிருப்பவர்கள் பக்கத்தில் உள்ளவர்களை அனுசரித்து போக வேண்டும். வீட்டில் பெண் குழந்தைகள் மூலம் சந்தோஷமான நிகழ்வுகள் நடைபெறக் கூடும். புதிதாக திருமணம் முடிந்த தம்பதிகளுக்கு உடனே கருஉற்பத்தி ஏற்படும். எனவே தனிக்குடித்தனம் தற்சமயம் செய்ய வேண்டாம்.

**கல்வி:** ஆரம்ப கல்வி மற்றும் உயர்கல்வி பயிலும் மாணவ, மாணவிகளின் கல்வியில் உயர்வுகள் உண்டாகும். ஆனால் ஆரம்பகல்வி பயிலும் சிறு குழந்தைகளின் உடல் அடிக்கடி பாதிக்கும் வாய்ப்பு உள்ளது. கல்லூரி படிப்பு படிக்கும் மாணவ,மாணவிகள் தொழில் தொடர்பு உடைய நேர்முகத்தேர்வுகளில் வெற்றிபெறக் கூடும்.

**பெண்கள்:** இம்மாதம் உத்தியோகம் செய்பவர்கள் பணியில் கூடுதல் பொறுப்புகளை மேற்கொள்ள நேரிடும். சிலர் பணி நிமித்தம் உயர்கல்வி படிக்க நேரிடும். காதல் தொடர்புடைய விஷயங்களில் சிக்கியுள்ள பெண்கள் பொறுமையுடன் செயல்பட வேண்டும். புகுந்த வீட்டில் உரிய மரியாதை கட்டாயம் கிடைக்கும். டெய்லரிங் பணி, வக்கீல், செவிலியர், பூ வியாபாரம் போன்றவை இலாபம் பெற்றுத் தரும்.

**பணவரவு:** விவசாயத்தில் பணி விரையம் ஏற்படும். இறைச்சி, மீன், கருவாடு விற்பனை, ரைஸ்மில், அரிசி மண்டி, ஸ்டேஷனரி கடை, பழக்கடை, காபி, டீ கடை, விறகு கடை, பெட்ரோல் பல்க், இராணுவம் பணி செய்பவர்கள், பணி விற்பனை போன்றவை இலாபம் தரும்.

### வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு

ஓம் நமோ பாஸ்கராய மம ஸ்ர்வகிரகாணாம் பீடா நாசனம் குரு குரு ஹீம்பம் சுவாகா என்று தினசரி காலை மாலை 108 தடவை ஜபம் செய்யவேண்டும்.

## சிம்மம்

நடசத்திரம் : மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதங்கள்

உயர்ந்த எண்ணமும், ஈகை குணமும் கொண்ட சிம்மஇராசி நேயர்களே! இம்மாதம் வெளிநாடுகளில் பணி செய்பவர் தாய்நாடு திரும்பிவரக் கூடும். இம்மாதம் சுக்கிரன், இராகு முற்பகுதியில் புதன் மற்றும் பிற்பகுதியில் சூரியனின் சஞ் சாரம் ஓரளவு பணவரவுகளை ஏற்படுத்தும். எனவே வரவும், செலவும் கலந்து காணப்படும். ஆனால் சனி, கேது, செவ்வாய் ஆகிய கிரகங்களின் சஞ்சாரம், மனகுறைவு, காரியத் தடைகளை உண்டாக்கும். இம்மாதம் கூடுமான வரையில் பொறுமையுடன் செயல்பட வேண்டும்.

**குடும்பம்:** கணவன், மனைவி உறவுகளில் அடிக்கடி சண்டை சச்சரவு உண்டாகும். இம்மாதம் வாகனங்களை ஓட்டிச் செல்லும் பொழுது கவனமாக செயல்பட வேண்டும். கூட்டு குடும்பமாக இருப்பவர்கள், மனஸ்தாபம் ஏற்பட்டு தனியாக பிரிந்துச் செல்ல நேரிடுமம். வீட்டில் வயதான பெற்றோர் மூலம் எதிர்பாராத பணஉதவிகள் கிடைக்கும். சிலர் பூர்வீகத்தை விற்று அதில் கிடைக்கும் இலாபம் மூலம் புதுமனை வாங்குவீர்கள்.

**கல்வி:** ஆரம்ப மற்றும் உயர்கல்வி பயிலும் மாணவ, மாணவிகளின் படிப்பில் நல்ல முன்னேற்றம் மற்றும் உயர்வு ஏற்படுமம. பரிசுகளை அள்ளி வருவார்கள். இதன்மூலம் சிலருக்கு கல்வி மற்றும் விளையாட்டுக்கு உதவித் தொகை கிடைக்கும். சிலருக்கு புதிய வாகன யோகம் ஏற்படக்கூடும்.

**பெண்கள்:** பெண்கள் தற்சமயம் உடல்நிலையில் கவனம் செலுத்த வேண்டும். கருவுற்ற பெண்கள் வீண் அலைச்சலை தவிர்க்க வேண்டும். சிலருக்கு கைகால்களில் பாதிப்பு ஏற்பட்டு மருத்துமனையில் சிகிச்சை மேற்கொள்ள நேரிடும். சிலருக்கு பூர்வீக சொத்துகளில் இருந்து எதிர்பாராத இலாபம் கிடைக்கும். அழகுகலை நிபுணர், தகவல்தொடர்பு போன்ற துறையில் பணி செய்பவர் நல்ல இலாபம் பெறுவார்கள். கையில் உள்ள பணத்தை யாரிடமும் கொடுத்து ஏமாற வேண்டாம்.

**பணவரவு:** விவசாயத்தில் வரவும் செலவும் சரியாக போகும் கால்நடை வளர்ப்பு, டெய்லர் கடை, பூவியாபாரம், கல்லூரி பேராசிரியர்கள், பழக்கடை, எலக்ட்ரானிக்ஸ் பொருள் விற்பனை, ஜோதிடர், பர்னிச்சர் கடை, ஜவுளி வியாபாரம், வாகன ஓட்டுனர் போன்றவை இலாபம் பெற்றுத் தரும்.

### வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு

வீட்டிற்கு அருகில் உள்ள கிராம காவல்தெய்வங்களுக்கு விளக்கு எரிக்க எண்ணெய் வாங்கி கொடுக்கலாம். பைரவருக்கு 54 எண்ணிக்கையில் கருப்பு திராட்சையை நீலநிற நூலில் கோர்த்து மாலையாகக் கட்டி போட்டு வழிபாடு செய்ய சகல தடையும் நீங்கும்.

## கன்னி

நடசத்திரம் : உத்திரம் 2,3,4 பாதங்கள், அஸ்தம், சித்திரை 1, 2 பாதம்

சிக்கனமாகவும், அதே சமயம் திட்டமிட்டு சிறப்பாக செயல்படக்கூடிய கன்னி இராசிநேயர்களே இம்மாதம் பணவரவுகளை காட்டிலும் செலவுகள் அதிகரிக்கும். மனதில் ஒருவித தயக்கமும், பயமும், இருந்துக் கொண்டே இருக்கும். இம்மாதத்தில் சுக்கிரன், சனி ஆகிய இரண்டு கிரகங்களினால் மட்டுமே கோட்சார நன்மைகளைப் பெற முடியும். மிகப்பெரிய அளவில் வியாபாரம் செய்பவர்கள் புதிய முதலீடுகளை செய்யலாம். அதுபோல அரசு தரப்பு அதிகாரிகளுடன் மோதல் போக்கை விட்டுவிட வேண்டும்.

**குடும்பம்:** கணவன், மனைவி உறவுகளில் சமாதானமும், பாசமும் கலந்துக் காணப்படும். ஆனால் குடும்பத்தில் மருத்துவ செலவுகள் அதிகரிக்கும். புதிதாக கடன்கள் வாங்குவதை தவிர்க்க வேண்டும். ஏற்கனவே அடமானம் வைத்த தங்கநகைகளை சில சமயம் விற்க நேரிடும். உடன்பிறந்த சகோதரன், சகோதரி வகையில் சில எதிர்பாராத பொருள் உதவிகள் கிடைக்கும். வீட்டில் வயதான பெற்றோருடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படும்.

**கல்வி:** ஆரம்ப கல்வி பயிலும் சிறுகுழந்தைகளின் கல்வியில் மந்தமான நிலைமை உருவாகும். பெற்றோர்கள் கூடுதல் கவனம் எடுக்க வேண்டும். உயர்கல்வி படிக்கும் மாணவ, மாணவிகள் கல்வியில் ஓரளவு நல்ல முன்னேற்றமும் உயர்வும் உண்டாகும். ஆனால் கல்வி வகையில் எதிர்பாராத சில பணவிரையங்கள் உண்டாகும்.

**பெண்கள்:** பெண்களுக்கு இம்மாதம் கடுமையான மன அழுத்தம் ஏற்படும். கடுமையான பொருளாதார நெருக்கடியை சமாளிக்க வேண்டும். தனியார் துறையில் வேலை செய்பவர்கள் தற்சமயம் இடமாற்றங்களை செய்ய வேண்டாம். பெண்களுக்கு திருமணம் பேசி முடித்த பின்பு தடையேற்பட்டு நின்று போக நேரிடும். அதே சமயம் புதிதாக வேலை தேடி அலைபவர்களுக்கு வெளியூரில் வேலை வாய்ப்புகள் கிடைக்கும்.

**பணவரவு:** விவசாயம் சார்ந்த தொழில்களில் அதிக பணவிரையம் ஏற்படும். பிரிண்டிங் தொழில், ஸ்டேஷனரி விற்பனை போட்டோ ஸ்டுடியோ, பத்திரிகை தொழில், ஆடிட்டர், பத்திரம் எழுதுபவர், ஆசிரியர் பணி, வக்கீல் தொழில், எலக்ட்ரிக்கல் தொழில், கொரியர் சர்வீஸ், புரோக்கர் தொழில் ஓரளவு இலாபம் தரும்.

### வணங்க வேண்டி தெய்வ வழிபாடு

ஓம் ஸ்ரீம் ஸ்ரீயை நமஹ என்று காலை, மாலை 108 தடவை ஜெபம் செய்து வர தடையற்ற பணவரவு உண்டாகும்.

## துலாம்

நடசத்திரம் : சித்திரை 3,4 பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 பாதங்கள்

வியாபார நுணுக்கங்களை தெரிந்து திட்டமிட்டு செயல்பட்டு வெற்றிகளை குவிக்கக்கூடிய துலாம் இராசி நேயர்களே! உங்களுக்கு இந்தமாதம் சரளமான பணபுழக்கம் உண்டாகும். வியாபாரிகளுக்கு வர வேண்டிய பழைய பாக்கி வசூல் ஆகும். கடன் மற்றும் அடமானம் மீதான நெருக்கடிகளை சமாளித்து விடலாம். இம்மாதம் கேது, குரு, செவ்வாய், சுக்கிரன், ஆகிய கிரகங்களின் கோட்சாரம் வெற்றிகளை உருவாக்கி தரும். பழைய கோர்ட் கேஸ்களில் விவகாரங்களில் திருப்புமுனைகள் ஏற்படும்.

**குடும்பம்:** கணவன், மனைவி உறவுகளில் பாசமும், நேசமும் அதிகரிக்கும். நீண்டகாலமாக காதல் செய்து வரும், ஆண், பெண் இருபாலரும் பெற்றோரிடம் எடுத்துகூறி சம்மதம் பெற சரியான நேரம் ஆகும். உத்தியோகம் போகும் மனைவியைப் பெற்றவர்கள் எதிர்பாராத இலாபத்தை பெறுவார்கள். சிலர் புதிதாக காலி இடம் வாங்கக்கூடும். சிலர் வாடகை வீட்டை மாற்றி சொந்த வீட்டிற்கு போகக்கூடும்.

**கல்வி:** ஆரம்ப மற்றும் உயர்கல்வி படிக்கும் பள்ளி மாணவ, மாணவிகளின் கல்வியில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். போட்டி, பந்தயங்கள் போன்றவற்றில் கலந்து வெற்றிபரிசுகளை வெல்வார்கள். கல்வியில் குறிப்பிடத்தக்க உயர்வான மதிப்பெண் பெற்று பெற்றோருக்கு சந்தோஷத்தை தருவார்கள். கல்லூரி படிப்பில் தேர்ச்சி பெறாத பாடங்கள் மீது கூடுதல் கவனம் எடுத்து படிக்க வேண்டும்.

**பெண்கள்:** பெண்களுக்கு இம்மாதம் புகுந்த வீட்டில் மரியாதை ஏற்படும். புதிய திருமண தம்பதிகள் தனிக்குடித்தனம் போக வேண்டிய சூழல் உண்டாகும். அடமானம் போன தங்க நகைகள் திரும்பி எடுத்துவிடுவீர்கள். புதிய வாகன யோகம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பெண்களுக்கு பூர்வீக சொத்து பங்கு பாகம் பிரித்து உரிய பங்கு கிடைக்கும். கல்லூரி பேராசிரியர்கள், வங்கி பணியாளர் போன்றவர்கள் பதவி உயர்வு பெறுவார்கள்.

**பணவரவு:** விவசாயத்தில் செய்த முதலீட்டுக்கு பாதிப்பு இருக்காது. காவல்துறை பணி, உப்பு வியாபாரம், மீன், கருவாடு விற்பனை, ஹோட்டல் தொழில், உணவு பொருள் தயாரிப்பு, ரைஸ்மில், அரிசி மண்டி, ஜவுளி பிரிவு விற்பனை, பால்பண்ணை தொழில், கம்ப்யூட்டர் பிரிவு போன்றவை இலாபம் தரும்.

### வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு

தினசரி காலை மாலை ஓம் ஐம் ஹரீம், ஸ்ரீம் நமஹ என்று 108 தடவை ஜெபம் செய்து காகம், நாய் போன்றவற்றிற்கு உணவு சர்வகாரிய வெற்றி ஏற்படும்.

## விருச்சிகம்

நட்சத்திரம் : விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை

எந்த ஒரு செயலையும் எளிதில் சிரமம் இல்லாமல் சர்வ சாதாரணமாக செய்து முடிக்கும் ஆற்றல் உள்ள விருச்சிகம் இராசி நேயர்களே! சொந்த கையிருப்பு பணங்களை போட்டு வட்டித் தொழில் செய்பவர்கள் கவனமாக செயல்பட வேண்டும். இம்மாதம் குடும்பத்தில் மருத்துவ செலவுகள் அதிகரிக்கும். ஜென்ம சனியுடன் 10ஆம் இடத்தில் உள்ள குருவும் சேர்ந்து கடுமையான போரட்டங்களுக்கு பிறகு வெற்றியைக் கொடுக்கும். ஆனால் இம்மாதம் செவ்வாய், இராகு, புதன் முற்பகுதியில் சூரியன் போன்ற கிரகங்களின் கோட்சார சஞ் சாரம் ஓரளவுக்கு உதவிகளை பெற்றுத் தரும். வெளிவட்டார நட்புகள் மூலம் தேவைப்படும் பணஉதவிகள் கிடைக்கும்.

**குடும்பம்:** கணவன், மனைவி உறவுகளில் வீண் வாக்குவாதம் எதிர்ப்புகள் தோன்றும். வீட்டில் மனைவி மற்றும் குழந்தைகளின் உடல் நலத்தில் மருத்துவ செலவு உண்டாகும். புரோக்கர் மற்றும் சமுதாய பணி செய்பவர்கள் கடுமையான சங்கடங்கள் அனுபவிக்க நேரிடும். இவர்கள் பெண்களிடம் பார்த்து பேசி பழக வேண்டும். சிலருக்கு நீண்டகாலம் கழித்து மருத்துவ உதவியுடன் தலை கரு உற்பத்தி ஏற்படும்.

**கல்வி:** ஆரம்ப கல்வி பயிலும் சிறுகுழந்தைகளின் கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். ஆனால் உயர்கல்வி படிக்கும் மாணவ, மாணவிகள் கல்வியில் அதிக முயற்சி எடுத்து படிக்க வேண்டும். காதல் எண்ணங்களில் மாட்டி மனதை கெடுத்துக் கொள்ளக்கூடாது. கவனமாக படித்து முன்னேறக் கூடிய வழியை பார்க்க வேண்டும்.

**பெண்கள்:** பெண்களுக்கு வேலை செய்யும் இடங்களில் மற்றவர்களுடன் ஒத்துபோக முடியாத சூழல் ஏற்படும். தற்சமயம் பணி செய்யும் இடங்களில் இருந்து வெளியேற நினைப்பது நன்மைகளை தராது. வெளியில் செல்லும் பொழுது அதிக தங்கநகைகளை அணிய வேண்டாம். வயிறு, முதுகு, தொடர்பான மருத்துவசிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

**பணவரவு:** விவசாயத்தில் புதிய முதலீடு தற்சமயம் செய்ய வேண்டாம். எலும்பு முறிவு வைத்தியர், கால்நடை வளர்ப்பு, நவதானிய வியாபாரம், ஜோதிடர், மெடிக்கல்ஷாப், வாகன ஓட்டுனர், மூலிகை பொருள் விற்பனை, கட்டிடம் கட்டும் தொழிலாளர் போன்ற தொழில்கள் ஓரளவு இலாபத்தைக் கொடுக்கும்.

### வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு

திருப்பதி சென்று வழிபாடு செய்து விட்டு குலதெய்வம் கோவிலுக்கு விளக்கு எடுத்து காணிக்கையாக கொடுக்க சகல காரிய வெற்றி உண்டாகும்.

## தனுசு

நட்சத்திரம் : மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்



எடுத்த காரியத்தை வெற்றியுடன் முடிக்க இறுதி வரை போராடும் தனுசு இராசி நேயர்களே! இம்மாதம் உங்களுக்கு நினைத்த காரியம் கைகூடும். தொட்டகாரியங்களில் வெற்றியுடன் முடியும். திருமணம் தடைபட்டுவந்த ஆண், பெண் இருபாலருக்கும் திருமண காரியங்கள் கைகூடும். இம்மாதம் குரு, சுக்கிரன், புதன், சூரியன், இராகு ஆகிய கிரகங்களின் கோட்சாரம், நன்மைகளை அள்ளித் தந்திடும். அரசு பணியில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு பணிமாற்றம் போன்றவை கிடைக்கும்.

**குடும்பம்:** கணவன்,மனைவி உறவுகளில் காதல் எண்ணங்கள் சகஜமாக ஏற்படும். மனைவி வழியில் உறவினர்கள் வருகை அதிகரிக்கும். சிலருக்கு நீண்டகாலம் கழித்து அடுத்த கரு உற்பத்தி, ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. வீட்டில் வயதான பெற்றோர்கள் இருந்தால் அவர்கள் உடல்நலத்தில் மருத்துசெலவு ஏற்படும். கண்பார்வை குறைவு, இருதய பாதிப்பு தொடர்பான மருத்துவ செலவு ஏற்படலாம். இராணுவத்தில் பணிசெய்பவர் பணிநிறைவு செய்து குடும்பத்தில் வந்து சேருவார்கள்.

**கல்வி:** ஆரம்ப கல்வி மற்றும் உயர்கல்வி படிக்கும் மாணவ, மாணவிகளின் கல்வியில் நல்ல முன்னேற்றம் உயர்வுகள் ஏற்படும். அரசு தேர்வு எழுத இருப்பவர்களுக்கு நல்ல உயர்வான மதிப்பெண்கள் கிடைக்கும். அதிகாலையில் எழுந்து படிக்க மேலும் கல்வியில் ஞாபக சக்தி வளரும்.

**பெண்கள்:** புகுந்த இடத்தில் பெண்களுக்கு மதிப்பு அதிகரிக்கும். அடமானம் போன தங்கநகைகளை திருப்பி எடுப்பார்கள். சிலர் உத்தியோகம் வகையில் வெளியூர் பயணம் சென்று வரநேரிடும். பூர்வீக சொத்துக்களில் எதிர்பாராத வருவாய் கிடைக்கும். மருத்துவர்கள், நீதிபதிகள் போன்ற பொறுப்புகளில் இருப்பவர்களுக்கு பதவியில் புதிய கௌரவம் ஏற்படும்.

**பணவரவு:** விவசாயத்தில் எதிர்பாராத நல்ல இலாபம் கிடைக்கும். ரியல் எஸ்டேட், சிகை அலங்கார நிபுணர், ஜோதிடர், பத்திரிகை துறை, பிரிண்டிங் தொழில், ஸ்டேஷனரி கடை, புத்தக விற்பனை, ஸ்வீட்ஸ்டால், மோட்டார் வாகன தொழில் போன்றவை நல்ல இலாபங்களைக் கொடுக்கும்.

### வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு

பழனியில் உள்ள ஆவினன்குடி பால தண்டாயுத பாணியை வணங்கி ஐந்துபேர்களுக்கு வஸ்திர தானம் செய்ய புதிய கௌரவங்கள் உண்டாகும்.

## மகரம்

நட்சத்திரம் : உத்திராடம் 2,3,4 பாதம், திருவோணம் அவிட்டம் 1,2 பாதம்



செய்யும் தொழிலே தெய்வம் என்ற தத்துவத்தை பேசக்கூடிய மகரம் இராசி நேயர்களே! உங்களுக்கு இந்தமாதம் தேவையற்ற அலைச்சல் ஏற்படும். மனம், உடல், இரண்டிலும் ஒருவித சலிப்பும், தளர்ச்சியும் உண்டாகும். எனவே இம்மாதம் தெய்வீக ஸ்தலயாத்திரை சென்று வருவது சற்று உற்சாகத்தைக் கொடுக்கும். இம்மாதம் சனி,கேது, சுக்கிரன், பிற்பகுதியில் சூரியன் போன்ற கிரகங்களின் கோட்சாரம் தேவைக்கு ஏற்ற பணி வருவாயை தரும். காலிமனை மற்றும் வீடு விற்பனை செய்ய முயற்சி செய்பவர்களுக்கு தடை விலகி விற்பனை செய்து இலாபம் கிடைக்கும்.

**குடும்பம்:** கணவன், மனைவி உறவுகளில் போராட்டங்கள் அடிக்கடி உண்டாகும். ஏற்கனவே கோர்ட்டில் டைவர்ஸ் கேஸ் வழக்கு நடப்பவர்களுக்கு தீர்ப்புகள் வெளிவரும். வீட்டில் திருமண வயதில் பிள்ளைகள் இருப்பின் அவர்களுககு திருமண முயற்சி செய்ய காரியம்கூடி வரும். பக்கத்து குடித்தனக்காரர்களுடன் சண்டை சச்சரவு ஏற்பட்டு காவல்நிலையம் வரை சென்றுவர நேரிடும். எனவே பொறுமையுடன் செயல்பட வேண்டும்.

**கல்வி:** கல்வியில் மாணவ, மாணவிகளின் கல்வி திறனில் நல்ல வளர்ச்சிகள் ஏற்படும். விளையாட்டுத்துறைகளில் உள்ள மாணவ, மாணவிகள் தற்சமயம் கல்வியில் அதிக சிரத்தை எடுத்து படித்தால் மட்டுமே தேர்வுகளில் வெற்றி பெறமுடியும் என்பதை மனதில் வைத்து உழைக்க வேண்டும்.

**பெண்கள்:** பொதுவாக யாரிடம் பேசினாலும் நிதானம் தேவை. அரசியல் மற்றும் சமூக பணியில் இருப்பவர்கள் சில சூழல் காரணமாக கெட்ட பெயர்களை ஏற்கக்கூடிய சூழல் உண்டாகும். உடன்பிறந்த சகோதரர், சகோதரியுடன் மனஸ்தாபம் ஏற்பட்டு பிரிவுகள் ஏற்படலாம். கையில் உள்ள பணத்தை தவறவிட்டுவிட வாய்ப்பு உள்ளது. ஜோதிட தொழில், நர்ஸிங் பணி, ஆடிட்டர் போன்ற தொழில் செய்பவர் தொழிலில் இலாபம் பெறுவார்கள்.

**பணவரவு:** விவசாயத்தில் வரவும், செலவும் சரிசமமாக அமையும். ஆனால் தேங்காய், வத்தல், உளுந்து ஓரளவு இலாபம் கொடுக்கும். கல்லூரி பேராசிரியர், கலைத்துறை, டிராவல்ஸ் நடத்துபவர், பியூட்டி பார்லர் டெய்லரிங், ஜவுளிக்கடை, ஸ்வீட்ஸ்டால், காபி, டீ கடை போன்றவை இலாபம் தரும்.

### வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு

அனுமானுக்கு வெண்ணெய் காப்பு சாற்றி அர்ச்சனை செய்து அந்த வெண்ணெய்யை சாப்பிட்டு வர வெற்றிகள் தேடி வரும். சைவ உணவு சாப்பிட வேண்டும்.

## கும்பம்

நட்சத்திரம் : அவிட்டம் 3,4 பாதம், சதயம், பூரட்டாதி 1,2,3 பாதம்



நினைத்ததை வெற்றியுடன் முடிக்க இடைவிடாமல் திட்டமிட்டு செயல்படக் கூடிய கும்ப இராசி நேயர்களே! உங்களுக்கு இம்மாதம் வேலை தேடி அலைபவர்களுக்கு புதிய தகவல்களும், வியாபாரிகளுக்கு தொழிலில் விருத்தியும், பழைய பாக்கிகளும் வசூல் ஆகும். இம்மாதம் சனி,குரு,புதன் ஆகிய கிரகங்கள் மட்டுமே நன்மைகளை செய்யும். குறிப்பாக திருட்டுத்தனமான தவறுகளை செய்யும் ஆண், பெண் இருபாலரும் மாட்டிக் கொண்டு அவமானபட நேரிடும். அரசுக்கு எதிரான செய்பவர்கள் ஊர்விட்டு தலைமறைவாக போக நேரிடும்.

**குடும்பம்:** கணவன்,மனைவி உறவுகளில் அடிக்கடி வாக் குவாதம் அதிகரிக்கும். குறிப்பாக புதுமணத் தம்பதிகளாக இருப்பின் மனவருத்தம் ஏற்பட்டு பிரிவுகள் ஏற்படும். சிலருக்கு உடனடியாக கருஉற்பத்தி ஏற்பட்டுவிடக் கூடும். இம்மாதம் திருமண விஷயங்களை கவனமாக பேசி முடிக்க வேண்டும். உடன் பிறந்த சகோதரன், சகோதரி வகையில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். இம்மாதம் பூர்வீக சொத்துக்களை பாகபிரிவினை செய்ய வேண்டாம். அரசு உயர்பதவியில் இருப்பவர்கள் இடமாற்றங்களை அடைய நேரிடும்.

**கல்வி:** ஆரம்பகல்வி மற்றும் உயர்கல்வி பயிலும் மாணவ, மாணவிகளின் படிப்பில் அதிக முயற்சிகள் தேவை. பெற்றோர்கள் இந்நிலையில் சற்று விழிப்புடன் பிள்ளைகளை கவனிக்க வேண்டும். கல்லூரி படிப்பவர்கள் வேலைவாய்ப்பு நேர்முகத்தேர்வில் கலந்து வெற்றி பெறுவார்கள்.

**பெண்கள்:** பெண்களுக்கு இம்மாதம் மருத்துவச்செலவுகள் அதிகரிக்கும். குறிப்பாக நடுத்தரவயது பெண்கள் உடல்நலத்தில் கூடுதல் கவனம் எடுக்க வேண்டும். சிலர் உடல்நலக்குறைவால் வேலையை விட்டு ஓய்வு பெற நேரிடும். புதிதாக கடன்களை வாங்கக் கூடாது. புதிதாக வாகனங்களை ஓட்டி பழகுபவர்கள் நிதானமாக செயல்பட வேண்டும். உணவு பண்டம் தயாரிப்பு, டெய்லரிங், காய்கறி கடை போன்றவை இலாபம் தரும்.


**பணவரவு:** விவசாயத்தில் போட்ட பணங்கள் திருப்பி வராது. அதே சமயம் நஷ்டம் ஏற்படாது. இறைச்சி, மீன், கருவாடு விற்பனை, விறகு கடை, ஹோட்டல், செங்கல், மண், ஜல்லி வியாபாரம், பத்திரிகை துறை, லேபர் காண்ட்ராக்ட், நடை பாதை வியாபாரங்கள், பிளாஸ்டிக் பொருள் விற்பனை, குடிதண்ணீர் வியாபாரம், லேத் ஒர்க்ஸ் போன்றவை இலாபம் தரும்.

### வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு

தினசரி காலை மாலை ஓம் ஐம் ஹ்ரீம்ஶ்ரீம் நமஹ என்று 108 தடவை ஜெபம் செய்து, காகம், நாய், போன்றவற்றிற்கு உணவு அளிக்க இலாபங்கள் கிடைக்கும்.

## மீனம்

நட்சத்திரம் : பூரட்டாதி 4 பாதம் வரை, உத்திரட்டாதி, ரேவதி



இனிமையாக பேசி எளிதில் காரியம் சாதிக்கக்கூடிய மீனம் இராசி நேயர்களே! இம்மாதம் செவ்வாய் மற்றும் புதன் கிரகத்தின் கோட்சார சஞ்சாரம் மட்டுமே நன்மைகளை பெற்றுத் தரும். பொதுவாக நமக்கு ஜாதகத்தில் யோகமான திசாபுத்திகள் நடைபெற்றால் ஓரளவு பாதிப்புகள் இருக்காது. இம்மாதம் கடுமையான பணநெருக்கடிகளை சமாளிக்க வேண்டி வரும். வியாபாரிகள் இம்மாதம் புதிய முதலீடுகளை செய்ய வேண்டாம். இம்மாதம் புதிய கடன்கள் வாங்காமல் இருக்க வேண்டும். வாகனம் ஓட்டிச் செல்லும் கவனம் தேவை.

**குடும்பம்:** கணவன், மனைவி உறவுகளை பொறுத்தவரையில் நன்றாக சமாதானமாக அமையும். ஆனால் வாழ்கைதுணையின் உடல் நலத்திற்காக அடிக்கடி மருத்துவமனை செல்ல நேரிடும். வேலைக்கு போகும் மனைவியை உடையவர்கள் ஓரளவு நெருக்கடிகளை சமாளிப்பார்கள். வீடுகட்டும் பணிக்காக பணத்தேவைகள் அதிகரிக்கும். எதிர்பார்த்த வங்கிக்கடன் உதவிகள் தள்ளிப்போகும். ஆனாலும் புதிய கடன்களை வாங்காமல் சமாளிப்பதுவே நல்லது.

**கல்வி:** ஆரம்ப கல்வி பயிலும் சிறு குழந்தைகளின் கல்வியில் நல்ல உயர்வுகள் ஏற்படும். ஆனால் உயர்கல்வி கற்கும் மாணவ, மாணவிகளின் கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். ஆனால் கல்வி வகையில் அதிகப்படியான பணவிரையம் உண்டாகும். கல்லூரி படிப்பிற்காக ஹாஸ்டலில் உள்ள மாணவ,மாணவிகள் உடல்நலத்தின் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. இதனால் ஹாஸ்டலை விட்டு வெளியேறலாம்.

**பெண்கள்:** குடும்ப நிர்வாகத்தினை மேற்கொள்ளும் பெண்கள் கடும் நிதிப்பற்றாக்குறையை எதிர்கொள்ள வேண்டும். சிலர் தங்கநகைகளை விற்று கடன் நிலையை சமாளிப்பார்கள். இம்மாதம் மிகவும் பொறுமை அவசியம். வேலைக்கு செல்லும் பெண்கள் இடமாற்றங்களை செய்ய வேண்டும். வேலையில் மேல் அதிகாரிகளை எதிர்க்க வேண்டாம்.

**பணவரவு:** விவசாயத்தில் எந்த பெரிய முதலீடு செய்ய வேண்டாம். நடைபாதை மற்றும் தள்ளுவண்டி வியாபாரம் ஓரளவு இலாபம் கிடைக்கும். ஆசிரியர், வங்கிபணி, மின்சார வாரிய பணியாளர், குடிதண்ணீர், விற்பனை, நீதித்துறை, ஜோதிடர், நிருபர்கள், போட்டோ ஸ்டுடியோ, கோவில் பூசாரிகள், புரோகிதம் போன்றவை ஓரளவு இலாபம் தரும்.

### வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு

அரசமரத்தடியில் அமர்ந்துள்ள விநாயகருக்கு செவ்விளநீர் மற்றும் தேன் கொண்டு அபிஷேகம் செய்து அர்ச்சனை செய்ய பண கஷ்டம் குறையும்.

# வீடு தந்த மன்னவன் மறைவால் தேடி வரும் கேடு



கொடிக்கம்பம் ஜோதிடர்
S.P. சோமசுந்தரம்
செல்: 94424 37251

புதுசா காலிமனை வாங்கி பூமி பூஜை போட்டு புதிய வீடு கட்டி குடிபோக எல்லோருக்கம் ஆசைகள் இருக்கும். அது அனைவருக்கும் நிறை வேறுவதில்லை. சிலருக்கு அந்த கனவு எளிதில் கனிந்து விடுகிறது. பலருக்கு அது பகல் கனவாகவே முடிந்து விடுகிறது.

ஒரு சிலர் பழைய வீட்டை விலை கொடுத்து வாங்கி சில திருத்தங்களும் செய்து கணபதி ஹோமம் செய்து அந்த வீட்டிற்கு குடி பெயர்ந்தும் விடுகிறார்கள். ஆனால் பழைய வீட்டை வாங்கும் போது பலர் கவனித்து வாங்குவதில்லை. வீட்டை விற்பவன் இன்று எந்த நிலையில் உள்ளான் என்பதை விசாரித்து விட்டு நன்கு ஆலோசனை செய்து தான் வாங்க வேண்டும்.

ஒரு சிலர் எளிமையாய் தொழில் தொடங்கப் படிப்படியாக வளர்ந்து ஒரு நல்ல நிலைக்கு வந்த பின் ஒரு வீடு கட்டி பார்க்க ஆசைப்பட்டு இடம் வாங்கி வீடு கட்டி முடிப்பார். ஆசையாய் வீட்டை கட்டி முடித்த பின் செய்யும் தொழில் சீர் கெடும். படிப்படியாக கடன் வளரும், அநியாய வட்டி கட்டி கட்டி ஆள் கலகலத்து போய்விடுவான். கட்டிய வீட்டுக்கு மேல் கடன் மூழ்கிவிடும் கடைசியாக வீட்டை விற்றாலும் கடன் மிச்ச மிருக்கும் என்கிற நிலையில் அந்த வீட்டை வாங்கக் கூடாது.

ஒரு சிலர் வீட்டில் குடும்பத் தலைவி கம்பீரமாய் கயிற்றில் சிக்கிய மம்பரமாய் சுழன்று சுழன்று வீட்டு வேலையைப் பார்த்து கொண்டிருப்பார்கள். கணவனை கவனித்து கொண்டிருப்பார்கள். கணவனை கவனித்து கொள்வது முதல் குழந்தைகள் வளர்ப்பது வரை, வெளியில் நல்லது கெட்டது கலந்துக் கொள்வது வரையில் தேன் சிட்டாய் பறந்து கொண்டிருப்பர்கள் தீடிரென்ற தலை வலிக்கிறது ஓயாமல் வாந்தி வருகிறது. பாதங்கள் லேசாக வீங்கி இருக்கிறது என்று மருந்துவரைப் பார்த்தால் பரிசோதித்து உணர்ந்தால், சிறுநீரகப் பழுது என்று முடிவு வரும். பல லட்சங்கள் செலவு செய்தும் பலனில்லை கடைசியில் குடும்ப தலைவி மரணத்தை தழுவி விடுவாள் என்கிற நிலையில் வீட்டை விற்று விட்டு, வேறு இடம் பெயரலாம் என்றதும் வீடு விற்க வந்தால் அந்த வீட்டையும் வாங்கக்கூடாது.





ஒரு சிலர் வீட்டில் தங்கத் தாமரைப் போல அழகு தேவதையாய் வலம் வந்த குடும்பத்தில் அனைவரின் இதயத்திலும் அன்புச் செடியை வளரச் செய்து பாசமலரைப் பூக்க வைத்தவள் திடீரென்று ஒரு நாள் சொல்லாமல் கொள்ளாமல் ஈன குலத்தில் பிறந்த ஆடவனை பிரியமுடன் காதலிக்கிறேன் என்று கடிதம் எழுதி வைத்து விட்டு காணாமல் போய் விடுவாள். பெற்றவர்களும் அவமானம் பிடுங்கி தின்னும். இனி இந்த வீட்டில் குடியிருக்க வேண்டாம். வீட்டை விற்று விட்டு வெளியூரில் வசிக்கலாம் என்கிற நிலையில் வீடு விற்பனைக்கு வரும் அந்த வீட்டை வாங்கக்கூடாது.

ஒரு சிலர் வீட்டில் கட்டிளங்காளையாய் வளர்ந்து விட்டான். கல்வியும் தன் சக்திக்கு மேல் கொடுத்து விட்டோம். தோளுக்கு மேல் வளர்ந்த பையன் வாழ்க்கைக்கு உகந்த பையன். வருமானம் பண்ண தெரிந்துக் கொள்வான் வேலைக்கு செல்ல தொடங்கி விட்டால், வந்த வறுமை காணாமல் போகும் என்கிற பெற்றவர்களின் கனவை பொசுக்கி எரியும்படி கெட்ட சகவாசத்தால் குடிப் பழக்கத்துக்கு அடிமையாகி ஊதாரியாக மாறும் நிலை வரும் உதவாக்கரை நின்ற நிலை சேர்ந்த பின் வீடு சரியில்லை வீட்டை விற்று விட்டு வேறு வீடு வாங்கிக்கொள் என்கிற ஆலோசனையை ஏற்றுக் கொண்டு வீட்டை விற்க வீடு வரும் அந்த வீட்டை வாங்கக்கூடாது.

ஒரு சிலர் வீட்டில் மூத்தவன் உழைப்பும்

பொறுப்பும் குறைந்தவனாக இருப்பான் சோம்பலும், பொறுமையும் நிறைந்தவனாகவும் இருப்பான், ஆனால் இளையவனே "வெட்டி கொண்டு வா" என்றால் அதை கட்டிக் கொண்டு வரும் பொறுப்பாளியாக இருப்பான். கடின உழைப்பை கவசமாகவும், ஒழுக்கத்தை என்றும் கைவசமாகவும், வைத்திருப்பான், உழைப்பின் மூலம் வரும் பொருளை தன் பெற்றோர் கையில் கொடுத்த பெத்தவங்களை மனம் பூரிக்கச் செய்வான். ஆனால் திடீரென்று ஒரு நாள் வாகன விபத்துக்கு பலியாகி வாசலோட வானுலகம் சென்று விடுவான். அவனால் ஏற்பட்ட சோகம் தாங்காமல் அந்த வீட்டை விற்று விட்டு வெளியேற நினைப்பார்கள். அந்த வீட்டையும் வாங்கக்கூடாது.

ஒருசிலர் வீட்டில் வீடு கட்டுவதற்கு முன்னால் வம்பு என்றால் என்ன? வழக்கு என்றால் என்ன? தெரியாது? வக்கீலை பார்த்து இருக்க மாட்டார்கள் கோர்ட் வாசலை மிதித்தும் இருக்க மாட்டார்கள் வாய்தா வாங்கியிருக்க மாட்டார்கள். ஆனால் வீடுகட்டி குடி வந்த பின்னால் வம்பும், வழக்கும் வரிசையாக அணிவகுத்து காத்திருக்கும் பங்காளிகளின் வஞ்சக சூழ்ச்சியால் வந்த வழக்கு, பங்குதாரர்கள் செய்த நம்பிக்கை துரோகத்தால் தொடங்கிய வழக்கு, எனது இடத்தில் இரண்டு அடி அதிகமாக எடுத்துக் கொண்டு தொடர்ந்து வழக்குகளால் வறண்டு மனம் சலித்து வீட்டை விற்று விட்டு வெளியில் எங்காவது போய் விடலாம் என்கிற நிலையில் வீடு விற்றால் அந்த வீட்டை வாங்கக் கூடாது.

கிராமத்தில் பெரியவங்க செலவாடையாக பேசும் அனுபவ வார்த்தைகள் "வீடு தந்தவன் கெட்டால் வாங்குகிறவனுக்கு வரும் கேடு" வசிக்கப்போகும் வீடு எப்படி இருந்தால் வாங்கலாம் அது பழைய வீடாக இருந்தாலும் ஒருவரின் ஜாதகத்தில் அமையும் கிரகங்களை வைத்து தெரிந்துக் கொள்வோம்.

- ஒருவரின் ஜாதகத்தில் 4ஆம் வீட்டில் பாவகிரகங்களாகிய சூரியன், செவ்வாய், சனி, இராகு, கேது இவர்களில் யாராவது ஒருவர் (அ) இருவர் அமர்ந்து, அந்த வீட்டுக்குரியவர் மறைந்து விட்டால் அவருக்கு பழைய வீடு தான் அமையும். சுபர்கள் குரு (அ) சுக்கிரபகவான் பார்த்தால் வாங்கிப்பழுது பார்த்து வசிக்கலாம்.
- ஒருவரின் ஜாதகத்தில் 4ஆம் அதிபதி சூரியனைக் கூடி 3இல் மறைந்து 4இல் கேது மட்டும் இருந்தால் அவர் வாங்கும் வீட்டிற்கு எதிரில் இடிந்துப்போன பழைய வீடு இருக்கும். மனை அருகில் தற்கொலை செய்துக் கொண்டவன் மனைவி விதைவையாக இருப்பாள்.
- ஒருவரின் ஜாதகத்தில் தாத்தாவுக்கு, அப்பாவுக்கு, பேரனுக்கு 7இல் புதன் ஒரே மாதிரியாக இருந்து விட்டால் அவர் வீடு கிழக்கு பார்த்த வீடாக இருக்கும். அந்த வீட்டிற்கு நேர் 4வது வீட்டில் வேசி குடியிருப்பாள். கிழக்கு நோக்கி வரும் தெரு தாக்கம் இருக்கும்.
- ஒருவரின் ஜாதகத்தில் 4இல் சனி பகவான் இருந்து 4ஆம் அதிபதி 6,8, 12இல் மறைந்தால் குடியிருக்கும் வீட்டிற்கு எதிரில் காலிமனை தான் இருக்கும் அல்லது கஞ்சி மடம் இருக்கும், தற்காலத்தில் காப்பகம் உணவு வழங்குமிடம் இருக்கும்.
- ஒருவரின் ஜாதகத்தில் இலக்கினாதிபதி புதன் இவர்களுடன் இராகு கூடி 4இல் இருந்தால் வாரிசு இல்லாத வீட்டில் கற்பு நெறிதவறியவள் வசிப்பாள். இவன் வாங்கிய பின் அந்த வீட்டை சுற்றி தடுப்புவேலி, காம்ப்பவுண்ட் கட்டிய பின் செல்வாக்கு பெறுவான்.
- ஒருவரின் ஜாதகத்தில் 11ஆம் வீட்டில் குருபகவானும் சனிபகவானும் கூடிநின்று 4ஆம் வீட்டோன் கேந்திர கோணத்தில் இருந்தால் மனைக்கு தெற்கில் வீதி கிழக்கு மேற்காக போகும். அடுத்த வீடு குழந்தை இல்லாதவர் வசிக்கும் வீடு, வாங்கும் விட்டிலிருந்த 6வது வீட்டில் வேசி குடியிருப்பாள்.
- ஒருவரின் ஜாதகத்தில் 4ஆம் அதிபதி 4இல் நீசம் பெற்று 2இல் கேது நின்று 4ஆம் வீட்டை பார்த்து விட்டால் அவர் வாங்கும் வீடு மெயின் ரோட்டில் அமையாது. சந்துக்குள் நுழைந்து பொந்துக்குள் பார்ப்பது போல் அமையும்.
- ஒருவரின் ஜாதகத்தில் 4ஆம் வீட்டில் சூரியன், செவ்வாய், கேது போன்ற நெருப்பு கிரகங்கள் அமர்ந்து 4ஆம் அதிபதி நீசம், அஸ்தங்கம் பெற்றிருந்தால் நெருப்பு, (அ) மின்சாரம், (அ) எரிவாயுவால், பாதிக்கப்பட்ட மனையை வாங்கி வசிப்பான்.
- ஒருவரின் ஜாதகத்தில் 6ஆம் அதிபதி 8ஆம் அதிபதி இவர்களுன் சனி கேது கூடி 4இல் நின்று 4ஆம் அதிபதி பலவீனப்பட்டு சுபர் பாராவிடில் புற்றுக்கண் இருக்கும் வீட்டிற்கு பக்கத்து வீட்டை விலைக்கு வாங்கி குடியிருப்பான் அல்லது இவன் வாங்கிய பிறகு புற்றுகண் வந்து விடும்.
- ஒருவரின் ஜாதகத்தில் 4இல் சுக்கிரன், சனி நின்று 4ஆம் அதிபதி 6இல் நின்றால் கீழ் மேல் வீதிக்கு வடக்கில் வீடு கிழக்கு நோக்கி அமைந்து இருக்கும். (அக்னிபிளாட்) தெற்கிலிருந்து வடக்கு நோக்கி தெரு தாக்கம் இருக்கும் கணவனை விட்டு வேறு ஒருவனை கட்டிக் கொண்டவளின் வீட்டை வாங்கி வசிப்பான்.
- ஒருவரின் ஜாதகத்தில் சனி பகவானும் செவ்வாயும் 4ஆம் இடத்தில் ஒன்றுகூடி நின்று

குரு பகவானும் சூரியனும், கூடிநின்றாலும் அல்லது ஒருவருக்கு ஒருவர் பார்த்துக் கொண்டாலும் சனி செவ்வாயை இராகு அல்லது கேது பார்த்தால் ஜாதகன் வாங்கும் வீட்டில் ஒரு விதவை கற்பமாகி உயிர் முடித்த வீடாக இருக்கும்.

இந்த கருத்து எனது அனுபவத்திற்கும் ஆய்வுக்கும் சரியாக வருகிறது. இந்த கருத்தை வலியுறுத்தும் பாடல் ஒன்று ஜோதிட காந்தீபம் எனும் நூலில் இடம் பெற்றுள்ளது. இதோ அந்த பாடலைப் பார்ப்போம். இந்த பாடலை இயற்றிய சித்தர் பெருமானுக்கு சிரம் தாழ்ந்த வணக்கங்கள், நன்றிகளும் என்றும் உரித்தாகுக.

**கண்டமாம் நாலாம் வீட்டில் காரியுஞ் செவ்வாயும் சேர**
**அண்டர்தம் ஆசானோடே ஆதித்தன் கூடி நோக்கில்**
**பண்டுள முன்னோராலும் பார்த்திடில் பாலாராலும்**
**முண்டை தான் கெற்பமாகி உயிர்தனை முடித்த வீடாம்.**

இந்த பாடலின் விதிகளின்படி அமைந்த உதாரண ஜாதகத்தைப் பார்ப்போம்.

பிறந்த தேதி = 8.5.1976

பிறந்த நேரம் = 6.15 AM

பிறந்த நக்ஷத்திரம் = மகம்

ஜெனன கால கேது திசை இருப்பு 4—07—16

| | | | |
|---|---|---|---|
| | ல சூரி குரு சுக் கேது | புத | |
| | இராசி | | சனி செவ் |
| | | | சந் |
| | | ராகு | |

| | | | |
|---|---|---|---|
| ராகு | புத | சந் | |
| | அம்சம் | | செவ் சுக் |
| | | | சனி |
| ல | சூரி | | குரு கேது |

இந்த ஜாதகர் மகம் நக்ஷத்திரம் சிம்ம இராசியில் பிறந்துள்ளார். இலக்கினம் மேஷம்

இலக்கினத்துக்கு 4ஆம் இடத்தில் சனி பகவானும் செவ்வாயும் அமர்ந்துள்ளனர். சூரிய பகவானும் குருவும் இணைந்து இலக்கினத்தில் அமர்ந்து 4ஆம் அதிபதி சந்திரனை பாக்கிறார்.

இலக்கினத்துக்கு 4ஆம் அதிபதி சந்திர பகவான் கேது சாரம் பெற்று கேதுவும் சந்திரனைப் பார்க்கிறார்.

இந்த பாடலின்படி அப்படியே கிரகங்கள் அமைந்து உள்ளது. இந்த ஜாதகர் ஒரு வீடு வாங்குவதற்கு ஆலோசனை கேட்டபோது விதவைப் பெண் கற்பமாகி உயிர்விட்ட வீடாக வரும் உன் ஜாதகப்படி அப்படி வந்தால் வாங்கி சில திருத்தங்கள் செய்து குடி போகலாம். என்று கூறப்பட்டது. அப்படியே அமைந்து இன்று சிறப்பாக உள்ளார்.

முக்கியமாக 4இல் பாவர்கள் மட்டும் பலவீனமாக அமைந்து 4ஆம் அதிபதி 6,8,12இல் மறைந்து சுபர்கள் 4ஆம் வீட்டையும் அதன் அதிபதியையும் பார்க்காவிடில் வாஸ்து குற்றம் உள்ள வீடு தான் அமையும்.

பெரும் கடனுக்கு ஆளான வீடு, தீராத வியாதியால் மரணம் அடைந்தவர் வீடு, குல தருமத்துக்கு மாறாத திருமணம் நடந்த வீடு, பெரும் குடிக்கு அடிமையானவர் வீடு, எதிர்பாராத விபத்தில் துர்மரணம் அடைந்தவர் வீடு வாங்கக் கூடாது என்பது நடைமுறையில் உள்ளது.

ஆனால் நமது ஜோதிட ஞானிகளின் பாடல்படி கிரகங்கள் அமைந்து விட்டால் அதன்படியே ஒருவருக்கு வீடு அமைந்தே தீரும் என்கிற எனது அனுபவ கருத்தை ஆதாரத்துடன் வழங்குகிறேன்.

## நோய் தீர்க்க உகந்த நாட்கள்

நோய் காரணமாக அவதிப்படுபவர்கள் அனைவரும் நோய் தீர்ந்து குணமடைய வேண்டும் என்று தான் ஒவ்வொருவரும் கடவுளை வேண்டுவார்கள் அல்லது வைத்தியரிடம் சென்று முறையிடுவார்கள். "விதியால் வந்தது திதியால் தீரும்" என்பது சாஸ்த்திர நியதி. ஒருவருக்கு ஏற்பட்டுள்ள நோய் என்ன என்பதை தெரிந்து, அந்த நோய்க்கு என்று உள்ள, சிறப்பு பெற்ற மருத்துவரிடம் கீழ்க்கண்ட நாட்களில் சந்தித்து மருத்துவம் செய்துக் கொண்டால் நோய் குணமாகும். நோயின் தீவிர பாதிப்பில் இருந்து விடுபட முடியும். இது நீண்ட கால அனுபவ ஆராய்ச்சி மூலமாக கண்டு உணர்ந்த உண்மையாகும்.

நம்பிக்கையோடு முயற்சி செய்துப் பாருங்கள் கைமேல் பலன் காத்திருக்கிறது.

### அக்டோபர் 2015 நோய் தீர்க்க உகந்த நாட்கள்

4.10.2015 ஞாயிறு பகல் 2.40 முதல் மறுநாள் 5.10.2015 திங்கள் பகல் 2.40 வரையில்

20.10.2015 செவ்வாய் பகல் 2.30 முதல் மறுநாள் 21.10.2015 புதன் பகல் 1.30 வரையில்

B. இராமசாமி

| | | | |
|---|---|---|---|
| இன்றைய அரிப்பு | - நாளைய படை | இன்றைய சொறி சிரங்கு | - நாளைய கடி |
| இன்றைய படை | - நாளைய கொப்புளங்கள் | இன்றைய கடி | - நாளைய எக்சிமா |
| இன்றைய கொப்பளங்கள் | - நாளைய தேமல் | இன்றைய எக்சிமா | - நாளைய சொரியாசிஸ் |
| இன்றைய தேமல் | - நாளைய வெண்புள்ளிகள் | இன்றைய சொரியாசிஸ் | - நாளைய நீண்ட நாள் ஆறாத புண் |
| இன்றைய வெண்புள்ளிகள் | - நாளைய சொறி சிரங்கு | இன்றைய ஆறாத புண் | - நாளை தோல் புற்று நோய் |

## பத்தியம் கிடையாது. பக்க விளைவு கிடையாது

நாம் உட்கொள்ளும் உணவுகளில் கசப்புச் சுவையுள்ள உணவுகளை முற்றிலும் தவிர்ப்பதால் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து, நோய்க் கிருமிகள் நம் உடலில் அதிகமாகி பல நோய்கள் தோன்றுவதற்கு முக்கிய காரணங்களாகின்றன. இவற்றில் தோல் நோய்களும் விதி விலக்கல்ல. தோல் நோய்களில் பல வகைகள் உள்ளன. எல்லா வகை தோல் நோய்களும் நோய்க் கிருமிகளால் தான் தோன்றுகின்றன மற்றும் சுகாதாரமின்மை, பல நோய்களுக்காக உட்கொள்ளும் வீரியமிக்க மருந்துகளின் பக்க விளைவுகளினாலும், பல விதமான ரசாயனத் தொழிற்சாலைகளில் பணி புரிபவர்களுக்கும், அதைச் சுற்றியுள்ள மக்களுக்கும் பெரும்பாலும் இந்நோய்கள் வருகின்றன.

**எக்ஸிமா :** இது தோலின் மேலோட்டமாக பாதிக்கிறது. பெரியவர்களை அதிகம் பாதிக்கும். சில வகை பொருள்களை உட்கொள்வதாலோ, அல்லது உபயோகிப்பதாலோ ஏற்படும் அலர்ஜியினால் தோலில் சிறிய கொப்புளங்கள் தோன்றுதல், அரிப்பு, கொப்புளங்களில் இருந்து நீர் வடிதல், தோல் சிவந்தும், தடிப்புடனும் காணப்படுதல், போன்ற அறிகுறிகள் இருக்கும். மேலும் குழந்தைகளுக்கு முகம், கழுத்து, முழங்கை மடிப்பு, கால் முட்டி போன்ற இடங்களில் சிவப்பு நிறத் தடிப்புகள், மற்றும் சிறிய கொப்புளங்கள் தோன்றும். இது உடல் முழுவதும் கூட ஏற்பட வாய்ப்புள்ளது.

**சொரியாசிஸ் :** இந்நோய் இளம் வயதினரை அதிகம் பாதிக்கும். இந்நோய் உள்ளவர்களின் தோல் மிகவும் வறட்சியாகக் காணப்படும். சொரிந்தால் செதில் செதிலாக உதிரிரும், அரிப்பு இருக்கும். சிவப்பு நிறக் கொப்புளங்கள் தோன்றும், கிள்ளினால் ரத்தம் வரும். மேலும் உடலின் மடிப்புப் பகுதிகளான முழங்கை மூட்டு, முழங்கால் மூட்டு, நகங்கள், உள்ளங்கை. போன்ற பகுதிகளில் சொரியாஸிஸ் தோன்றுகிறது. இந்நோயை கவனிக்காவிட்டால் சொரியாடிக் ஆர்த்தரைட்டிஸ் எனப்படும் மூட்டுவலி தோன்றவும் வாய்ப்புண்டு. இது பரம்பரையாகவும் உடலில் உள்ள வேதிப்பொருள்களின் மாற்றத்தாலும் ஏற்படும்.

**வெண்சர்மநோய் :** இது ஆண் பெண் எல்லாருக்கும் பரவலாகத் தோன்றுகிறது. முதலில் உதடு, கைவிரல்களின் நுனி, முகம், நெற்றி, முன்கை, உடலின் நடுப்பகுதி, இனப்பெருக்க உறுப்புகள், போன்ற பகுதிகளில் வெண் புள்ளிகள் தோன்றும் .பின் உடல் முழுவதும் வெண்படையாக மாறிவிடும். இதனால் உடல் நலத்திற்கு கேடு இல்லை. ஆனால் பார்ப்பதற்கு மட்டும் அசிங்கமாக இருக்கும். இது நமது தோல் முழுவதும் மெலேனோ சைட்டுகள் என்ற செல்கள் உள்ளன. இச்செல்கள் தோலுக்குக் கருமை நிறத்தைக் கொடுக்கக் கூடிய மெலனின் என்ற நிறமியை உற்பத்தி செய்கின்றன. சில காரணங்களால் மெலனின் உற்பத்தி பாதிக்கப்படும் அளவைப் பொருத்து இந்நோயின் பாதிப்பும் தெரியும்.

**தோல் புற்றுநோய் :** அடிக்கடி தோலில் ஏற்படும் காயங்கள், அவற்றில் ஏற்படும் தழும்புகள், நீண்டகாலம் வேதிப்பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் பணி புரிதல், ரேடியேசன் படுதல் போன்றவற்றால் தோல் புற்று நோய் வரலாம். இதனால் ஆறாதபுண், தோலின் மீதுள்ள மச்சம், மரு ஆகியவற்றில் மாற்றம் ஏற்படுதல், உடலின் எப்பகுதியிலாவது வலியுள்ள அல்லது வலியற்ற கட்டிகள் தோன்றுதல், அவற்றின் அளவு பெரிதாகுதல், தோலிலுள்ள மருவில் ரத்தம் அல்லது நீர் வடிதல் இருந்தால் தோல்புற்று நோய் வரலாம்.

மேலும் சொறி சிரங்கு, தேமல், புண்கள் தோன்றுதல் போன்றவையும் தோல் நோய்களில் ஒன்றாகும். தோல் நோய்களுக்கான தெய்விக மூலிகைகள்" வேப்பிலை, வில்வம், துளசி, அருகம்புல், கீழாநெல்லி, பூவரசன், குப்பைமேனி, கடுக்காய், நெல்லி, பறங்கிப்பட்டை, அரசிலை, ஆவாரம்பூ, தும்பையிலை, காற்றாழை ஆகியவற்றைப் பொடியாக்கி சம அளவில் ஒன்றாகக் கலந்து வைத்துக்கொள்ள வேண்டும். பின் இவற்றில் இருந்து இரண்டு ஸ்பூன் தூள் எடுத்து ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து உணவுக்கு முன் தினமும் காலை, பகல், இரவு ஆகிய மூன்று வேளையும் நோய்க்குத் தகுந்தவாறு நான்கு முதல் ஆறுமாதம் வரை உட்கொண்டால் எல்லாவிதமான தோல் நோய்களும் படிப்படியாக குணமாகிவிடும். இவற்றில் எந்தவிதமான பின்விளைவுகளும், ஏற்படாது.


**ஒவ்வொரு மாதமும்**

| தேதி | ஊர் |
|---|---|
| 2 | வேலூர், காஞ்சிபுரம் |
| 4 | கடலூர், விழுப்புரம் |
| 4 | திருவண்ணாமலை |
| 7,8 | மும்பை |
| 12 | சேலம், ஈரோடு, திருப்பூர் |
| 13 | கோவை, |
| 13 | உடுமலைபேட்டை |
| 14 | மதுரை, திருநெல்வேலி |
| 15 | விருதுநகர், தஞ்சாவூர் |
| 16 | திருச்சி, கரூர் |
| 20,21 | புதுடெல்லி |

டாக்டர் C.K. மாணிக்கவாசகம் அவர்களால் 37வருட அனுபவ ஆராய்ச்சியில் எழுதப்பட்ட "எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்" என்ற நூலினை பதிவுத்தபாலில் பெற ரூ. 140 /-ம், "என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்" என்ற புதிய நூலினை பதிவுத் தபாலில் பெற ரூ. 140 /-ம், தலைமை முகவரிக்கு M.O. அனுப்பவும். மேலும் விவரங்களுக்கு:

**Dr.M.குருபரன் & Dr.M.சபாபதி, S/o.Dr.C.K.மாணிக்கவாசகம்**

**CKM தெய்விக மூலிகை மையம்**

**CKM DIVINE HERBAL CENTRE**

தலைமை முகவரி : நெ. 1, திருநாத முதலி நகர் (காலேஜ் எதிரில்) திருப்பத்தூர், வேலூர்-635601 ☎ :04179-220469, செல் : 9444161670

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை-600 010. ☎:044-26424285, 26427638 செல்: 9444001447

மேலே உள்ள முகவரிகளில் ஆலோசனை நேரம் : தினமும் காலை 10.00 - 1.00pm மாலை 5.00 - 7.00pm

Email : msabapathy@rocketmail.com

# ஆரோக்கியமும், பாதுகாப்பும் தரும் ஸ்ரீ பரணி ஸ்ரீ கட்க ராவணர் 3D யந்திரம்




ஜனார்தன குப்தா

எனர்ஜி கன்சல்டன்ட், கிரிஸ்டல் மாஸ்டர்

செல்: 98422 40274, 97897 78833


ஆதி பகவானும் முதல் சித்தனுமாகிய சதாசிவனின் கர்ஜனையில் பிறந்தவர் பகவான் ஸ்ரீ கட்க ராவணர். இலங்கையின் ராட்சஷ அரசன் - இராமாயணம் புகழ் 10 தலை இராவணனுக்கும் ஸ்ரீ கட்க ராவணருக்கும் எந்த தொடர்பும் இல்லை. பைரவர், ருத்ர பகவானை போன்றே கட்க ராவணரும் சிவ பெருமானின் ஓர் அம்சமே. சிவ பூத கணங்களின் ப்ரதான அதிபதியாகிய இவர் மனிதர்களை, குறிப்பாக குழந்தைகளையும், சிறு வயதினரையும் பேய், பிசாசு, வேதாளம், யக்ஷர்கள், ப்ரம்ம ராக்ஷசர்கள் ஆகிய துஷ்ட சக்திகளிடமிருந்து காப்பாற்றி, இளம்பருவத்தினருக்கு நல்ல ஆரோக்கியம் வழங்கவே படைக்கப்பட்டவர்.



ஸ்ரீபரணி ஸ்ரீ கட்க ராவணர் 3D யந்திரம் (விரிந்த நிலையில் உள்ள தாமரை இதழ்கள்)

SRIPARNI SRI KHADGA RAVANA 3D YANTRA (WITH OPEN LOTUS PETALS)

ஸ்ரீ கட்க ராவணரின் முழு அனுகிரகத்தையும் பெற்ற தெய்வீக முப்பரிமான யந்திரமே இந்த ஸ்ரீ கட்க ராவணர் 3D யந்திரம். பாரம்பரிய வேதஜோதிட வல்லுனர்கள் மற்றும் வேத வைத்தியர்கள் (குறிப்பாக ஆயுர்வேத வைத்தியர்கள்) பல நூறு ஆண்டுகளாக இந்த யந்திரத்தை ஜாதகரீதியான பாலாரிஷ்டம் (பால கிரஹ தோஷம் 8 அல்லது 12 வயது வரை), மத்தியாரிஷ்டம் (20 வயது வரை) மற்றும் யோகாரிஷ்டம் (32 அல்லது 38 வயது வரை) ஆகியவற்றுக்கு தலைச் சிறந்த பரிகாரமாக சிபாரிசு செய்து வருகின்றனர். இந்த 3 தோஷங்களினால் நேரும் வலிகள், வேதனைகள், உடல் உபாதைகள், துர்ஆரோக்கியம், இள வயது மரணம், தீராத வியாதிகள், வன்முறை விபத்துகள், ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கும் அதீத சக்தியை பெற்றது. குழந்தை பிறந்த சில மாதங்களிலேயே ஏற்படும் அகால மரணம், அல்பாயுசு, ஆகியவற்றை தடுக்கவும் இந்த 3D யந்திரம் மிக உகந்தது.

ஸ்ரீ கட்க ராவணின் மேன்மையையும், பற்பல சக்திகளையும், மந்திர ப்ரயோகங்களையும் பற்றி பல தாந்திரீக நூல்களும், மாந்திரீக புத்தகங்களும், சமஸ்கிருத வேதங்களும் விவரிக்கின்றன. இந்திய, நேபாள, இந்தோனேஷிய நாடுகளில் எழுதப்பட்ட இந்த பழமையான நூல்களில் சில் கிரியாகால குணதாரா (அத்தியாயம் 9 முதல் 12 வரை), கட்க ராவண கல்பம், ஈசான சிவகுரு தேவ பத்ததி (கேரளம்), தந்திரசார சம்க்ரஹம் (கேரளம்), மந்திர வாதம் (கேரளம்), ப்ரபஞ்ச சார சம்க்ரஹம், சாரதா திலகம், கட்க ராவண பண்டிதம், ஸ்ரீகண்டீயம், தந்திரிகா அபிதான கோஷம், கட்க ராவண மமஹ தந்திரம் (நேபாளம்), கட்க ராபன தந்திரம் (நேபாளம்), கட்க ராவண ஸ்துதி (பாலி, இந்தோனேஷியா), குமார தந்திரம்.

இளவயதிலேயே துர் ஆன்மாக்கள் அல்லது துஷ்ட சக்திகளினால் பாதிக்கப்படுபவர்களின் வேதனையை தீர்க்கவும், எதிர்மறை சக்திகளை முறியடிக்கவும் பல மந்திரங்களையும், யந்திரங்களையும் பல பிரபல நூல்களான குமார தந்திரம், பால தந்திரம், பால க்ரஹ சாந்தி, பால சிகிச்சை, வைசாச க்ரஹ சாந்தி விவரித்தாலும், இவை எல்லாவற்றையும் விட ப்ரதான மந்திரமும், யந்திரமும் ஸ்ரீ கட்க ராவணரின் யந்திரமே என்பது சாட்ஷாத் சிவபெருமானின் வாக்கு. இதைப் பற்றி கிரியாகால குணதாரா கூறுவது ஸ்ரீ சண்முக பெருமான் தனது தந்தை மகாதேவனிடம் மேற்கண்ட தீய சக்திகளை அழிக்கவும், இளவயதினரை பாதுகாக்கவும் சிறந்த மந்திரத்தையும், யந்திரத்தையும் போதிக்குமாறு கேட்க பரமசிவனும் முருகனுக்கு தனது வீரகர்ஜனையிலிருந்து தோன்றிய ஸ்ரீ கட்க ராவணரின் மந்திரத்தையும், யந்திரத்தையும் உபதேசிக்கின்றார்.

## பலன்கள்

ஸ்ரீ மஹாலக்ஷ்மி சுயம்புவாக குடியிருக்கும் தெய்வீக ஸ்ரீபரணி மரத்தினால் முப்பரிமானத்தில் வடிவமைக்கப்பட்ட கட்க ராவண 3னு யந்திரம் முறைப்படி தீக்ஷை வாங்கியவர்களின் மூலம் இயக்குவிக்கப்பட்டால் (சுத்தி

கரணம், ப்ராண ப்ரதிஷ்டை, சம்முக கரணம்) கிடைக்கும் சில நன்மைகள்

1) குழந்தைகளின் வியாதிகள் குறைய, குறிப்பாக துர் ஆன்மாக்களால் ஏற்படும் பிணிகள்.

2) தீய சக்திகளால் உண்டாகும் விஷ ஜுரங்கள் (குறிப்பாக குழந்தைகளுக்கு) சரியாக.

3) நீண்ட நாள் நோய்கள் குறைய (குறிப்பாக சிறு வயதினருக்கு).

4) இளம் வயதினரை தாக்கும் துஷ்ட ஆன்மாக்களை விரட்ட.

5) ஜாதகத்தில் உள்ள பாலாரிஷ்டம் என்னும் பால க்ரஹ தோஷத்தினால் குழந்தைகளுக்கு ஏற்படும் பிணிகள், கடும் துயரங்கள், அதிர்ஷ்டமின்மை, பால மரணம் ஆகியவற்றை தடுக்க.

6) ஜாதகத்தில் உள்ள மத்தியாரிஷ்டம் மற்றும் யோகாரிஷ்டத்தின் துர் பலன்களை குறைக்க.

7) குழந்தைப்பேறு இல்லாமல் அல்லது பிரசவத்தின் பொழுது இறந்த பெண்களின் அதிருப்தி ஆன்மாக்களின் தாக்குதல்களிலிருந்து இளம் பருவத்தினருக்கு பாதுகாப்பு.

8) 16 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு 8 மூர்க்க அசிவ-மாத்ருக்களிடமிருந்து பாதுகாப்பு (மஹாபாரதம் - வன பர்வத்தில் பகவான் ஸ்கந்தரின் கூற்று).

9) கர்ப்பவதிகள் மற்றும் புதிதாக பிறந்த குழந்தைகளுக்கு, பிரசவ அறைகளில் வசிக்கும் அருவெறுப்பான 10 வித துர் ஆவிகளிடம் இருந்து பாதுகாப்பு (வன பருவம் - மஹாபாரதம்).

10) வளரும் மற்றும் மலரும் பருவத்தில் உள்ளவர்கள் (ஆண் மற்றும் பெண்) நெறி முறையற்ற, விபரீத ஈர்ப்பு சக்திகளுக்கு அடிப்பணியாமல் இருக்க.

11) வாழ்க்கையில் தடைகள், தடங்கல்கள், ஆகியவற்றை தாண்டி வர.

12) தீய எண்ணத்துடன் செய்யப்பட்ட நெறியற்ற வசிய கட்டுகளை முறியடிக்க.

13) கண் திருஷ்டி, பொறாமை, ஏமாற்றம், பேராசை, சுயநலம், பழி வாங்குதல் ஆகியவற்றில் இருந்து பாதுகாப்பு.

14) பில்லி, சூனியம், ஏவல் போன்றவற்றை முறியடிக்க.

15) கருப்பு உருவங்கள், மாந்திரீக வலைகள், தாந்திரீக வசியங்கள், மந்திரக் கட்டு, மாயக்கட்டு ஆகியவற்றை உடைக்க.

16) எதிர்காலத்தில் இவை நிகழாமல் தடுக்க.

17) தீங்கு இழைக்கும் உயிரினங்கள், இருள் சக்திகள், பேய்கள், பிசாசுகள், பூதங்கள், இரத்த காட்டேறிகள், வேதாளங்கள், நிலை கொள்ளாமல் அலையும் ஆவிகள், மனதை மயக்கும் மோகினிகள், இரத்த ஒட்டுண்ணிகள், ஜீன்கள் - ஆகியவற்றை விரட்ட.

18) துர் மரணம், வன்முறை மரணம், தற்கொலை, இயற்கைக்கு மாறான மரணம், விபத்தால் மரணம் - போன்ற சம்பவங்கள் நிகழும் வாய்ப்புகளை குறைக்க.

இந்த ஸ்ரீ கட்க ராவண 3D யந்திரம் ஸ்ரீபரணி மரத்தில் செய்யப்பட்டுள்ளதால் (புனித ஸ்ரீபரணி மரம் சாட்ஷாத் மஹாலக்ஷ்மி தாயார் சுயம்புவாக குடியிருக்கும் தெய்வீக மரமாகும்) இதற்குள் இயற்கையாகவே செல்வச் சக்திகள் நிரந்தரமாக தங்கியிருக்கும் தன்மையை பெற்றது. இதனால் இந்த 3D யந்திரத்தை வைத்திருப்போருக்கு அது பணப்புழக்கம், லாபம், அதிக வருமானம், செல்வ வளமை, ஐஸ்வர்யம், புதிய சொத்து வாங்கும் ஆசீர்வாதம் ஆகியவற்றை அளிக்கின்றது. இதுவல்லாமல் வாஸ்து குறைகளால் எழும் தீய சக்திகளையும், மாசு சக்திகளையும் (Pollution energy) ஒடுக்கி இல்லத்தில் , அலுவலகத்தில் இருப்போருக்கு பாதுகாப்பை தருகின்றது.

தெய்வீக சக்திகள் மிகுந்த ஸ்ரீபரணி மரத்தால் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த முப்பரிமான ஸ்ரீ கட்க ராவண 3D யந்திரம் விரிந்த நிலையில் உள்ள தாமரை இதழ்கள் கொண்ட உருவத்தில் கிடைத்தால் மிகவும் விசேஷமானது. மேலும் முறைப்படி தீக்ஷை பெற்றவரிடம் இந்த 3D யந்திரத்தை உங்களுக்காக (பெயர், பிறந்த தேதி, பிறந்த நேரம்) சம்முக கரணம் செய்து வாங்கி கொண்டால் நித்ய பூஜையோ, ப்ரத்யேக மந்திர உச்சாடனங்களோ, தனி ஜப வழிபாடுகளோ எதுவும் செய்யாமலேயே முழுமையான பலன்களை பெறலாம். அதுமட்டுமல்லாமல் அவ்வாறு இயக்குவிக்கப்பட்ட 3D யந்திரம் (2D யந்திர தகடு போல் சில மாதங்கள் மட்டுமே செயல்படாமல்) நீண்ட ஆயுளுடன் பற்பல ஆண்டுகள் அதே வீரியத்துடன் செயல்பட்டு, நன்மைகளை தந்த வண்ணம் இருக்கும்.

இந்த கலியுகத்தில் தனி நபருக்கும் சரி, ஒரு குடும்பத்திற்கும் சரி, இன்று மிக அத்யாவசியமாக தேவைப்படும் அம்சம், துஷ்ட சக்திகளிலிருந்து பாதுகாப்பாகும். எதிர்மறை சக்திகளை முறித்து, குழந்தைகளுக்கு நலம் அளிக்கும் இந்த ஸ்ரீபரணி ஸ்ரீ கட்க ராவண 3D யந்திரம், இந்த கலியுகத்திற்கு உண்டான ஒரு தெய்வீக வரப்பிரசாதமாகும்.

## முக்கிய குறிப்புகள்

எல்லா பரிகாரப் பொருட்களைப் போன்றே, ஸ்ரீபரணி ஸ்ரீ கட்க ராவண முப்பரிமான யந்திரம் வாங்கும் பொழுதும் அவசியம் (முறைப்படி தீக்ஷை வாங்கியவர்களிடம்) முறைப்படி சுத்திகரணம் (CLEANSING) செய்து, சக்தியூட்டி (ENERGIZING - ப்ராணப் பிரதிஷ்டை), ப்ரொக்ராமிங் (PROGRAMMING - சம்முக கரணம்) செய்த பின்பே வாங்க வேண்டும். இல்லையென்றால் நற்பலன்கள் கிடைக்காது. அதுமட்டுமல்லாமல், நன்மைக்கு பதில் தீமைகள் விளையவே வாய்ப்புகள் அதிகம். பழம்பெரும் வேதங்கள் நமக்கு அளித்துள்ள பரிகார பொருட்களை பொருத்த வரையில், விலையை விட தரத்திற்கும், தகுதிக்கும், சக்திக்கும் முக்கியத்துவம் தருவதே நலம். ஆதலால், தரமான பரிகார பொருட்களை தேர்ந்தெடுத்து, வளமான வாழ்வு பெற்று, நன்மைகள் பல அடைந்து நலமாக வாழ்வதே நன்று.

●

# சித்தர்கள் ஜீவ நாடி இரகசியங்கள் தீர்க்க தரிசனம் தந்திடும் அதிசயங்கள்

**23**




• ஸ்ரீ ஸ்கந்த உபாசகர்

**P.D. ஜெகதீஸ்வரன்**


**கோ**யம்புத்தூரில் இருக்கின்ற மிகச்சிறப்பான ஆலயம் பேரூர் பச்சை நாயகி உடனமர் பட்டீஸ்வரர் கோவில். நான் கோவையில் 2003ஆம் ஆண்டு முதல் 2007ஆம் ஆண்டு வரை தங்கி இருந்தேன். அப்போதெல்லாம் என்னை மிகவும் கவரும் சிவாலயம் இது. செவ்வாய்க்கிழமை தோறும் தவறாமல் இந்த பேரூர் பட்டீசனைக் காணச் சென்று விடுவேன். அதன் பின்னர் இடமாற்றம் காரணமாக சேலம் வந்தாகிவிட்டது. இருந்தாலும் கோவை செல்லும் வாய்ப்பு கிடைத்தால் பேரூர் செல்வது வழக்கம். காரணம் என்ன என்று எனக்கு அப்போது தெரியவில்லை. சேலம் வந்த பின்பு சுமார் 5 வருடங்களாக பேரூர் செல்லவே இல்லை. பணிச்சுமையும், சரியான நேரம் கிட்டாமையுமே காரணமே அன்றி வேறில்லை. நமக்கு இறைவனைப் பிடிப்பது முக்கியமல்ல இறைவனுக்கு நம்மைப் பிடிக்க வேண்டும் அதுதான் முக்கியம். அந்த வகையில் பேரூர் பட்டீசனுக்கும் என்னைப் பிடித்திருக்கும் போலும். ஏனப்பா என்னை வந்து பார்க்கவில்லை. வந்து பார் என்று உரைக்கும் வாய்ப்பை அந்த இறைவன் மீனாட்சி நாடி மூலம், மீனாட்சி அன்னை மூலம், குரு நாதர் ஜோதி அக்பர் சுவாமிகள் திருவாக்கின் மூலம் உரைத்தார். ஆம் திருவண்ணாமலை மீனாட்சி நாடியில் எனக்குப் பின்வருமாறு வந்தது.

**”வகையருளும் முறையாகி**
**பேரூர் பட்டீசனைக் கண்டு வா**
**பின்பு ஆதீனக் குரு நாதன் உண்டு**
**பிரியமுடன் ஆசியதை வாங்கி வா**
**நீண்ட தொரு இடைவேளை ஏனடா**
**வந்து பார் என்றார் ஈசன்”**

—மீனாட்சி நாடி

ஆச்சரியம் தாங்கவில்லை. அழுகையும் செய்த தவறுக்கு குற்ற உணர்ச்சியும் வந்தது. இருந்தாலும் பட்டீசனையும் பச்சை வண்ண நாயகியையும் நினைத்து நினைத்து கண்ணீர் மல்கினேன். இறைவனே, வந்து உன்னைப் பார்க்க உனதாசி வேண்டும் என்று மனதிற்குள் பிரார்த்தனை செய்துக் கொண்டேன்.

பேரூரைப் பற்றி சற்று சொல்லியே ஆக வேண்டும் என்பதால் இங்கு அதன் வரலாற்றைச் சற்று சுருக்கமாகவே சொல்கிறேன். பிரம்மனைப்போல படைப்புத் தொழிலை மேற்கொள்ள வேண்டும் என விரும்பிய காமதேனு, சிவனை நோக்கி கடும் தவம் இருந்தது. இத்தலத்தில் புற்று வடிவில் இருந்த சிவலிங்கத்தின் மீது தினமும் பால் சொரிந்து வழிபட்டது. காமதேனுவின் கன்றான "பட்டி' விளையாட்டாக தன் காலால் புற்றை உடைத்து விட்டது. பதறிப் போன காமதேனு இறைவனிடம் மன்னிப்பு கேட்டது.

காமதேனுவின் முன் தோன்றிய இறைவன் "உனது கன்றின் குளம்படி தழும்பை மகிழ்ச்சியுடன் ஏற்கிறேன். இது முக்தி தருவதில் முதன்மை தலமாதலால், நீ வேண்டும் படைப்பு வரத்தை திருக்கருகாவூரில் தருகிறேன். அங்கு சென்று தவம் செய். உனது நினைவாக இத்தலம் "காமதேனுபுரம்' என்றும், உன் கன்றின் பெயரால் "பட்டிபுரி' என்றும், எனக்கு "பட்டீஸ்வரர்' என்றும் பெயர் வழங்கப்படும்,"என அருளினார். சிவ லிங்கத்தின் தலையில், காமதேனு கன்றின் குளம்படி தழும்பை இப்போதும் காணலாம். சன்னதி விமானத்தில்



எட்டு திசை காவலர்களின் உருவங்கள் அமைந்துள்ளன. அம்மன் பச்சைநாயகி சன்னதி விமானம் சதுரமாக அமைந்துள்ளது. மற்றொரு அம்பிகையான மனோன்மணிக்கும் சன்னதி இருக்கிறது. சோமாஸ்கந்த வடிவில், சிவனுக்கும் அம்மனுக்கும் நடுவில் முருகன் அருள்பாலிக்கிறார்.

முக்தி தலம் என்பதால் நாய் வாகனம் இல்லாத ஞான பைரவர் இங்கு அருள் செய்கிறார். அம்மன் சன்னதிக்கு வெளியே வரதராஜப் பெருமாளும், பிரகாரத்தில் மரத்தில் உருவான பெரிய ஆஞ்சநேயரும் அருளுகின்றனர். நாற்று நடும் திருவிழா இங்கு விசேஷம். கோயிலின் முன்பு "பிறவாப்புளி' என்ற புளியமரம் இருக்கிறது. இதன் விதைகளை எங்கு போட்டாலும் முளைக்காது.

இத்தலத்தை தரிசிப்போருக்கு இனி பிறப்பில்லை என்பது பொருள். ஆதிசங்கரர் தன் தாயின் முக்தி வேண்டி இங்கு பிரார்த்தனை செய்துள்ளார். இங்குள்ள பனைமரம் "இறவாப்பனை' எனப்படுகிறது. இங்கு தரிசனம் செய்தால் அழியாப்புகழ் கிடைக்கும் என்று பொருள். நொய்யல் நதிக்கரையில் உள்ள பட்டிவிநாயகரை வழிபட்டால் நினைத்த காரியம் நடக்கும் என்பதும், இறந்தவர்களின் எலும்புகள் இந்நதியில் போட்டால் சில நாட்களில் அவை வெண்கற்களாக மாறி விடும் என்பதும் ஐதீகம். இங்கே இறப்பவர்களின் காதில் இறைவன் "நமசிவாய' எனும் ஐந்தெழுத்து மந்திரத்தை உச்சரித்து தன்னடியில் சேர்த்துக் கொள்வதால், இங்குள்ள மக்களை இறக்கும் தருவாயில், வலது காது மேலே இருக்கும் படியாக வைப்பர் என்பதும், இப்பகுதியில் உள்ள சாணத்தில் கூட புழுக்கள் உண்டாகாது என்பதும் சிறப்பம்சங்கள். சிவாலயங்களில் ஆடும் நிலையில் உள்ள நடராஜரை தரிசிக்க முடியும். ஆனால், ஆடி முடியப்போகும் நிலையில் நடராஜர் எப்படி இருப்பார் என்பதை இக்கோயிலில் காணலாம்.



இங்கு நடராஜரின் முகத்தில் குறும்பு பார்வை தெரிகிறது. மேடான கதுப்பு கன்னங்களும், பின்புறத்தில் தாழ் சடையும், ஆடி முடியப்போகும் நிலையில் கால்களும் தரையை நோக்கி மிகவும் தாழ்ந்துள்ளன. இங்குள்ள கனகசபையில் தான் பிரம்மா, விஷ்ணு, காளி, சுந்தரர் ஆகியோருக்கு நடராஜர் ஆனந்த தாண்டவ தரிசனம் தந்துள்ளார். சிதம்பரத்திற்கு அடுத்தபடியாக இங்கு திருவாதிரை திருவிழா மிகச்சிறப்பாக கொண்டாடப்படுவதால் இத்தலம் "மேலைச்சிதம்பரம்' என அழைக்கப்படுகிறது. இது எல்லாம் தெரியாத காலத்திலேயே நான் அடிக்கடி அங்கு சென்றது எனது பூர்வ புண்ணியமும் அந்த ஞானஸ்கந்தப் பெருமானின் அருளுமே ஆகும்.

ஒரு நாள் அன்னை மீனாட்சி உரைத்தபடி பேரூர் செல்லலாம் என்று முடிவு செய்து புறப்பட்டேன். நம்து ஞானஸ்கந்தாஸ்ரமத்திற்கு கோவை நகரில் ஒரு சிறந்த சேவகராக இருந்து வருகின்றவரும் என்னிடம் தீட்சை பெற்று முருக உபாசனை செய்து வருபவருமான திருமுருக சுரேந்திரமான அடியவர் குருஜீ வாருங்கள் எனது காரிலேயெ பேரூர் சென்று வரலாம் என்று சொல்லி என்னை அவரது காரில் ஏற்றிக் கொண்டு பீளமேடு பகுதியில் இருந்து பயணித்து பேரூரை அடைந்தோம். உள்ளம் பூரித்தது, உடல் சிலிர்த்தது. பேரூரா பட்டீசா எனும் நாமங்கள் என்னை அறியாமலேயெ எழுந்தன. வழக்கமாக நான் முன்பெல்லாம் செல்லும் போது என்னுடன் படிக்கும் நண்பர்கள் சிலரும் வருவார்கள். வேறு யாரையும் கோவிலுக்குள் தெரியாது அந்த பட்டீசனைத் தவிர. ஆனால் முருகப் பெருமான் ஓர் ஆச்சரியத்தை அங்கு வைத்திருந்தார். ஆம் கருவறை முன்பு நின்று இறைவனைத் தரிசனம் செய்த நொடி கூட இல்லை. சுவாமி என்றது ஒரு குரல். திரும்பிப் பார்த்தேன். கோவில் பிரதான அர்ச்சகர் வயதில் மூத்தவர் பெரியவர் தில்லை ஆடும் ஐயன் நடராஜரின் நாமம் படைத்தவர். சுவாமி சொல்லுங்கள் என்றேன். நீங்கள் ஜீவ நாடி படிப்பவர் முருக உபாசகர் தானே என்றார். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஆம் என்றேன். உங்களப் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன். உங்கள் கட்டுரைகளையும் **"திருவருள் சக்தி"**யில் படித்து வருகிறேன் என்றார். சரி வாருங்கள் என்று எனது பெயருக்கு அர்ச்சனை செய்து கண்களை மூடி பிரார்த்தனை செய்து உடனே நீங்கள் ஓர் ஆஸ்ரமம் கட்ட வேண்டுமாம் இந்தா பிடி ஒரு ரூபாய் என்று சொல்லி சிவ பெருமான் உங்களிடம் கொடுக்கச் சொல்கிறார் இதை மூலதனமாக்கி ஆஸ்ரமத்தை அபிவிருத்தி செய்யச் சொல் என்கிறார் என்று சொல்லி கொஞ்சம் வில்வமும் சிவ பெருமானின் நெற்றிக் காணிக்கையையும் சந்தனத்தோடு சேர்த்துக் கொடுத்தார்.. கடவுளே என்ன விளையாட்டு என்று பிரகாரம் சுற்றி வந்தோம். எங்கள் பின்னாலேயே அவரும் தீபாராதனைத் தட்டோடு வந்திருக்கிறார் எனக்குத் தெரிய வில்லை. சுவாமி என்றேன் அது என்னமோ தெரியவில்லை உங்களிடம் இருக்கும் ஒரு வித சக்தி என்னை இழுக்கிறது என்றார்.

இத்தனை திருவிளையாடலும் ஒரு நொடிக்குள் நடந்து முடிந்தது. பின்பு தரிசனம் முடித்து வெளியில் வந்தோம். இப்போது நினைத்தாலும் உடல் சிலிர்க்கிறது. அப்போது நமது ஸ்ரீ ஞானஸ்கந்தாஸ்ரமம் ஒரு சிறிய அருள் வாக்கு மேடையாகவே இருந்தது. ஆனால் இப்போது ஒரு பெரிய அளவில் வளர்ந்து வருகிறது என்றால் அந்த பட்டீசன் போட்ட முதல் பிச்சை என்பதை இன்றும் உணர்கிறேன்.

சரி இறைவனத் தரிசனம் செய்து விட்டோம். பேரூர் ஆதினம் அவர்களைத் தரிசனம் செய்ய வேண்டும் என்று எண்ணி பேரூர் மடத்திற்குச் சென்றோம். அங்கு பெரிய ஆதீனம் தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார் இல்லை. இளைய பட்டம் தவத்திரு. மருதாசல அடிகளார் அவர்கள் இருந்தார்கள். அவரிடமும் ஆசி வாங்கி பின்பு பெரிய ஆதீனம் அவர்களை சந்தித்து ஆசி பெற வேண்டும் என்று சின்ன சுவாமிகளிடம் தெரிவித்தோம். அதற்கு அவர் பெரிய சுவாமிகள் வெள்ளியங்கிரி மலைச்சாரலில் தங்கி இருக்கிறார் அங்கு செல்லுங்கள் என்று ஆசி கூறி அனுப்பி வைத்தார்கள். அடுத்து கார் வெள்ளியங்கிரி மலைச்சாரல் நோக்கிப் பயணித்தது. அதற்கு முன் சிவ பெருமானும் ஞானஸ்கந்த மூர்த்தியும் ஒரு திருவிளையாடல் நடத்தினார்கள்.

சிவ வேடம் பூண்ட அடியவர் ஒருவர் சாந்தலிங்கர் கோவிலில் அமர்ந்து சிவ பஞ் சாட்சரத்தை உரக்க ஜபித்துக் கொண்டிருந்தார். எங்கிருந்து இந்த சிவ மந்திரம் கேட்கிறது என்று திரு மடத்திற்குள் சென்று பார்க்க, வியப்பாக ஒரு சிவ யோகி அவ்வளவு தேஜஸ் முகத்தில் ஒளி வீச அமர்ந்துக் கொண்டு இருந்தார். உடனே அவர் முன்பு சாஸ்டாங்கமாக விழுந்து வணங்கி விடை பெறலாம் என்று எண்ணும் போது எனது அருகில் இருந்த எனது சீடன் திருமுருக விஜயகுமார் அடியவரை அழைத்து அவர் எந்த ஊர் என்று கேள் என்றேன் அப்படியே அவர் கேட்க சுவாமிகள் புன்னகைத்து காசி என்று மட்டும் பதில் அளித்து விட்டு அங்கிருந்து எழுந்து விடு விடு என வேகமாகச் சென்று விட்டார். அப்படி அவர் செல்லும் போது திடீரெனெ என் மீது ஒரு பார்வை பார்த்து புன்னகை செய்து பின் வேகமாகக் கிளம்பி விட்டார்.


அப்போது அதன் அர்த்தம் தெரியவில்லை. ஆனால் அதன் சூட்சுமம் பின்னர் புரிந்தது. அதைப் பற்றி பின்பு சொல்கிறேன். சரி எதோ இது இறைவனின் திருவிளையாடல் என்று எண்ணி அடுத்து தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளாராகிய பெரிய சந்நிதானங்களைப் பார்த்து ஆசி வாங்க ஆயத்தமானோம். மிகுந்த ஆவலோடு வெள்ளியங்கிரி மலை அடிவாரத்தை அடைந்தோம். மிக இரம்மியமான மலைச்சாரலில் அழகான மண்டபத்தில் உற்சவர் விக்கிரகம் வீற்றிருப்பது போல் பெரிய சுவாமிகள் வீற்றிருந்தார்கள். கையில் கொண்டுச் சென்ற பூ, பழங்களைக் கொடுத்து ஆசி வாங்கினோம். அமருங்கள் என்று எங்களுக்கு நாற்காலி கொடுத்து அமர வைத்தார். சிறிது நேரம் மௌனம். கண்களை மூடிக்கொண்டே சாய்வு நாற்காலியில் அமர்ந்தபடியும், படுத்த படியுமே இருந்தார். திடீரென எனது முகத்தையே உற்றுப் பார்த்தார். மீண்டும் கண்களை மூடினார். சொல்லுங்கள் என்றார். சுவாமி நான் ஒரு முருகன் உபாசகன் என ஆரம்பித்து, ஜீவ நாடி பற்றியும் இளமை காலம் தொட்டு முருகன் என் மூலம் நடத்திய திருவிளையாடல்கள் பற்றியும் ஒரு நீண்ட விளக்கமே கொடுத்தேன்.

அதே போல் 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட மீனாட்சி நாடியில் உங்களிடம் நான் ஆசி பெற வேண்டும் என்ற குறிப்பு உள்ளதைப் பற்றித் தெரிவித்து அதன் காரணமாகவே தங்களைப் பார்க்க வந்திருக்கிறோம் என்று சொன்னேன். பத்திரிகைப் பணி, கல்லூரிப் பணி பற்றியும் மிக ஆர்வமாக விசாரித்தார். கேட்டுக் கொண்டே இருந்தவர் திடீரென பலத்த சத்தத்துடன் என் முகத்தைப் பார்த்து சிரித்தார். அதுவரை சாதாரணமாக இருந்த எனக்கு திடீரென கண்கள் கட்டிக் கொண்டு ஒரு வித மயக்க நிலை ஏற்பட்டது. பின்பு முருகனுக்கு நீங்கள் செய்யும் பூஜை முறைகள் என்ன என்பதைப் பற்றிக் கேட்டார். சொன்னேன். முருகன் விளையாடுகிறாரப்பா, சிரிக்கிறாரப்பா, உனக்குள் உட்கார்ந்து இருக்கிறாரப்பா என்று சொல்லி திரு முருகாற்றுப் படை பற்றி ஒரு நீண்ட விளக்கமே கொடுத்தார். வயது ஆகின்ற காரணத்தால் வெள்ளியங்கிரி கைலாயத்திடமே அடைக்கலம் ஆகி இருப்பதாகவும் கூறி அங்கு தெரிகின்ற கைலாயக் காட்சியை எங்களுக்குக் காண்பித்தார். சுவாமி தாங்கள் ஒரு முறை எங்களது ஆலயம் வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்க இப்போது எங்குமே செல்வதில்லை என்றும் என்னைக் கைகாட்டி பெரிய அளவில் வளர்ச்சி வரும் என்றும் தமிழ் முறைப்படி பூஜை செய்து வா என்றும் உபதேசம் செய்தார். சரி சரி சாப்பாட்டு நேரம் ஆகிறது வாங்க சாப்பிடலாம் என்று சொல்லி சுடச் சுட உணவு பரிமாறி அமிர்தம் போல் மோர் கொடுத்து சில நூல்களையும் கொடுத்து எங்களை அனுப்பி வைத்தார். எனது வாழ் நாளில் மறக்க முடியாத மற்றும் மறக்கக் கூடாத சம்பவமாக இது அமைந்தது என்றே சொல்ல வேண்டும்.

மீனாட்சி நாடி உரைத்தபடியே செய்து முடிக்கும் போது இன்னும் ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. அது என்ன?

ஓம் ஸ்ரீ ஞானஸ்கந்த மூர்த்தி புகழ் ஓங்கட்டும்!!!

(தொடரும்...)



**உங்கள் பிரச்சனைகள் எதுவாக இருந்தாலும் 24 மணி நேரத்தில் தீர்வு ஆரம்பம்**
**21 நாட்களுக்குள் தீர்வு சிறிதளவும் உணர முடியவில்லை என்றால்**
**உங்கள் பணம் உங்கள் கையில் இது என் உறுதிமொழி**
ஆரா ஷீல்டு தெரபி ஆராய்ச்சியாளர் **திரு.பி.என்.பார்த்திபன்**

நீங்கள் சந்திக்கும் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் மூல காரணம் ஒன்றே ஒன்று மட்டுமே. அது உங்களின் ஆரா (புறக் கண்களுக்குத் தெரியாத உங்களின் உடலைச் சூழ்ந்துள்ள உயிர் சக்தி) எதிர்மறையான **மின்காந்த கதிர்வீச்சு (Electromagnetic Radiation), பூமிதோஷம் (Geopathy), வாஸ்த்து தோஷம், கண் திருஷ்டி, ஆவிகள், செய்வினை (Black Magic)** போன்ற **அமானுஷ்ய தீய சக்திகளின்** தாக்குதல்களால் பலமிழந்து போவதே ஆகும். இப்படிப்பட்ட அதிபயங்கரமான 6 விதமான எதிர்மறை சக்திகள் உங்கள் ஆராவை (உயிர்ச்சக்தியை) தாக்காமல் ஒரு சக்தி வேலி (Energy Shield) அமைத்து விட்டால், நீங்கள் சந்திக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட மருத்துவர்களால் காரணம் கண்டுபிடிக்க முடியாத உடல் ஆரோக்கியப் பிரச்சனைகள், மன அழுத்தம்/சோர்வு/பயம்/ அடிக்கடி தற்கொலை எண்ணம் மேலோங்கி இருத்தல் போன்ற மனரீதியான பிரச்சனைகள், பொருளாதாரத் தடை, தூக்கமின்மை, தொடர் தோல்விகள், திருமணத் தடை, உறவுகளிடையே ஏற்படும் போராட்டங்கள், படிப்பில் கவனமின்மை மற்றும் காரணம் என்னவென்றே கண்டுபிடிக்க முடியாத அமானுஷ்யமான பிரச்சனைகள் அனைத்திற்கும் **24 மணி நேரத்தில்** இருந்து 21 நாட்களில் தீர்வு ஆரம்பிப்பதை உணர வைக்கும் அற்புதம் **உலகிலேயே முதன்முதலாக.** ஆரா ஷீல்டு தெரபி ஆராய்ச்சியாளர்



**திரு.பி.என்.பார்த்திபன்** அவர்களால் அறிமுகம் செய்யப்பட்ட, 56 வகையான அரிய நாணோ மினரலைக் கொண்டு (Gems Stone) உருவாக்கப்பட்ட **ஆராமேக்ஸ்** ஆரா ஷீல்டு தெரபி லாக்கெட்.

aura max
Aura Shield Locket



**கடைசி முயற்சி**

மருத்துவம், மாந்த்ரீகம், ஜோதிடம், பரிகார பூஜை, வாஸ்து, மூலமாகவும் திருப்தியான தீர்வு உணர அதிர்ஷ்டக் கற்கள், கயிறு, தாயத்து, தகடு இவை அனைத்தின் முடியவில்லையென்றால் உங்கள் முன் உள்ள கடைசி ஆயுதம் **ஆராமேக்ஸ் மட்டுமே!**

B Kay Building, 2nd Floor, No.154/105, Swamy Naicken Street, Chintadripet, Chennai - 600 002. **Phone : 044 2854 5689**

**Mob: +91 99620 78906, +91 72999 33669**
**www.auramax.in**

**அனைத்தும் இதில் அடக்கம், இதில் இல்லை என்றால்?**

**ப்ராணா** **வேறு எதிலுமே இல்லை.**

**நித்ய ஹோமகுண்டம்**



2 மூலமந்திர ஒலிப்பான்
108 அரிய மூலிகை ஹோமா சாம்பிராணி

**பத்திரிக்கைகளில் வந்த உண்மைச் செய்தி**

1984 ஏப்ரல் 3ல் போபால் நகரில் யூனியன் கார்பைட் தொழிற்சாலையிலிருந்து கசிந்த நச்சு வாயுவினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஈசல்கள் போல் மடிந்திட, நகரின் மையப் பகுதியில் இருந்த ஒரு குடும்பத்தினர் மட்டும் எந்தப் பாதிப்புக்கும் ஆளாகாது தப்பித்தனர். அதற்குக் காரணமாக விஞ்ஞானிகளால் ஆராய்ந்து ஒப்புக் கொள்ளப்பட்டது, காலங்காலமாக அந்த குடும்பத்தினர் நித்திய ஹோமம் (தினம் தினம் ஹோமம்) செய்து இறை பாதுகாப்பு கவசத்தைப் பெற்றிருந்ததுதான்.

**உலகிலேயே முதன்முதலாக ஆன்மீகமும் தொழில்நுட்பமும் இணைந்த அற்புதம்**

மகாசக்தி வாய்ந்த ப்ராணா மின்சார ஹோமகுண்டம் மூலம் வீட்டிலே எளிமையாக ஐந்தே நிமிடத்தில் 12, மூலமந்திர ஹோமங்களை தினமும் செய்வதன் மூலம் உலகமே அதிசயித்து வியந்த இறை பாதுகாப்பு கவசம் உங்கள் குடும்பத்துக்கும் நிச்சயம்.

**ப்ராணா வழங்கும் 12 முக்கிய ஹோம மந்திரமும் அதன் பலன்களும்**

1. நிர்விக்ன மந்திரம் - நவக்கிரக தோஷங்கள் மற்றும் அனைத்துவிதமான தடைகளும் நீங்கிட, 2. காயத்ரி மந்திரம் - அனைத்துக் காரியங்களிலும் சூரியனைப் போல் பிரகாசித்திட, 3. தன்வந்திரி மந்திரம் - என்றும் நோயற்ற ஆரோக்கிய வாழ்வினைப் பெற்றிட, 4. குபேர மந்திரம் - தடைகளற்ற பெரும் செல்வம் பெற்றிட, 5. வாஸ்து மந்திரம் - அனைத்துவிதமான வாஸ்து தோஷங்களும் நீங்கி ஆக்கப்பூர்வமான சக்தி பெற்றிட, 6. சுதர்சன மந்திரம் - ஏவல், பில்லி, சூன்யம் போன்ற தீய சக்திகளை விரட்டிட மற்றும் தோஷங்கள் போக்கிட, 7. மஹாம்ருத்யுஞ்ஜய மந்திரம் - துன்பத்துடன் கூடிய அகால மரணம் ஏற்படாமல் இருக்க, 8. ஸ்வஸ்தி மந்திரம் - விபத்தில்லாத பத்திரமான பிரயாணத்திற்காக, 9. துர்கா மந்திரம் - அனைத்து செயல்களிலும் வெற்றி பெற, 10. ஹரிஹரபுத்ர ஐயப்ப மந்திரம் - அரசாங்க ரீதியான முயற்சிகளில் அனுகூலமான பலன் பெற, நல்ல ஆளுமை சக்தி ஏற்பட, 11. நாராயண மந்திரம் - ஜனங்களை ஈர்க்கும் சக்தி ஏற்பட, தன் ஆளுமை சக்தியை நிலை நிறுத்திட, 12. மஹாதேவ மந்திரம் - மனதில் தைரியம் ஏற்பட, கஷ்டங்களில் மனம் துவளாமல் துணிவை உண்டாக்க.

B Kay Building, 2nd Floor, No.154/105, Swamy Naicken Street, Chintadripet, Chennai - 600 002. **Phone : 044 2854 5689**

**Mob: +91 99620 78906, +91 72999 33669**
**www.auramax.in**

# தூக்கமின்மை நோய்க்கான கிரக சேர்க்கைகள்



எஸ்.ஞானசந்திரன்
செல்: 94434 57536

8. சூரியன், சந்திரன் இரண்டும் உச்சமாவது தூக்கம் பாதிக்கும்.

மேலதிகமாக, தூக்கத்தில் நடக்கும் வியாதி கொண்டவர்களுக்கான கிரகசேர்க்கைகளையும் இச்சந்தர்ப்பத்தில் காண்போம்.

12க்குடையவனான கிரகம் கேந்திரமொன்றில் ஆட்சி உச்சம் பெற்று இருந்தாலோ அல்லது சூரியனுடன் மிக நெருங்கிக் கூடி அஸ்தமனமாகி இருந்தாலோ தூக்கத்தில் நடக்கிற வியாதி ஏற்படலாம்.

இலக்கினாதிபதியுடன் 4க்குடையவன் கூடி, இவை இரண்டும் 12ஆம் ஸ்தானத்தில் இருப்பது தூக்கத்தில் நடக்கும் வியாதி ஏற்படக்கூடும்.

இனி, தூக்கமின்மை நோயினால் அவதியுற்று வரும் சிலரின் ஜாதகங்களைக் காண்போம்

ஜாதகம் — 1: பெண் 03—35 பி.ப 13.05.1980 யாழ்ப்பாணம், இலங்கை, தீர்க்கரேகை 80டிகிரி — 05டிகிரி கிழக்கு, அட்சரேகை —09டிகிரி — 45 டிகிரி வடக்கு

| | | | |
|---|---|---|---|
| | சூரி சந் புத | | சுக் |
| கேது | இராசி | | |
| | | | செவ் குரு சனி ராகு |
| | | | ல |

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | ல செவ் குரு |
| | அம்சம் | | |
| | | | சந் |
| சூரி புத சனி | சுக் | கேது | |

சுக்கிர திசை இருப்பு வரு18—மாத06—29நாள்

இப்பெண் தனது சொந்த வாழ்வில் ஏற்பட்ட சோகங்களின் விளைவாகவும், பொருளாதார நெருக்கடிகளினாலும் தூக்கமின்றித் தவித்து வருவதாகக் கூறுகிறார். இவரது ஜாதகத்தை நாம் இப்போது ஆராய்வோம்.

1. சனி 6க்கடையவனாகி, இராகுவுடன் கூடி 12இல் இருக்க, இவ்விரண்டின் இராசிநாதனான சூரியன் இலக்கினாதிபதியான புதனுடன் கூடியிருப்பது.
2. மூன்று பாவக்கிரகங்கள் ஒன்றையொன்று பாதித்துக் கொண்டு, 12இல் இருப்பது.
3. 12க்குடைய சூரியன் 8இல் இருந்து, உச்சம் பெற்ற போதிலும் செவ்வாய், சனி, இராகு ஆகிய பாவக்கிரகங்களின் இராசிநாதனாவதால் மிகவும் பாதிப்புக்குள்ளாகி இருப்பது.
4. 12க்குடையான் 8க்குடையவனுடன் பரிவர்த்தனை பெற்று பாதிப்புற்று இருப்பது
5. 12ஆம் ஸ்தானம் சனி மற்றும் இராகுவினால் பாதிப்புற்று இருந்து, 12க்குடைய சூரியன் இவற்றின் இராசிநாதனாகியும், சனி, செவ்வாயின் தீய செல்வாக்கைக் கொண்டு வரும் இராகுவின் 9ஆம் பார்வையாலும் பாதிப்புற்று இருக்க, சனி, செவ்வாய், இராகு போன்றவற்றின் தீய செல்வாக்கை கேது எடுத்துச் சென்று தன் 5ஆம் பார்வையினால் தூக்கத்தின் காரகனான சுக்கிரனைப் பாதிப்பது.

நாம் எடுத்துக் கூறிய பெரும்பாலான கிரக சேர்க்கைகள் இவரது ஜாதகத்தில் காணப்படுவதாலேயே, இவர் தூக்கமின்மை நோயினால் அவதியுற்று வருகிறார் என்பது உறுதியாகிறது.

ஜாதகம் 2: ஆண் 04—33 அதிகாலை, 28.04.1952 திருப்பூர் தீர்க்கரேசை — 77டிகிரி — 20டிகிரி கிழக்கு, அட்சரேகை — 11டி— 05 டி வடக்கு

| | | | |
|---|---|---|---|
| ல புத சுக் | சூரி குரு | சந் | |
| ராகு | இராசி | | |
| | | | கேது |
| | | செவ் (வ) | சனி (வ) |

| | | | |
|---|---|---|---|
| செவ் சுக் | | குரு சனி கேது | |
| | அம்சம் | | |
| | | | சூரி |
| ல புத | ராகு | | சந் |

செவ்வாய் திசை இருப்பு வரு 04— மாத 06— 09 நாள்

இந்த ஜாதகர் நெடுநாட்களாக தூக்கமின்மை நோயினால் அவதிப்பட்டு வந்ததோடு அதற்கான சிகிச்சைகளையும் பெற்று வந்தாலும் முழுமையான குணம் பெற முடியவில்லை இன்றும் மாத்திரைகள் உட்கொள்ளாமல் விட்டால் தூக்கம் கிட்டாத நிலையே இவருக்கு உள்ளது.

சூரியனும், சந்திரனும் உச்சம் பெற்று இருப்பது தூக்கம் குறைவு ஆகியது.

12ஆம் பாவம் பாவகிரகமான இராகுவால் பாதிக்கப்பட்டு இருக்க, பின் இராசியில் சூரியனின் இராசிநாதனும், பாவக்கிரகமுமான செவ்வாயின் பார்வை இருக்கும்போது, முன் இராசியில் பாவியாகிப் போன தேய்சந்திரன் மற்றும் செவ்வாயின் இராசிநாதனை சுக்கிரன் இருக்கிறது. இந்த அமைப்பானது வலுவான பாவகாத்தாரி யோக விளைவை 12ஆம் பாவத்துக்கு ஏற்படுத்தியுள்ளதைக்

*காணலாம். 12க்குடைய சனி இராகுவின் இராசிநாதனாகிப் பாதிக்கப்படுவதோடு, மேற்படி சுக்கிரனாலும் பார்க்கப்பட்டு பாதிப்புறுவதோடு, கேது மற்றும் செவ்வாய்க்கிடையே அகப்பட்டு, பாவகாத்தாரி யோகத்தினாலும் கெடுகிறது. தூக்கத்தின் காரகனான சுக்கிரன் சனியின் இராசிநாதன் புதனாலும், சனி இராகுவின் இராசிநாதன் யாலும் பாதிக்கபபட்டிருக்க, இராகு பின் இராசியிலும் சூரியன் முன் இராசியிலுமாக இருந்து பாவகாத்தாரி யோகத்தையும் இச்சுக்கிரனுக்கு ஏற்படுத்திப் பாதிக்கின்றன. இதில் சுக்கிரன் செவ்வாய் மற்றும் பாவியான சந்திரனின் இராசிநாதனாகிக் கெட்டிருப்பதையும் நாம் அவதானிக்கலாம். தவிர, சூரியன் கேதுவின் இராசிநாதன் என்பதும் கவனிக்கத் தகுந்தது.*

*இந்த ஜாதகத்தில் சனி 12க்குடையவனாகி இராகுவின் இராசிநாதனமாவதால் 12ஆம் பாவமும், 12க்குடையவனும் பிரிக்கும் கிரகங்களின் செல்வாக்கைப் பெறுவதோடு, மேற்படி சனி சுக்கிரனைப் பார்வை செய்வதால் அக்கிரகமும் பிரிக்கும் கிரகங்களின் செல்வாக்கை பெறுவது.*

*12க்கடைய சனியின் 8க்குடைய சுக்கிரனும் பரஸ்பர பார்வை பெற்றுக் காணப்படுவது இந்தக் கிரக சேர்க்கைகள் இவரது ஜாதகத்தில் காணப்படுவதாலேயே இவர் தூக்கமின்மை நோயால் அவதியுறுபவராக ஆனார்*

*ஜாதகம 3: ஆண் 07—13 பி.ப19—03—1970 யாழ்ப்பானும்,*

*இலங்கை தீர்க்கரேகை 80டிகிரி —05டிகிரி கிழக்கு, அட்சரேகை 09டி—45 டிவடக்கு*

| | | | |
|---|---|---|---|
| சூரி புத சுக் | செவ் சனி | | |
| ராகு | இராசி | | சந் |
| | | | கேது |
| | | குரு (வ) | ல |

| | | | |
|---|---|---|---|
| ராகு | | | ல |
| சந் | அம்சம் | | புத சனி |
| குரு | | | சூரி செவ் |
| சுக் | | | கேது |

*புதன் திசை இருப்பு வரு04—மாத09—03 நாள்*

*வெளிநாட்டில் குடியேறி வசிக்கும் இவர், அங்கு பல விசேஷ மருத்துவர்களிடம் சிகிச்சை பெற்ற போதிலும் தூக்கமின்மை நோயை விரட்டியடிக்க முடியாமல் கஷ்டப்பட்டு வருகிறார். பொருளாதாரக் கஷ்டங்களோ, கடன்போன்ற பிரச்சினைகளோ எதுவும் இவருக்கு இல்லாத போதிலும், இன்சொம்னியா எனப்படுகிற தூக்கமின்மை நோய் இவரைத் துன்புறுத்துவதற்கு இவரது ஜாதகமே காரணமாகும் எனலாம். இதனை ஆராய்வோம்.*

*பாவக்கிரகமான கேது 12இல் இருப்பது.*

*12க்குடைய சூரியன் கேதுவின் இராசிநாதனாகிக் கெட்டு, நீச்ச புதனாலும் கெட்டுள்ளது. காரகன் சுக்கிரன் நீச்ச புதன், கேதுவின் இராசிநாதனான சூரியன் ஆகியவற்றால் கெடுகிறான். தவிர 12க்குடைய சூரியனும், சுக்கிரனும் பின் இராசியில் இராகுவையும், முன் இராசியில் செவ்வாய், சனியையும் பெற்று இதனாலேற்படும் பாவகாத்தாரி யோகத்தினாலும் கெடுகின்றன.*

*இக்கிரக சேர்க்கைகள் இவரின் ஜாதகத்தில் காணப்படுவதாலேயே இவரது தூக்கம் பறிபோய் நோயாக மாறியது எனலாம்.*

*ஜாதகம் 4: பெண் 05—36 மு.ப. 09.11.1951 யாழ்ப்பாணம், இலங்கை*

*தீர்க்க ரேவை — 80டிகிரி —05டிகிரி கிழக்கு, அட்சரேகை 09டிகிரி — 45வடக்கு,*

| | | | |
|---|---|---|---|
| சந் குரு(வ) | ல | | |
| ராகு | இராசி | | |
| | | | செவ் கேது |
| | புத | சூரி | சுக் சனி |

| | | | |
|---|---|---|---|
| | சூரி | | சனி |
| சுக் | அம்சம் | | கேது |
| ராகு | | | சந் |
| செவ் | | ல குரு | புத |

*சனி திசை இருப்பு வரு18 07மாத 13நாள்*

*கணவனை இழந்த விதவையான இப்பெண் இச்சோக நிகழ்வின் பின்னர் தூக்கமின்மை நோயினால் அவதிப்பட்டு வருகிறார். தூக்க மாத்திரைகள் இன்றி தூங்கவே முடியாத நிலைக்கு இவர்வந்தமைக்கு அவரது ஜாதகத்தில் பதில் கிடைக்குமா என்று பார்ப்போம்.*

*12க்குடைய வியாழன் ஆட்சி பெற்றுள்ள போதிலும், அது இராகுவின் இராசிநாதனான சனியாலும், சூரியனின் இராசிநாதனை சுக்கிரனாலும், சனியுடன் சார பரிவர்த்தனை பெற்றுள்ள சந்திரனாலும், பாதிக்கப்பட்டுள்ளது தவிர பின் இராசியில் இராசி இருக்க முன் இராசியில் செவ்வாய் மற்றும் கேதுவின் இராசிநாதனான சூரியனின் பார்வை விழுவதால் உண்டாகின்ற பாவகாத்தாரி யோக விளைவினாலும் வியாழன் பாதிக்கப்பட்டிருப்பதை நாம் காண முடியும். இக்கிரக சேர்க்கையில் கூடவே 12ஆம் பாவமும் பாதிப்புற்று இருப்பதை நாம் கவனிக்க வேண்டும்.*

*தூக்கத்தின் காரகன் சுக்கிரன் சூரியனின் இராசிநாதனாகிக் கெட்டு இராகுவின் இராசிநாதனான சனியோடும் கூடிக் கெடுவதோடு, நீச்சமாகியும், பின்னும் முன்னும் முறையே செவ்வாய் மற்றும் கேதுவையும், சூரியனையும் பெறுவதாலேற்படுகின்ற பாவகாத்தாரி யோகத்தினாலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.*

*இவற்றுடன் 12க்குடைய வியாழன் மற்றும் சுக்கிரன் என்பது பிரிக்கும் கிரகங்களை சூரியன், சனி இராகு என்பனவற்றாலும் தாக்கப்படுவதை நாம் காணலாம்.*

*இக்கிரக சேர்க்கைகளினாலேயே, இந்த ஜாதகர் தூக்கமின்மை நோயின் பிடியில் சிக்கிக் கஷ்டப்பட்டு வருகிறார் என்று நாம் நிரூபிக்கலாம்.*

# இலக்கினப்பலன் வரிசை 10

# இலக்கினத்தில் கிரகங்கள் நின்ற பலன் - 'மகரம்'

தெய்வத்திரு
ஜோதிட ரத்னா, அருள் ஞான ஜோதிடர்
பி. இராமசாமி



ஜோதிடக் கலையைப் பற்றி பெரும்பாலான மக்களுக்கு தெரியாது. அப்படியே ஓரளவுக்கு தெரிந்து இருந்தாலும், ஒன்பது கிரகங்களைப் பற்றியும், பன்னிரண்டு இராசிகளைப் பற்றியும் இருபத்தி ஏழு நட்சத்திரங்களைப் பற்றியும், அவைகளின் தன்மைகளைப் பற்றியும் தெரிந்து வைத்திருப்பார்கள். ஆனால நவக்கிரகக்ஙளாகிய ஒன்பது கிரகங்களின் பூர்வீகத் தைப் பற்றி தெரிந்து இருக்க நியாயமில்லல. எனவே ஜோதிடத்தில் இடம் பெற்றுள்ள ஒன்பது கிரகங்களின் பூர்வீகத்தைப் பற்றி ஓரளவுக்கு முதலில் தெரிந்துக் கொண்டு மேலே கொடுக்கப்பட்ட தலைப்பு விஷயத்திற்கு வருவோம். பொதுவாக ஜோதிடம் கற்பவர்களும், ஓரளவுக்கு ஜோதிட ஈடுபாடு உள்ளவர்களும், தெரிந்துக் கொள்ள வேண்டிய முக்கியமான விஷயம், கிரகங்களின் பூர்வீக வரலாறும் ஒன்றாகும்.

சிருஷ்டி கர்த்தாவான பிரம்மனால் சிருஷ்டிக்கப்பட்ட ரிஷிகள் பலருண்டு. அதில் முக்கியமானவர்கள் ஏழுபேர், எனவே இதற்கு சப்தரிஷி வர்க்கத்தில் வந்தவர்களே நவக்கிரகாதி தேவதைகள் — சப்தரிஷிகள் ஏழுபேர், யார், யார், 1. மரிசி, 2.புலஸ்தியர், 3.அத்திபரி, 4.பிருகு, 5 புலகர், 6.ஆங்கிரஸ், 7. வசிஷ்டர்

இந்த ஏழு பேர்களில் முதலாவது ரிஷியான "மரிசி" யின் புத்திரன் வைவசுதாமன் இவனுக்கு 13 மனைவிகள் உண்டு. முதல் மனைவி, அதிதி யின் வயிற்றில் பிறந்தவன்தான் "சூரியன்" கிரகங்களின் முதல் கிரகமாகும். சூரியனுக்கு நான்கு மனைவிகள் உண்டு. இதில் நான்காம் மனைவியான "நிழலரசி சாயாதேவி" யின் வயிற்றில் பிறந்தவன் தான் "சனி" இரண்டாவது கிரகமாகும். இனி மூன்றாவது நான்காவது இராகு, கேது வைவசுதாமனுவின் இரண்டாவது மனைவியின் வயிற்றில் பிறந்த "சிம்ஹிதை" என்ற பெண்ணுக்கும் ஐந்தாம் மனைவி வயிற்றில் பிறந்த "விப்ரசித்து" வுக்கும் பிறந்த அசுரகுமாரன் "ஸ்வர்பானு" எனப்படுவான். இந்த ஸ்வர்பானுவே தேவர்கள் வரிசையில் சென்று திருட்டுத்தனமாக "தேவாமிர்தம்" உண்டதின் பயனாகத் தலை வேறு முண்டம் வேறாகச் கொய்யப்பட்டு இரண்டு உருவங்களாக தோன்றின. இவர்கள் தான், இராகு, கேதுவாயினர், ஐந்தாவது சந்திரன் சப்தரிஷிகளில் மூன்றாவது ரிஷியான அத்திரி மகரிஷிக்கும் அனுசுயைக்கும் பிறந்தவன் தான் சோமன் என்ற சந்திரன், இனி அடுத்தது புதன் ஆறாவது, சந்திரனுக்கும் பிரகஸ்பதியான குருவின் மனைவி தாரைக்கும் பிறந்தவன் தான் புதன். இனி ஏழாவதாக வருவது சுக்கிரன்.

நான்காவது ரிஷியான "பிருகு" மகரிஷிக்கும் கியாதிக்கும் பிறந்தவன் தான் பார்க்கவன் என்ற சுக்கிரனாகும்.

எட்டாவது குரு— ஆறாவது ரிஷியான "ஆங்கிரஸ" மகரிஷிக்கும் சிரத்தை என்ற பெண்ணுக்கும் பிறந்தவன் பிரகஸ்பதியாகிய குரு. ஒன்பதாவது செவ்வாய் சப்தரிஷகளில் முக்கியமானவராக வசிஷ்டர் வழி வந்தவர் "பரத்துவாஜர்" இவருக்கும் ஒரு தேவமாதருக்கும் பிறந்தவன் தான் செவ்வாய், இந்த உறவு முறைப்படி பார்த்தால் சூரிய குடும்பத்தில் சனி, இராகு, கேது சம்மந்தப்பட்டவர்களாகின்றனர். சந்திர குடும்பத்தில் புதன் சம்மந்தப்பட்டவன். குரு, சுக்கிரன், செவ்வாய், இந்த மூவரும் தனிப்பட்ட நபர்களாகும். எனினும் சப்தரிஷிகளில் ஏழுபேரும் ஒருவருக்கொருவர் சகோதர பாசம் கொண்டவர்கள். என்பது குறிப்பிடத்தக்கது. எனவே சந்திரன், குரு, சுக்கிரன் இம்மூவர்களும் சகோதரர்கள் என்றும், சூரியன், புதன் இருவரும் சகோதரர்கள் என்றும், சனி, இராகு, கேது, ஆகிய மூவரும் சகோரர்கள் என்றும் கருதப்படுகிறது. இதில் செவ்வாய் பல தலைமுறை கழித்து ரிஷி புத்திரர்களின் வழி வந்தவனான படியால் தனி நபர் என்று கருதப்படுகிறது.

நவக்கிரக பரிபாலனத்தில் சூரியன் தலைமைக் கிரகமாக அமைந்து, ஏனைய கிரகங்கள் சூரியனை மையமாக வைத்து ஒரு முட்டை வடிவத்தில் சூரியனை சுற்றி வருகின்றன. சூரியனும் தன்னைத் தானே சுற்றிக் கொண்டு கொஞ்சங் கொஞ்

சமாக நகர்ந்து ஒரு வருட காலத்தில் ஒரு சுற்று வருகிறான். இதைத்தான் நாம் ஒரு வருடம் என்று கூறுகிறோம். நமது பூலோக கணக்குப்படி ஒரு வருடம் என்பது தேவர்களுக்கு ஒரு நாளாகும். அதாவது தஷினாயணம் என்பது ஆடி மாதம் முதல் மார்கழி வரை இது தேவர்களுக்கு இரவு என்றும், உத்தராயணம் என்பது தை மாதம் முதல் ஆனி மாதம் முடிய தேவர்களுக்கு பகல் என்றும் கூறப்படுகிறது. தஷிணாயனம் என்ற ஆறு மாத காலம் தேவர்களுக்கு இரவு என்றாகிறது. உத்தராயணம் என்ற மாத காலம் தேவர்களுக்கு பகல் என்றாகிறது. இதன்படி பார்த்தால் நமது பூலோகத்தில் 365 வருடங்கள் என்பது தேவர்களுக்கு ஒரு வருடம் ஒன்றாகிறது.

இதன்படி பார்த்தோமானால் தேவர்களின் ஒரு வருடகாலத்தில் நமது பூலோகத்தில் ஐந்து அல்லது ஆறு தலைமுறைகள் வந்து போய்விடும். இந்த கணக்குபடி பார்த்தால் தேவர்களின் இரண்டு அல்லது இரண்டறை மாத காலம். இங்கு ஒரு மனிதனின் ஆயுள் காலமாக இருக்கும். சூரியன் மகர இராசியில் பிரவேசிக்கும் நாளைத்தான் நாம் தை மாதம் பிறப்பு என்றும் தை பொங்கல் கொண்டாடுகிறோம். தேவர்களின் பகல் பொழுது காலமான உத்தராயணம் ஆரம்பம். இனி நாம் கட்டுரை தலைப்பு படி மகர இராசியில் கிரகங்கள் நின்ற பலனை பார்ப்போம்.

கால புருஷ தத்துவப்படி 10வது இராசி மகரம். கடகம், மகரம், மீனம், இந்த மூன்றும் ஜலஇராசியாகும். மகரம் இதில் இவைகளில் அதிகம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. மகாவிஷ்ணு ஆவிலை மேல் பள்ளி கொண்டிருக்கும் மகரலோகம் இந்த மகர இராசியில் தான் இருக்கிறது என்பது சாஸ்த்திர சம்பிரதாயம். இது ஒரு சர இராசியும் கூட, இது சனீஸ்வரனுடைய ஆட்சி வீடு. இதில் செவ்வாய் உச்சமடைகிறான். பிரகஸ்பதியாகிய குரு நீச்சமடைகிறான். சூரியன் பகை பெறுகிறான். மகர இராசியில் சூரிய சாரம் பெற்றுள்ள உத்திராட நட்சத்திரம் 2,3,4 பாதங்களும் , செவ்வாய் சாரம் பெற்றுள்ள அவிட்டம் நட்சத்திரத்தின் 1,2 பாதங்களும் இதில் அடங்கி உள்ளன. மகர இலக்கினம், அல்லது மகர இராசியில் பிறந்தவர்கள் உறுதியான மனம் படைத்தவர்கள். புதனும் சுக்கிரனும் யோகம் தரக்கூடிய தரும கருமாதிபதிகளாக அமைகின்றனர். சுக்கிரனுக்கு கேந்திராதி பத்திய தோஷம் ஏற்படுவதால் 42 வயது வரை இவர்களுக்கு எதுவும் நிலையாக அமைவதில்லை. அதன் பிறகு சாதகமானதெசை புத்தியானால் பெரிய முன்னேற்றம் ஏற்படுகிறது. 2ஆம் இடத்து அதிபதியான சனியும், 7ஆம் வீட்டிற்குரிய சந்திரனும் இவர்களுக்கு மாரகாதிபதிகள், குரு இவர்களுக்கு யோகம் செய்ய மாட்டான். ஏனென்றால் 12ற்குரிய விரையாதிபத்தியம் இருப்பதால் குரு தெசை யோக தெசையல்ல. சனி தெசை வெகு பிரமாதமாக இருக்கும்.

**மகர இராசியில் சூரியன் முதல் கேது வரை இருந்தால்**

சூரியன் இருந்தால் வாழ்க்கையில் பல்வேறு மேடு பள்ளங்கள் குடும்ப வாழ்க்கை சுகமில்லை, எதிலும் எதிர்நீச்சல், போட்டுத்தான் காரிய சாதனை செய்ய நேரிடும். வாழ்க்கையே ஒரு போராட்டம்.

**சந்திரன் இருந்தால்:** எதிலும் முதன்மை ஸ்தானம் ஏற்படும், பொது நலத்தொண்டில் அதிக ஈடுபாடும் இருக்கும். உடல் ஆரோக்கியமும் நல்ல விதத்திலமையும் V.K.கிருஷ்ணமேனன், ஆப்ரகாம் லிங்கன், இந்திராகாந்தி, ஹென்றிபோர்டு இவர்களுக்கெல்லாம் மகரத்தில் சந்திரன்.

**செவ்வாய் இருந்தால்:** அதிகாரம் செலுத்தக்கூடிய பிரதானி, மந்திரி, மண்டலாதிபதி, எதிலும் துணிந்து தலையிட்டு காரிய சாதனைகள் செய்யக் கூடியவர்கள், எண்ணிய எண்ணத்தை செயலாற்றும் சாத்தியமுண்டு. தனக்கென்று ஒரு சமுதாயத்தை தோற்றுவிக்கக்கூடிய ஆற்றலும் உண்டு. முகலாய சக்ரவர்த்தி. அக்பர், ராம கிருஷ்ண பரமஹம்சர், எம்.ஜி.ஆர். ரோமாபுரி நீரோமன்னன் ஆகியோருக்கு செவ்வாய் மகரத்தில்.

**புதன் இருந்தால்:** கணிதத்தில் வல்லமை ஏற்படும். சுகபோஜனம், உண்டு, சிக்கனமான செலவு, தன் சுய முயற்சியால் முன்னேற்றம் அடைவார்கள். பொது நலத்தொண்டில் அதிகமான ஈடுபாடு, விவேகானந்தர் சி. சுப்பிரமணியன் ஆகியோருக்கு மகரத்தில் புதன்.

**குரு இருந்தால்:** குரு இந்த வீட்டில் நீச்சம் பெற்ற போதிலும் அந்த ஜாதகர் தத்தம் துறையில் மகத்தான வெற்றியும், முன்னேற்றமும் அடைவார்கள். ஆரம்பத்தில் பல்வேறு கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்ட போதிலும், பிற்காலம் உலகம் போற்றுமளவு ஓர் உன்னத ஸ்தானத்தை அடைவார்கள். இராஜாஜி, விக்டோரியா மகாராணி, டைரக்டர் சாந்தாராம், முதலானோருக்கு எல்லாம் மகரத்தில் குரு உள்ளான்.

**சுக்கிரன் இருந்தால்:** பெண்கள் மூலமாக பல நன்மைகளை அடைவார்கள். கலைத்துறையில் மகத்தான சாதனையும், ஈடுபாடும் ஏற்படும். அரசியலிலும் பொது நலத்தொண்டிலும் நினைத்ததை முடிப்பவர்கள் V.சாந்தாராம் விவேகானந்தர். ரோமாபுரி மன்னன் ஆகியோருக்கு சுக்கிரன் மகரத்தில்

**சனி இருந்தால்:** ஆன்மிகத் துறையில் அதிகமான ஈடுபாடு இருக்கும். இல்லற வாழ்க்கையில் அவ்வளவாக பற்றுதல் இருக்காது எனலாம். எந்த காரியத்தையும் நம்பி இவர்களிடம் ஒப்படைக்கலாம். மானத்துக்கும் மரியாதைக்கும் கட்டுப்பட்டவர், காமராஜர், விஸ்வாமித்திரர் இவர்களுக்கு மகரத்தில் சனி,

**இராகு இருந்தால்:** மிகப்பெரிய இராஜயோகப் பலனைத்தரக்கூடியது நல்ல சாஸ்த்திர ஞானமும், ஆன்மிகத்துறையில் ஈடுபாடும் ஏற்படும் தியாகத்தின் மூலம் பெரும் சாதனை செய்பவர்கள். இராமலிங்கசுவாமிகள் மகரத்தில் இராகு சஞ்சாரம்.

**கேது இருந்தால்:** இராகுவுக்கு சொன்ன அதே பலன்கள் கேதுவுக்கு பொருந்தும், செவ்வாய்க்கு சொன்ன பலன்களும் பொருந்தும், நல்ல கம்பீரமான தோற்றம், பேச்சும் உண்டு. சகலகலா வல்லமையும் உண்டு, மகாத்மாகாந்தி, கிருபானந்த வாரியார் கிருஷ்ண பரமாத்மா முதலியோருக்கு கேது மகரத்தில்

| | | | |
|---|---|---|---|
| | சூரி புத சுக் குரு | | |
| சனி கேது | பக்ருதீன் அலி அகமது 13.5.1905 | | |
| ல | | | சந் ராகு |
| | | செவ் | |


மகர இலக்கினத்தில் பிறந்தவர்கள் பெரும்பாலும் உறுதியான மனோதிடம் உள்ளவர்கள், தத்தம் பணிகளில் உன்னத நிலையைப் பெறுவார்கள் முன்னால் இந்திய ஜனாதிபதி, பக்ருதீன் அலி அகமது, மாசே துங், கருமாரி தாஸர், இப்பிரிவைச் சேர்ந்தவர்களாகும்.

இதேபோல் மகர இராசியில் பிறந்தவர்களும் உயர் பதவியை அடைகின்றனர் ஆப்ரஹாம்லிங்கன் ஒரு வரலாற்றையே படைத்த பெருமை அவருக்குண்டு என்பது உண்மை தானே. மகர இலக்கினம், மகர இராசியில் பிறந்தவர்களின் ஜாதகங்களை இனி பார்ப்போம்.

முன்னாள் ஜனாதிபதி பக்ருதீன் அலி அகமது ஜெனனம் 13.5.1905 மகர இலக்கினம். இலக்கினாதிபதி தன ஸ்தானத்தில் ஆட்சி 4ஆம் இடமாகிய கேந்திரத்தில் நாலுகிரகங்கள். 10ஆம் இடமாகிய கேந்திரத்தில் செவ்வாய் 4.10க்குரிய செவ்வாயும் சுக்கிரனும் பரிவர்த்தனை.

ஒரு ஜாதகத்தில் ஐந்து கிரகங்கள் கேந்திரத்தில் இருந்தால் இதற்கு அரச கேந்திர யோகம் என்று பெயர், இதன் காரணமாக நமது பாரத நாட்டுக்கு ஜனாதிபதியாக வேண்டிய பாக்கியம் ஏற்பட்டது. ஏழரை நாட்டுச் சனி மூன்றாவது சுற்றாக இருந்தமையால் இவர் திடீரென்று இயற்கை எய்தினார். 10இல் செவ்வாய் இருப்பது நல்லது தசமம் அங்காரகா என்று கூறப்படுகிறது. 10ஆம் இடம் செவ்வாய்க்கு திக் பலமாகும்.

| | | | |
|---|---|---|---|
| குரு சுக் | கேது | | |
| ல சூரி புத | ஆப்ரஹாம் லிங்கன் 12.2.1809 | | |
| சந் | | | |
| | | சனி ராகு | செவ் |





ஆப்ரஹாம் லிங்கன், ஜெனனம் 12.2.1809 இலக்கினாதிபதியும், இராசியாதிபதியுமான சனி பாக்கிய ஸ்தானத்தில் உச்சம் பெற்று உள்ளான். உலக சரித்திரத்திலேயே இவர் அடிமைத் தனத்தை ஒழித்துக் கட்ட அரும்பாடு பட்டார். அமெரிக்கா, ஜனாதிபதி பதவியும் வகித்தார். முதலாளி வர்க்கத்தினரின் வஞ்சக சூழ்ச்சியால், ஒரு பொது நிகழ்ச்சியில் இவர் கலந்து கொண்ட போது, சுட்டுக் கொல்லப்பட்டு வீரசுவர்க்கம் எய்தினார்.

| | | | |
|---|---|---|---|
| ராகு | | ல சனி | |
| சுக் | நிக்ஸன் | | |
| சந் | | | |
| சூரி புத குரு செவ் | | | கேது |



அமெரிக்காவின் ஜனாதிபதியான இவர் சில ஊழல் குற்றச்சாட்டுக்கு காரணமாகி பதவி இழந்தவர் அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன் ஜெனனம் 8.1.1913 ரிஷபம் இலக்கினம் இராசி மகரம், செவ்வாயுடன் சூரியன் சம்மந்தப்பட்டதால் ஜனாதிபதி பதவியில் இருந்து இடையில் விலக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதனால்தான் எனது கட்டுரைகளில் செவ்வாயுடன் சூரியன் சம்மந்தப்பட்ட ஜாதகங்களுக்கு உத்தியோகம் சுகப்படுவதில்லை. உத்தியோகம் நிலைப்பதில்லை என்று பலமுறை எழுதியுள்ளேன்.

| | | | |
|---|---|---|---|
| | | கேது | |
| | v.சாந்தாராம் | | சந் |
| ல சுக் சனி குரு | | | |
| செவ் | சூரி புத ராகு | | |



V.சாந்தாராம் இந்தி சினிமா டைரக்டர், இவர் படம் எடுப்பதாக இருந்தால், பெரிய இலட்சாதிபதி, கோடீஸ்வரர்கள் எல்லாம்,கையெழுத்து வாங்காமலேயே, பணத்தை அள்ளிக் கொடுப்பார்கள்.

அதேபோல் இவரும் வெகு நாணயத்துடன் நடந்துக் கொள்வார். இப்போது தெரிகிறதெல்லவா மகர லக்கினத்திற்கே ஒரு தனிப்பட்ட பிரபல்யம் உண்டு என்பது.



உலகம் முழுவதும் உலா வருகின்றன
நீங்களும் இதில் வலம் வாருங்கள்..!
சக்தி
ஜோதிடம்
அப்ஸரா
சக்தி
INTERNET
+91 44 28116770
+91 7299921880, 9710421880
APSARA PUBLICATIONS
Lesson of time - KARNA
So be good and do good" - Buddha
eBOOK
100 % Absolutely FREE!
Get Instant Access Now!
www.apsaraepublications.com

# கும்பிட்டோர் குறைதீர்த்து கோடி நலம் அருளிடும்

## அம்பத்தூர் அம்பிகை ஸ்ரீ யோகமாயா புவனேஸ்வரி

**கனியிலே சுவையும் காற்றிலே இயக்கமும்**
**கலந்தாற் போல நீ அனைத்திலும் கலந்தாய்**
**உலகெலாந் தானாய் ஒளிர்வாய் போற்றி!**
**அன்னை போற்றி! அமுதமே போற்றி!**
**தானெள மாற்றுஞ் சாகாச் சுடராய்**
**கவலைநோய் தீர்க்கும் மருந்தின் கடலாய்**
**பிணியிருள் கெடுக்கும் பேரொளி ஞாயிராய்**
**யானென தின்றி யிருக்கு நல் யோகியர்**
**ஞானமா மகுட நடுத்திகழ் மணியாய்**
**செய்கையாய், ஊக்கமாய், சித்தமாய், அறிவாய்**
**நின்றிடும் தாயே, நித்தமும் போற்றி!**
**இன்பம் கேட்டேன், ஈவாய் போற்றி!**
**துன்பம் வேண்டேன், துடைப்பாய் போற்றி!**
**அமுதம் கேட்டேன், அளிப்பாய் போற்றி !**
**சக்தி போற்றி தாயே போற்றி!**





ரங்கநாயகி சேஷாத்திரி
செல்: 98208 25291

என்றபடி முத்து முத்தான வார்த்தைகளை கோர்த்து அம்பிகைக்கு புவனேஸ்வரியாம் ஆதிபராசக்திக்கு முத்தமிழ் முத்தாரம் சூட்டி போற்றி பணிகிறார் பாரதியார்.

பாலுக்கு ஏங்கியழும் பச்சைக் குழந்தை தாய்முகம் நோக்கி அழுவதுபோல், இந்த உலகில் பிறவியெடுத்து ஜீவன்கள் அனைத்தையும் கரந்து புரந்தருளும் மாதா பரமேஸ்வரியை தவிர வேறு புகல் நமக்கேது?

ஸ்ரீ புவனேஸ்வரி தேவியின் திருவடி துகளுக்கும் கூட உலகோரின் அல்லல்களாம் கொடுவினைகளை களைந்திடும் சக்தி உள்ளது. அப்படிப்பட்ட அன்னையின் திருவடிகளைத் தொழுது, அவளது திருமுக மண்டல தரிசனத்திற்கு ஈடிணையேது? எல்லையற்ற பலன்கள் தந்தருளும் அம்பிகையைத் தொழுது போற்றி அனனத்து நலனும் பெற வேண்டுமெனின், சென்னை, அம்பத்தூர் கங்கை நகர், கள்ளிக்குப்பம் ஸ்ரீ பரத்வாஜ் ஆசிரமம் யோகமாயா புவனேஸ்வரி பீடத்திற்கு ஒருமுறை வந்தாலும் போதும் கோடி நலம் பெறலாம்.

இளம் பெண்கள் அவளது திருவடி பணிந்து வேண்டினால் இல்லறப் பயனான இனி மழலை செல்வங்களை மடி நிறைய தந்து மகிழ்விக்கும் மாதா புவனேஸ்வரி மகிமை என் சொல்ல?

கொடிய தொல்லைகளால், துன்பங்களால் சங்கடங்களால் நொந்து நொடிந்துப் போனவர்கள் எல்லாம் தாயே உன் திருவடிகளே சரண் என்று சரணமடைந்தவர்களின் கண்ணீர் துடைத்து அவர்களது அல்லல்களை அறவே அகற்றி, அவர்தம் இதயவேதனை என்ற இருள் நீக்கி, அங்கு நல்வாழ்வும் நம்பிக்கையும் தந்து அவர் வாழ்வில் ஒளி கூட்டும் நல்லற நாயகி அவள் ஆவாள். புகழ்மிகும் ஆசிரமம் விரிந்து பரந்து விளங்கும் பரபேத்வாஜ் ஆசிரமத்தில் அமைதி தவழும் ஆலயமும சிறந்ததோர் பரிகாரத் தலமாக விளங்கும் ஸ்ரீ யோக மாயா புவனேஸ்வரி பீடத்தில் நடுநாயகமாக வீற்றிருக்கும் பொனாஸிர் மேனியளாம் அன்னை புவனேஸ்வரி தேவியின்

திருவடிகளில் பூமாலை சூட்டி நாவார அவளது திருநாமங்கள் கூறிப் பணிந்தால் அன்னை புவனேஸ்வரியின் வற்றாத கருணை மழை நம்மை நோக்கி பாய்ந்து வரும். மாய்ந்துவிடும். நம் துன்பங்கள் ஓய்ந்து விடும் நம் கவலைகள் தீர்ந்துவிடும் தீராத வினைகள்.



இத்தகைய பேரருட் பெருங்கடலான புவனேஸ்வரி தேவிக்கு சிறுவயது முதலே இடைவிடாது ஓயாது தொடர்ந்து பூசித்து வருகிறார் ஸ்ரீ பரத்வாஜ் சுவாமிகள். ஆத்மார்த்தமாகவும், முழுமையாகவும் பூஜைகள் செய்து தந்தையும் அருட்குருவுமான புவனேஸ்வரி சுவாமிகள் காட்டிய வழியில் மக்களுக்கு அருட் கொண்டாற்றி வருகிறார். இவரது பேராற்றலைக் கண்டு வியக்காதவர் இல்லை.

அஷ்டமி பூஜைக்கும் பௌர்ணமி பூஜைக்கும், பல்வேறு விசேடமான பூஜைகளும் வெகு நேர்த்தியாக பிரமாதமாக நடைபெறுகின்றன. அவற்றை காணும் பக்தர்கள் மெய்மறந்து பரவசம் கொள்கின்றனர். தெய்வ அருட் புகழில் நனைந்து ஆனந்தம் அடைகின்றனர்.

**தத்தளிக்கும் மக்களின் தோணி**

வாழ்க்கை என்னும் புயலால் சிக்கி தவித்துக் கொண்டிருக்கும் மக்களை, காப்பாற்ற இறைவன் உபாயங்களை கொடுத்துக் கொண்டே தான் இருக்கிறார்.

அந்த உபாயங்களை அடையாளம் கண்டு கரையேற முடியாமல் அவர்கள் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு கால கட்டங்களிலும் அருளாளர்களை தோற்றுவித்து அன்பர்களை நல்வழியில் செலுத்த இறைவன் திருவுளம் கொள்கிறார்.

அந்த வரிசையில் யோக மாயா ஸ்ரீ புவனேஸ்வரி பீடத்தின் பீடாதிபதி பரமஹம்ச ஸ்ரீமத் பரத்வாஜ் சுவாமிகளின் அருட்கொடையாக அன்னை புவனேஸ்வரி அனுப்பி வைத்திருக்கிறாள்.

உலகெங்கும் அவரது ஆன்மிக நற்பணிகள் பரவி வருகின்றன. இவர் செய்யும் பூஜைகளைக் காண்கிறவர், பக்தி வெள்ளத்தில் திளைக்கின்றனர். தேவலோகத்தில் இருப்பதுபோல் உணருகின்றனர்.

மனிதகுலம் நல்லபடி நிம்மதியாக, அமைதியாக சண்டை சச்சரவின்றி சுபிட்சமாக வாழ வேண்டுமென்ற நோக்கத்துடன் அனைத்து பூஜைகளும் நடைபெறுகின்றன.

பிறவிக்கடலைக் கடந்து பேரின்ப பெருவாழ்வு பெற்றிடவே அனைவருக்கும் புரியும் வண்ணம் ஆன்மிக நூல்களை எழுதியும், சொற்பொழிவுகளை ஆற்றியும் இவர் அறத்தொண்டாற்றி வருகிறார்.

சம்சாரக்கடலில் தத்தளிக்கும் மக்களுக்கு ஒரு தோணியாக மரக்கட்டையாக இருந்து உதவிட தன்னைதன் வாழ்க்கையே அர்ப்பணித்துக் கொண்டு முழுமூச்சுடன் அயராது, சோராது, வந்தோர் துயரம் துடைப்பதனையே தன் தலையாய கடமையாக நடத்தி வருகிறார்.

**இறைவன் அருளிய வரப்பிரசாதம்**

யோக மாயா புவனேஸ்வரி பீடத்தின் மூலமாக காட்டப்படும் நல்வழிகள் அனைத்தும் இறைவன் உலகோர்க்கு அளித்திருக்கும் அறிய வாய்ப்புகளாகும்.

பரமஹம்ச ஸ்ரீமத் பரத்வாஜ் சுவாமிகள் மூலமாக அளித்திருக்கும் இந்த வரப்பிரசாதத்தை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

பட்டம் பதவி வேண்டும், சொத்து சுகம் வேண்டும் வேலை வேண்டும் திருமணம் நடக்க வேண்டும். சந்தான பாக்கியம் வேண்டும். ரோகம் போக வேண்டும். வீடு, நிலம், மாளிகை வேண்டும் வாகன வசதி வேண்டும். வழக்கு தீர வேண்டும். பதவி உயர்வு வேண்டும் என்று பலகோரிக்கைகளுடன் பல ஆசைகளுடனே பலரும் ஸ்ரீ யோக மாயா புவனேஸ்வரி பீடம் வருகிறார்கள்.

## இறைவன் அனுப்பிய அருளாளர்

அளவற்ற கருணையால் இறைவனே நம்மீது அன்பால் அனுப்பிய அருளாளராக ஸ்ரீபரத்வாஜ் சுவாமிகள் தம் தியானத்தால், ஜெபங்களால், பூஜைகளால் அபிஷேக ஆராதனைகளால் விசேட வேள்விகளால் புவனேஸ்வரி பீடத்திற்கு வந்தோர் தம் துன்பங்களை அம்பிகை ஸ்ரீ யோக மாய புவனேஸ்வரி அருள் கொண்டு தீர்த்து வைக்கிறார்.

உலகில் உள்ளோர் யாவரும் உய்வதற்காக ஓயாமல் ஒழியாமல், மனம் தளராமல் சோராமல் அறப்பணிகளை சுவாமிகள் தொடர்ந்து தொய்விலாது செய்து வருகிறார்.

கோடி கோடியாக அம்பிக்கையின் திருநாமங்களை உச்சரித்து பூஜைகளைத் தொடர்ந்து நித்யம் பக்தி பூர்வமாகச் செய்து வருவதன் காரணமாகவே அன்னை புவனேஸ்வரியின் பேரருளை முழுதுமாக பெற்று விளங்குகிறார் ஸ்ரீ பரத்வாஜ் சுவாமிகள்

இங்கு வந்து குறைகளைச் சொல்பவர்களின் குறை எதுவாயினும் நிவர்த்தி செய்து வைக்கிறார் சுவாமிகள்.

இறையருளின் துணை இருக்குமானால் மரணப் பிடியிலிருந்தும் தப்பலாம். அதற்கு உதாரணமாக சில ஆண்டுகளுக்குமுன் அம்பத்தூர் பரத்வாஜ் ஆசிரமத்தில் நவராத்திரி விழா நடந்துக் கொண்டிருந்த வேளையில், ஏழாம் நாள் நிகழ்ச்சி நடைபெற இருந்த ஆசிரமத் தோட்டத்தில் அதற்கான ஏற்பாடுகளை கவனித்துக் கொண்டிருந்தார் பரமஹம்ஸ பரத்வாஜ் சுவாமிகள்.

கஜ பூஜைக்காக வரவழைக்கப்பட்டிருந்த யானை ஒன்று அருகிலிருந்த புல், வாழை ஆகியவற்றை தின்றுக் கொண்டிருந்தது. பாகன் ஆழ்ந்த நித்திரையில் இருந்தான். ஸ்ரீமத் பரமஹம்ஸ பரத்வாஜ் சுவாமிகளுக்கும் யானைக்கும் இடையே 50 அடி தூரமே இருந்த நிலையில் திடீரென சோதனை ஏற்பட்டது. யானை காதுகளையும் துதிக்கையையும் வேகமாக ஆட்டிக்கொண்டு பாய்ந்து சுவாமிகளை நோக்கி ஓடி வந்ததது. அதை கண்டவர் தடுக்க முடியாது திகைப்படைந்தனர். செய்வதறியாமல் அலறினார்கள்.

சுவாமிகளோ வேறெந்த நினைவுமில்லாமல் தேவியின் திருநாமங்களை சொல்லிய வணண்மிருந்தார். தன் திருவடிகளில் நறுமண மலர்களைத் தூவியும், தன்புகழ் மற்றும் ஜெபதபம் செய்தும், ஆத்மார்த்தமாக வணங்கித் துதித்து வரும் தம் அன்பு மகனை யானை தாக்குவதைப் பார்த்து அம்பிகை சும்மா இருப்பாளோ? கண நேரம் தான். யானை காலை மண்டியிட்டு தும்பிக்கையை தூக்கி சுவாமிகளை ஆசிர்வதித்தது. கால்களை பின் வாங்கி திரும்பி நடந்த சென்றது. இதைக் கண்ட பக்தர்கள் திகைத்தனர். அம்பிகையின் பேரருளைப் புகழ்ந்தனர். இந்த மகான் பலரைக் காக்க வேண்டுமென்ற பிறவி எடுத்தவரன்றோ?

அனுபவம் பேசியது;

ஒரு முதிர்ந்த பெண்மணி அழகம்மை கூறுகிறார்.

நான் காஞ்சியிலிருந்து வந்துள்ளேன். எனக்கு நான்கு மகன்கள் அனைவருக்கும் திருமணம் செய்து வைத்து விட்டு நான், என் கணவருடன் தனியே இருந்து வந்தேன். திடீரென என் கணவர் இறைவனுடன் கலந்ததும், ஒவ்வொரு மகனது வீட்டில் மாறி மாறி சில பல மாதங்கள் தங்கி வந்தேன்.

தற்போது ஒரு சுமை உண்டாகியது எனது இரண்டாவது மகன் என்னுடன் இருக்க வேண்டிய நிலை. என் மருமகள் இவனிடம் சண்டை போட்டுக் கொண்டு அவளுடைய பிறந்த வீட்டுக்குப் போய்விட்டாள்.

கணவன் தான் மனைவியை விரட்டுவான். ஆனால் என் மருமகள் மீது சற்றும் தவறில்லை. தவறு என் மகனிடம் தான் இருந்தது. சிறிது காலமாக இவன் செய்து கொண்டிருக்கும் வேலையை சரிவரச் செய்யாமல், அடிக்கடி லீவு போட்டு சினிமாவிற்கு கதை எழுதுவதாகச் சொல்லிக் கொண்டு சென்னைக்கு சென்று பலரை, சந்தித்து வந்தான். மனைவியின் நகைகளை பல பிரபலங்களை சந்தித்து பேசும் வகையில் விற்றுத் தீர்த்து விட்டான். பல கெட்ட பழக்கங்களும் இவனை பற்றிக் கொண்டு விட்டன. எந்த பெண் தான் இதனைப் பொறுப்பாள்?

நீங்கள் திருந்தி வேலைக்கு ஒழுங்காக செல்லும் வரை நான் திரும்பமாட்டேன் என்று இரண்டு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு போய்விட்டாள்.

பெற்ற தாய் நான் எப்படி விட முடியும். வயதான காலத்தில் தனியாக என்னாலும் வேலை செய்ய முடியவில்லை. முன்பு வேலை செய்த கம்பெனியிலிருந்து விலக்கி விட்டனர். இவன் சுற்றித்திரிந்தபோது இவனது சென்னை நண்பன்

ஒருவன் ஸ்ரீ பரத்வாஜ் ஆசிரமத்தைப் பற்றியும் ஸ்ரீ பரத்வாஜ் சுவாமிகளின் மகிமை பற்றியும் கூறி என் மகனை அவரை தரிசித்து வருமாறு கூறினான்.

இவனும் உடனே என்னை அழைத்துக் கொண்டு ஆசிரமம் வந்து சுவாமிகளை நமஸ்கரித்து விவரங்களைச் சொல்லி வருந்தினான். சுவாமிகள் அவனிடம் ஒரு பஸ்மம் பொட்டலத்தை தந்து தினமும் சிறிது உண்டு, சிறிது நெற்றியில் இட்டுக்கொண்டு அவர் தரும் மந்திரத்தை சொல்லச் சொல்லி ஒரு மந்திரத் தாளையும் தந்தார்.

பின்னர் என்னிடம் இதைக் கொண்டு போய் உங்கள் மருமகளிடம் கொடுத்து இந்தக் குங்குமத்தை தினம் அம்பாளை நினைத்து நெற்றியில் வைத்துக் கொண்டு இந்த ஸ்லோகத்தை 27 முறை படித்து வரச் சொல்லுங்கள் என்று ஒரு தாளில் ஒரு ஸ்லோகத்தை எழுதித்தந்து ஒரு குங்கும பாக்கெட்டும் தந்தருளினார்.

என் மருமகளிடம் சுவாமிகள் கூறியதை சொல்லி மந்திரத்தாளையும் குங்குமத்தையும் கொடுத்தேன். இவனும் சுவாமிகள் சொல்லிய வண்ணம் செய்து வந்தான். மருமகளும் அதுபோல் செய்து வந்தாள்.

அம்பாளின் அருளினாலும், சுவாமிகளின் வாக்குப்படியும் கைமேற்பலன் கண்டோம். இரண்டே வாரங்களில் ஒரு பெரிய கம்ப்யூட்டர் கம்பெனியில் என் மகனுக்கு நல்ல சம்பளத்தில் ஒரு வேலை கிடைத்தது. என் மருமகளும் வீட்டிற்குத் திரும்பி வந்துவிட்டாள்.

ஸ்ரீ புவனேஸ்வரி அருளால் இவர்களுக்கு புனர்வாழ்வு கிடைத்தது. சுவாமிகளிடம் நன்றி கூறிட இவர்களையும்ம் பேரன்களையும் அழைத்து வந்துள்ளேன்.

ஆசிரமத்தில் அன்னதான திட்டம் ஒன்று சிறப்பாக செய்யப்பட்டு வருகிறது. இறந்த என் கணவரின் நினைவு நாளில் அன்னதானம் அவர் பெயரில் செய்திட ரூ.5000/—செலுத்தினேன். வருடாவருடம் அவரது திதி நாள் அன்று அன்னதானம் செய்து அதன் பிரசாதம் எனக்கு வந்துவிடும் என்றும் அறிந்து திருப்தி அடைந்தேன். என்று சொல்லி முடித்த அந்தத் தாயின் கண்களில் நீர் நிரம்பித் ததும்பியதை தன் முந்தானையால் துடைத்தாள் அந்த முதியவள். ஆசிரமம் வருவீர் ஆனந்தம் கொள்வீர்.

சுவாமிகளை தரிசிக்க வேண்டிய முகவரி

**ஸ்ரீ யோகமாய புவனேஸ்வரி பீடம்**

ஸ்ரீ பரத்வாஜ் ஆசிரமம், ரெட்ஹில்ஸ் ரோடு, கங்கை நகர், கள்ளிக்குப்பம், அம்பத்தூர், சென்னை — 600 053. போன்: 044—2686 0777 செல்: 98846 77555

**தரிசிக்க வேண்டிய நேரம்**
**காலை 10 மணி முதல் பகல் 2 மணி வரை.**

# ஜோதிடவியலில் நவாம்சம் கணிக்கும் முறை



**என்.கே.சேகர்** D.A., DHA., DVS., DNS., DBS.,
செல்: 99429 84163

ஜோதிடவியல் மூலம் ஒருவரது ஜனன கால ஜாதகம் அடிப்படையில் பொதுவான பலன்களை தெரிந்துக் கொள்வதற்கு இராசி சக்கரம் முக்கியம் என்பது எல்லாருக்கும் தெரிந்த ஒன்று. ஆனால், துள்ளியமான பலன்களை தெரிந்துக் கொள்ள வேண்டும் என்றால், அதற்கு நவாம்சம் சக்கரம் என்கிற ஒன்று மிகவும் முக்கியமானதாகும் என்று சொல்லப்படுகிறது என்பதால் அத்தகைய சிறப்பு பெற்ற நவாம்சம் சக்கரம் பற்றி இங்கு காண்போம்.

நவாம்சம் என்றால் ஒன்பது பங்கில் ஒரு கூறு அல்லது ஒன்பதில் ஒரு பகுதி என்று பொருள். அதாவது, நவம் என்றால் ஒன்பது என்றும், அம்சம் என்றால் கூறு அல்லது பகுதி என்றும் விளக்கம் சொல்லப்படுகிறது. இதன்மூலம் நவாம்சம் என்றால் ஒன்பதில் ஒருபகுதி என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல தெளிவாக விளங்குகிறது.

வானமண்டலத்தை 12 பகுதிகளாக பிரித்து, அதற்கு இராசிமண்டலம் என பெயரிட்டு அந்த இராசி மண்டலத்தில் உள்ள 12 இராசி வீடுகளும் தனித்தனியான பெயரை சிறப்பாக வைத்து, எந்த இராசி வீட்டில் எந்த எந்த கிரகம் இருக்கிறது. அந்த கிரகத்தினால் என்ன என்ன பலன்கள் ஏற்படும் என்பதை தெரிந்துக் கொள்ள உதவுவதே இராசி சக்கரம் ஆகும்.

ஆனால், ஒவ்வொரு இராசியையும் 9 பகுதிகளாக பிரித்து அதில் எத்தனையாவது பகுதியில் கிரகம் இருக்கிறது என்பதை கணக்கிட்டு பலன்களை மிகவும் துள்ளியமாக தெரிந்துக் கொள்ள உதவுவதே நவாம்சம் சக்கரம் ஆகும்.

ஓர் இராசியை ஒன்பது பகுதிகளாக பிரிக்கும் போது அந்த ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு நட்சத்திர பாதமாக அமையும் அதாவது, ஒரு குறிப்பிட்ட கிரகம் அல்லது இலக்கினம் நிற்கும் நட்சத்திர பாதமானது நட்சத்திர வரிசையில் உள்ள முதல் நட்சத்திரமான அஸ்வினி நட்சத்திரம் ஒன்றாம் பாதம் முதல் எண்ணும்போது எத்தனையாவது பாதமாக வருகிறதோ அந்த எண்ணிக்கையை பன்னிரண்டால் வகுக்க வரும் மீதியை மேஷம் இராசியை முதலாகக் கொண்டு கணக்கிட்டு எண்ணும்போது எந்த இராசி வருகின்றதோ அந்த இராசியே அந்த கிரகம் அல்லது இலக்கினம் ஆகியவற்றின் நவாம்சம் ஆக கொள்ள வேண்டும். பாதம் எண்ணிக்கையை பன்னிரண்டால் வகுக்கும் போது மீதி ஜீரோ (0) வந்தால் அதனை 12ஆம் பாதமாக எடுத்துகொள்ள வேண்டும்.

இவ்வாறாக ஒவ்வொரு கிரகத்திற்கும் அந்தக்கிரகம் இருக்கும் இராசியின் நட்சத்திர பாதம் கணக்கிட்டு, அந்த எண்ணிக்கையின் அடிப்படையில் நவாம்சம் சக்கரத்தில் வரும் இராசியில் அந்த கிரகத்தை எழுதி, அதற்கேற்ப பலன்களை துள்ளியமாக தெரிந்துகொள்ளலாம் என்பது தெளிவாக விளங்குகிறது.

# ஜோதிட கேள்விகளுக்கு விடை காணும் ஜோதிட முத்துக்கள்



ஜோதிட ரத்னா
**பி.ராஜராஜன்** M.Com., M.A., (Astro)
cell: 94436 02265

28

**847. புதன் ஓரையில் செய்ய தக்கவை எவை?**

தந்தி அனுப்ப, பரீட்சை எழுத, வக்கில் பார்க்க, கலைத்தொழில் ஜோதிடம் விஞ்ஞான ஆராய்ச்சி எழுத்துவேலைக்கு உகந்தது படம், சித்திரம், தையல் வேலை, தாய்மாமன் பற்றி பேச, கல்விக்கு கட்டக் கலைஞர், இன்ஜீனியர், பாட்டுஇசைக்க, சங்கீதம், இசைபயிலஇ கலைபயில, கடித தொடர்பு ஜோதிட ஆராய்ச்சியில் ஈடுபடுதல், போட்டி பந்தயங்களில் பங்கு கொள்ளுதல், பொருள்கள் வாங்குதல், புதிய கணக்கு தொடங்குதல், தரகு புரோக்கர்கள் வேலை செய்தல்.

**848. நட்சத்திரங்களுக்கு உண்டான ஜோதிட பழமொழிகள் யாவை?**

பரணி தரணி ஆளும்
மகம் ஜெகம் ஆளும்
கேட்டை கோட்டை கட்டும்
அவிட்டம் தவிட்டு பானையில் பொன்
மூலத்தார் வந்தால் காலற்றுப்போகும்.
ஆண் மூலம் அரசாளும்
பெண்மூலம் நீர் மூலம்
அஸ்தம் கை வைத்த இடம் பஸ்பம்
பூராடம் நூல் ஆடாது
திங்கள் பயணம் திரும்ப பயணம்

**849. பெண்களால் திதிகளில் ருதுவான பலன் யாது?**

1. பிரதமை — கன்னியாயிருப்பாள்
2. துதியை — சுகவதி
3. திருதியை — தனவதி
4. சதுர்த்தி — பொருளழிவு
5. பஞ்சமி — புத்திரவதி
6. சஷ்டி — தரித்திரி
7. சப்தமி — புத்திரவிருத்தி
8. அஷ்டமி — புத்திர மரணம்
9. நவமி — துக்கமுடையவள்
10. தசமி — தர்ம குணம் உடையவள்
11. ஏகாதசி — கணவர் மீது பிரியம்
12. துவாதசி — நோயாளி
13. திரியோதசி — கோபக்காரி
14. அமாவாசை — ஒழுக்கம் கெட்டவள்
15. பௌர்ணமி — புத்திரர் உண்டு.

**850. கிரகங்கள் எந்த இராசியில் சமபலன் பெறுகிறது.**

மேஷத்தில் — சந்திரன் சுக்கிரன்
ரிஷபத்தில் — செவ்வாய்
மிதுனத்தில் — சூரியன்
கடகத்தில் — சூரியன்
சிம்மத்தில் — இல்லை
கன்னியில் — சூரியன்
துலாமில் — சந்திரன் செவ்வாய்
விருச்சிகத்தில் — புதன் சுக்கிரன்
தனுசுவில் — சந்திரன் புதன் சனி
மகரத்தில் — சந்திரன் புதன்
கும்பத்தில் — சந்திரன் செவ்வாய் புதன் குரு
மீனத்தில் — சந்திரன் சனி

**851. முத்து பற்றியவை எவை?**

1. கிரக எண் — 2
2. ஆளும் கிரகம் — சந்திரன்
3. இராசிக்கல் — முத்து
4. வடமொழிப்பெயர் — மோதி
5. தன்மை — குளிர்ச்சி
6. விரல் — மோதிரவிரல் நடுவிரல்
7. கிழமை — திங்கள்
8. உலோகம் — வெள்ளி
9. மாற்றுகல் — சந்திர காந்த கல்

**852. அதிர்வுக்கும் ஜோதிடத்திற்கு உண்டான தொடர்பு என்ன?**

வானில் கிரகங்கள் கதிர்வீச்சால் கிரகங்கள் சஞ்சாரம் செய்கின்றன. அந்த கதிர்வீச்சுகள் புவியில் உள்ள அனைத்து ஜீவராசிகளும் பல வகையான செயல்பாடு பெறுகின்றன. அதன் செயல்பாட்டை தெரிவிப்பதே ஜோதிடம் ஆகும்.

**853. கௌரி பஞ்சாங்கத்தில் நவகிரகங்களின் பலன் என்ன?**

சூரியன் — உத்தியோகம்
சந்திரன் — அமுதம்
செவ்வாய் — ரோகம்
புதன் — இலாபம்
குரு — தனம்
சுக்கிரன் — சுகம்
சனி — சோரம்
இராகு — விஷம் (இராகு காலம்)

**854. திதிகளுக்கு உரிய தத்துவம் எவை?**

நந்தா திதிகள் — நீர் தத்துவம்
பதிரா திதிகள் — நில தத்துவம்
ஜெய திதிகள் — நெருப்பு தத்துவம்

ரிக்தாதிதிகள் — வாயு தத்துவம்
பூர்ணாதிகள் — ஆகாய தத்துவம்

**855. கோட்சார பலன் என்பது என்ன?**

கோசாரம் என்றால் கோள்+ சஞ்சாரம் என்பது தான் கோள்சாரம் என்று ஆகி கோசாரம் என்று மருவியுள்ளது. கோள் என்பது கிரகம் சஞ்சாரம் நிலைக்கொண்டு பலன்கள் நிர்ணயம் செய்வதே கோசார பலன் என்று கூறப்படுகிறது.

**856. நட்சத்திரம் என்ற சொல்லுக்கு பொருள் யாது?**

நட்சத்திரம் என்ற சொல் நக்ஸ் + ஷேத்திரம் நக்ஸ் என்பது வானத்தையும் ஷேத்திரம் இடத்தையும் குறிக்கும் எனவே நட்சத்திரம் என்பது வானத்தில் வானத்தினை ஓர் இடம் என பொருள் தருகிறது.

**857. கிரகங்கள் வீட்டில் எந்த இடத்தில் ஆட்சி செய்கின்றன?**

சூரியன் — பூஜை அறை
சந்திரன் — கிணறு தண்ணீர் தொடர்பு இடங்கள்
செவ்வாய் — சமையல் அறை
புதன் — விளையாடும் இடம்
குரு — உக்கிரான அறை
சுக்கிரன் — படுக்கை அறை
சனி — குப்பை கொட்டும் இடம்

**858. கிரகங்களுக்கு உரிய பருவ காலம் எவை?**

இளவேனில் காலம் — சுக்கிரன்
முதுவேனில் காலம் — சூரியன்
கார்காலம் — சந்திரன்
இலைஉதிர்காலம் — புதன்
முன்பனிக்காலம் — குரு
பின்பனிக்காலம் — சனி

**859. சிறந்த இராசி, நட்சத்திரம் எது?**

சிறந்த இராசி ரிஷபராசி சிறந்த நட்சத்திரம் ரோகிணி

**860. கிரகங்களுக்கு எங்கு பலம் அதிகம்?**

பகை வீட்டைக்காட்டிலும் சமம் வீட்டில் பலம் அதிகம்.
சமம் வீட்டை காட்டிலும் நட்பு வீட்டில் பலம் அதிகம்.
நட்பு வீட்டை காட்டிலும் ஆட்சி வீட்டில் பலம் அதிகம்.
ஆட்சி வீட்டை காட்டிலும் மூலதிரிகோண வீட்டில் பலம் அதிகம்
மூலதிரிகோண வீட்டைகாட்டிலும் உச்ச வீட்டில் பலம் அதிகம் .

**861. குரு பார்வை இராசியின் பலன்கள் என்ன?**

ரிஷபம் துலாம் மகரம், ஆகி இராசி இலக்கினங்களுக்கு குருப்பார்வை விசேஷம் இல்லை.

மிதுனம் கன்னி கும்பம் குருபார்வை சுமாராரனது.

தனுசு மீனம் மேஷம் கடகம் சிம்மம் ஆகியவற்றுக்குப் குருபார்வை மிகவும் விசேஷமானது.

**862. எவர் தாழ்ந்த தொழிலைச் செய்வார்?**

ஒருவரின் ஜாதகத்தில் எட்டாம் வீட்டு அதிபதி பத்தாம் வீட்டில் இருந்தால் அவர் தாழ்ந்த தொழிலைச் செய்வார்.

**863. தந்தையைப் பாதிக்கும் ஜாதகம் எது?**

ஒருவர் ஜாதகத்தில் 9ஆம் இடத்தில் பாபர்கள் கூடியிருந்தால் தந்தையின் நிலைப் பாதிக்கப்படும்.

**864. ஒரு தலைமுறை என்பது எவ்வளவு?**


ஜோதிட சாஸ்திரத்தில் ஒரு தலை முறை எனக் குறிப்பிடுவார்கள். ஒரு தலை முறை என்பது 30 வருடத்தைக் குறிக்கும்.

**865. எந்த நாளில் கல்வி பயில கூடாது?**

பிரதமை அஷ்டமி திதிக்கு உரிய நாள்களில் படிப்பைத் தொடங்க வேண்டாம். கல்வித் தொடர்புடைய வேலைகளையும் செய்யக்கூடாது.

**தொடரும்...**

## "சூட்சும" ஜோதிடர் Dr.G.பட்டாபிராமன்





அவர்கள் தமிழகமெங்கும் பத்து விதமான ஜோதிட சூட்சும பயிற்சிகளை பல்வேறு நகரங்களில், நூற்றுக்கும் மேற்பட்ட பயிற்சிகளை அளித்து, பயிற்சி பெற்ற நூற்றுக்கணக்கான ஜோதிடர்களால் சிறந்த ஜோதிட பயிற்சியாளர் என்ற பாராட்டை பெற்றவர். கடந்த 2.9.2015 அன்று தனது 67வது பிறந்த நாள் கண்ட அவரை மேலும் பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகிறோம்.

## திருமத்தடை நீக்குதல், குழந்தைப்பேறு இல்லாமை போக்கும்

# ஸ்ரீ மரகதாம்பிகை சமேத மார்க்கசகாயேஸ்வரர்

ஒரு தேசத்தை ஆள்கிறவன் தன் மக்களின் தேவைகள் குறித்தும், தன் மண்ணின் செழுமை குறித்தும், நீர் நிலைகள் குறித்தும், படைபலம் குறித்தும் எந்த அளவுக்கு அறிந்து வைத்திருக்கிறானோ, அதேபோல் அடுத்தவர்களின் தேசத்தைப் பற்றியும் முழுவதுமாக அறிந்து வைத்திருக்கவேண்டியது அவசியம். அந்தத் தேசத்தின் தலைவன் ஆள்—அம்பு சேனையுடன் தன் நாட்டுக்குள் புகுந்து தாக்குதல் தொடுத்து, தேசத்தையும் செல்வங்களையும் பெண்களையும் கையகப்படுத்திக்கொண்டால் என்ன செய்வது என்கிற யோசனையில் முன்ஜாக்கிரதையாக இருப்பவனே உண்மையான அரசன்.

கூடவே, மற்ற தேசங்களில் என்னவெல்லாம் முக்கியமானவை என்று கருதப்படுகின்றனவோ, எதுவெல்லாம் சிறப்பானவையாகப் போற்றப்படுகின்றனவோ, அவை நம் நாட்டுக்கும் வந்தால் நன்றாக இருக்குமே என்றும், அந்தத் தேசத்தை நாம் ஆட்சி செய்தால் சிறப்பும் பெருமையும் இன்னும் சேருமே என்றும் நினைத்தார்கள் மன்னர் பெருமக்கள்.

அப்படித்தான், நடுநாடு என்று சொல்லப்படும் தேசத்தை சோழ மன்னன் ஒருவன் படையெடுத்து வென்றான். மலைகளும் பச்சைப்பசேல் வயல்களுமாக இருந்த அந்தத் தேசத்தில் மழைக்கும் பஞ்சமில்லை; வெயிலுக்கும் குறைவில்லை. பாறைகள் கொண்ட மலைகளும் இருந்தன; மரம் செடி—கொடிகளுடனான மலைகளும் இருந்தன. சேர தேசம், சோழ நாடு, பாண்டிய தேசம் என்று சொல்வதுபோல, விழுப்புரம், திருவண்ணாமலை, திருக்கோவிலூர் முதலான பகுதிகளை நடுநாடு என்று சொல்வார்கள். அந்தக் காலத்தில், அந்தப் பக்கம் ஆரணியையும் வேலூரையும் பார்த்து வியந்த மன்னர்கள் உண்டு.

முனிவர்களாலும் ஞானிகளாலும் போற்றிக் கொண்டாடப்பட்ட, தபஸ் செய்வதற்கு உகந்த அழகிய வனமாகத் திகழ்ந்த ஆரணிக்கு வந்து, அங்கே சில காலம் தங்கி, தவம் செய்த முனிவர் பெருமக்கள் பலர்.

சோழ தேசத்தை ஆட்சி செய்த மன்னன், நடுநாட்டையும் கைப்பற்றி ஆட்சி செய்து வந்தான். ஆரணி மற்றும் அதைச் சுற்றியுள்ள வனப்பகுதியைக் கண்டு, அங்கே சூழ்ந்திருந்த அமைதியை உள்வாங்கித் திளைத்தான். ‘இந்த இடம் மிகவும் சாந்நித்தியமான இடம். இங்கே முனிவர்கள் பலர், கடும் தவம் செய்திருக்கிறார்கள். சிவகணங்கள் அரண் போல் இந்த இடத்தைக் காத்து, சிவனருளை நாம் பெறுவதற்கு பேருதவி செய்து வருகின்றன’ என்று அமைச்சர் பெருமக்களும் அந்தணர்களும் சொல்ல மகிழ்ந்து போனான் மன்னன்.

‘அப்படியென்றால், இங்கே அருமையானதொரு சிவாலயத்தைக் கட்டுங்கள். நம் தேசத்து மக்கள் எங்கெல்லாம் செல்கிறார்களோ, நம் வாழ்க்கைப் பயணம் எங்கெல்லாம் செல்கிறதோ, அங்கெல்லாம் நம் வழித் துணையாக சிவனார் வரட்டும். வழியில் ஏதும் சிக்கல்களோ பிரச்சினைகளோ வராமல் இருக்கவும், சரியான வழி எது என்று நமக்குக் காட்டவும் அந்தத் தென்னாடுடைய ஈசன் அருள் புரியட்டும்!’ என்று மன்னன் மனத்துள் வேண்டிக்கொண்டு உத்தரவிட்டான்.

அதன்படி, அந்த வனப்பகுதியின் ஓரிடத்தில், சுபயோக சுபதினமான ஒரு முகூர்த்த நாளில் பூமி பூஜை போடப்பட்டது. அஸ்திவாரம் தோண்டப்பட்டது. கற்கள் இறக்கப்பட்டன. சிற்பிகள் வந்திறங்கினார்கள். மளமளவென அங்கே கோயில் எழும்பியது.



நல்வழிகாட்டும் இறைவன் குடிகொண்டிருக்கிறான் என்பதால், நல்ல விஷயங்களைத் தந்தருளும் ஈசன் வீற்றிருக்கிறான் என்பதால், இந்தக் கோயிலில் குடிகொண்டிருக்கும் இறைவனுக்கு ஸ்ரீமார்க்க சகாயேஸ்வரர் எனத் திருநாமம் சூட்டப்பட்டது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ளது

திருவண்ணாமலையில் இருந்து சுமார் 62 கி.மீ தொலைவில் உள்ளது ஆரணி. பட்டுக்குப் பெயர் பெற்ற இந்த ஊரில் இருந்து வேலூர் செல்லும் வழியில், சுமார் 8 கி.மீ. தொலைவில் உள்ளது அக்ராபாளையம். இந்த ஊரின் மையத்தில், அற்புதமாகக் கோயில் கொண்டிருக்கிறார் ஸ்ரீமார்க்க சகாயேஸ்வரர். அம்பாளின் திருநாமம்—ஸ்ரீமரகதாம்பிகை. அவளின் கண்களில் அப்படியொரு மரகத ஒளி மின்னுவதை உணர்ந்து சிலிர்த்தபடி ஆலயத்தை வலம் வந்தால், நம் கண்ணில் நீர் ததும்பித் திரையிடும். ஒருகாலத்தில் மிகப் பிரமாண்டமாக இருந்த கோயில், இன்றைக்குப் பிராகார வலம் வரமுடியாதபடி, முள்ளும் புதரும் முளைத்துக் கிடப்பது கொடுமை.

திருவண்ணாமலையில், ஸ்ரீஅருணாசலேஸ்வரர் கோயிலில் திருக்கார்த்திகை தீபத் திருவிழா நடைபெறத் துவங்கிவிட்டால் வேலூர், இராணிப்பேட்டை, ஆற்காடு எனப் பல ஊர்களில் இருந்து மாட்டு வண்டி கட்டிக்கொண்டு புறப்படும் பக்தர்கள், வழியில் உள்ள தலங்களைத் தரிசித்தபடியே திருவண்ணாமலை நோக்கிச் செல்வார்களாம்.

அப்படிச் செல்கிறபோது, ஆரணியை அடுத்த அக்ராபாளையம் சிவாலயத்துக்கும் வந்து, அன்றிரவு அங்கேயே தங்கி, மறுநாள்தான் கிளம்பிச் செல்வார்களாம். அப்போது, ஸ்ரீமார்க்க சகாயேஸ்வரருக்குச் சிறப்பு பூஜைகள் செய்து, ருத்ரம் சொல்லி வழிபாடுகள் நடைபெறும். பிறகு, விடிய விடிய அன்னதானம் நடைபெறும். அதையடுத்து, அந்த பக்தர்கள் திருவண்ணாமலை நோக்கிப் புறப்பட்டுச் செல்வார்கள்.

காலப்போக்கில், கோயிலும் கோயிலுக்குச் செல்லும் வழியும் உருமாறிப் போனதுதான் துயரம். மெள்ள மெள்ள வழிபாடுகளும் குறைந்து, பூஜைகளும் நின்று, திருவீதியுலாக்களும் இல்லாமல் போய்விட்டது என வருத்தத்துடன் தெரிவிக்கின்றனர் ஊர்மக்கள். நமக்கான வாழ்க்கைப் பாதையைத் தந்தருளும் சிவனாரின் ஆலயம், சிதைந்தும் புதைந்தும் கிடக்கலாமா? வாழ்க்கைப் பயணத்துக்கு வழித்துணையாக வந்தருளும் ஈசனின் கோயில் இடிந்தும் இருள் படர்ந்தும் இருப்பது முறையா?

தகதகக்கும் கண்களைக் கொண்ட கருணை நாயகி ஸ்ரீமரகதாம்பிகை, நம் தாயைப் போலப் பரிவு காட்டுபவள் ஆயிற்றே! அவள் பசியை ஆற்றும் வகையில் நைவேத்தியமும், அவளின் சிரசில் நறுமணம் கமழ, பூக்களும் இருக்கவேண்டும்தானே! நல்லநாள் பெரியநாள் என்றால், புதிதாக உடுத்திக் கொண்டால்தானே அந்தத் தாயின் மனம் சந்தோஷம் கொள்ளும்! அதற்கு, சிவ—சக்தியின் அடியவர்களாகிய நாம், நம்மால் முடிவதைச் செய்தால்தானே நமக்கும் சிறப்பு; கோயிலுக்கும் மலர்ச்சி! பல வருடங்களாகக் கும்பாபிஷேகமோ திருப்பணியோ காணாமல், சிறப்பு அபிஷேகங்களோ விழாக்களோ இல்லாமல் இருக்கும் ஸ்ரீமார்க்க சகாயேஸ்வரர் கோயில், பழையபடி திருப்பணிகள் நடந்து, கும்பாபிஷேகமும் விமரிசையாக நடைபெற, நாம் ஒவ்வொருவரும் நம் பங்கைச் செலுத்துவோம்.

ஊர் கூடி இழுத்தால்தான் தேர் நகரும். அதேபோல், திருப்பணிக்கு சிவனடியார்களும் அன்பர்களுமாகச் சேர்ந்து கரம் நீட்டுவோம்; அந்தக் கயிலைநாதனின் பேரருளையும் ஸ்ரீமரகதாம்பிகையின் பெருங் கருணையையும் வரமாகப் பெறுவோம்!

**கோயிலின் சிறப்பு:** பொதுவாகவே கோயிலின் வாசற்படி கிழக்கு நோக்கி அமைந்து இருக்கும். ஆனால் பரிகார தளங்களில் மட்டும் கோயிலின் வாசற்படி தெற்கு நோக்கி அமைந்து இருக்கும்.இக்கோயிலின் வாசற்படி தெற்கு நோக்கி அமைந்து பரிகாரதலமாக விளங்குகின்றது.குறிப்பாக நீண்ட நாட்களாக திருமண தடை , குழந்தை பேறு இல்லாமை போன்றவற்றிற்கு இத்தலம் சிறந்த பரிகார தலமாக விளங்குகின்றது.

நமக்கான வாழ்க்கைப் பாதையைக் காட்டி, வழிக்குத் துணையாகவும் இருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீமார்க்க சகாயேஸ்வரர் கோயிலில் வழிபட்டு பயன்பெற்றோர் ஏராளம்.

## நன்கொடை

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பது பழமொழி என்பதைக் விட அதை ஒரு வாழ்வியல் தத்துவமாய் கருதிட வேண்டும். ஆலய வழிபாட்டுக்கு செல்ல இயலாதவர்கள் கூட தூரத்தே இருந்து கோபுரத்தை வணங்கிச் செல்வதை இன்றைக்கும் காண முடியும்.

இத்திருப்பணிக்கு தங்களால் இயன்ற பொருளாகவோ / பணமாகவோ நன்கொடை செய்ய விரும்புவோர் கீழ்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்; அல்லது அதே முகவரிக்கு நன்கொடையை அனுப்பலாம்.

**ஸ்ரீ மார்கசகாயேஸ்வரர் அறகட்டளை,**
அக்ராபாளையம், ஆரணி வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம்.
செல் : 9842342963

(அல்லது)

**"SRI MARGASAGAYAESWARAR TRUST"**
**ACCOUNT NO : 33726147672**

BANK : STATE BANK OF INDIA

BRANCH : SEVOOR

IFSC CODE : SBIN0008113


குருவருள் ஜோதிடம்
No.1 ஜோதிடத் திறனாய்வு மாத இதழ்
அக்டோபர் 2015
ஸ்ரீ குரு: 7 அருள்: 5 மன்மத ஸ்ரீ புரட்டாசி - ஐப்பசி
ரூ.30/-
இப்போது விற்பனையில்
அப்பாவின் தொழிலை தப்பாமல் செய்ய வைக்கும் கிரக நிலைகள்
சஷ்டியாம்சம் தரும் பலன்கள்
பக்தியும் காமமும் பகிர்ந்துக் கொண்ட வாழ்க்கை!
பற்றுத் துறந்த வாழ்க்கைக்கு பாதை அமைத்திடுமா?
உறுதியான பலன் உரைக்க அறுதியிடும்
புலிப்பாணி ஜோதிடம் மூலநூல் இரகசியங்கள்-600
(இது ஓர் அரிய அனுபவ ஆராய்ச்சி தொடர்)